1326

# ஜகன்மோகினி

ஆசிரியை
வை.மு.கோதைநாயகி அம்மாள்

OFFICE OF THE REGISTRAR ... DEC 1938 MADRAS

## புத்தகத்தைப் படித்துப் படத்தைப் பாருங்கள்!

## அனாதைப் பெண்

டாக்கி நாவலின் புதிய பதிப்பு

டாக்கீயிலிருந்து 35 முக்கியமான படங்களை உயர்ந்த ஆர்ட் பேபரில் பலவித வர்ணங்களில் அழகாக அச்சிட்டுச் சேர்த்துள்ளோம்.

**விலை ரூபா 1-4 தான்**

உடனே முன்பணமனுப்பி, தபாற்செலவின்றிப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஆகஸ்டு 1938

ஜீவியச் சுழல்
அல்லது
சிரிய ஒழுக்கம் (தொடர்ச்சி)

அணா 2

# மகாலெக்ஷ்மி ஸ்டுடியோஸாரின் மூன்று சிருஷ்டிகள்!

## “இன்பசாகரன்”

(தமிழ்)

ஸ்ரீமதி. எம். ஆர். சந்தானலெக்ஷ்மி, நவாப்
ராஜமாணிக்கம், அவரது கூட்டத்தினரும் நடிப்பது
டைரக்ஷன், ஜி. பட்டு அய்யர்

## “பிரேம்சாகர்”

(ஹிந்தி)

நடிகர்கள்.
மிஸ். ராம்பியாரி, கோகிலா,
இந்துபாலா, பானர்ஜீ, ஹஸன்தீன்.

**ஸ்டுடியோ:—மோஷன் பிக்சர்ஸ்**

ஒய். வி. ராவ், வித்வான் சீனிவாஸன், அரங்கநாயகி முதலியோர்கள் தோன்றும்

## “ஸ்வர்ணலதா”

(தமிழ்)

**டைரக்ஷன்: ஒய். வி. ராவ்.**

**ஸ்டுடியோ:—நியுடோன்.**

பரவசப்படுத்தும் பாடல்கள்
ஆனந்தமூட்டும் சம்பாஷணைகள்
சிறந்த படப்பிடிப்பு

அற்புதமான ஸீன்கள்
ருசிமிகுந்த கதை
ஒலிப்பதிவு

இத்தனையும் எங்கள் படங்களில் பொருந்தியிருக்கும். கண்டு களியுங்கள்.

---

**மகாலெக்ஷ்மி ஸ்டுடியோஸ்**

ராயப்பேட்டை :: :: சென்னை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 DEC 1938
MADRAS

தென்னாட்டு மக்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்த,
சமூகப் புரட்சியை உண்டாக்கிய மஹானின்

# திவ்விய திருத் தமிழ்ப் படம்
## திரைக்குத் தயார்

வைஷ்ணவ மத ஸ்தாபகரான ஆசாரியார், உடையவர் என்ற திருநாமம் தரித்த மஹாத்மா, சமூக சம்பிரதாயங்களை மீறித் தீண்டாமையை ஒழித்து, ரகசியமான மூலமந்திரத்தை மஹாஜனங்களுக்கு வெளிப்படுத்தி, ஆசாரப் புரட்சியை எல்லோரும் ஸ்தம்பிக்கும்படிச் செய்து, வைஷ்ணவத்தை ஸ்தாபித்த பெரியோரின் வாழ்க்கைச் சரிதத்தை அலங்காரமாக சித்தரித்துக் காட்டும் படம்.

# ஸ்ரீ ராமானுஜர்

(என்ற உடையவரின் திவ்விய சரித்திரம்)

கதை, வசனம்: வ. ரா. பாட்டுகள்: பாரதிதாசன்.

ஸ்ரீமான் சங்கு சுப்ரமண்யம்
,, ந. ராமரத்னம்
ஸ்ரீமதி மதுரை சீதாலக்ஷ்மி

முதலிய தேசத்தொண்டர்கள் தோன்றும் முதல் புனிதக் காக்ஷி!

இம்மாதத்தில் உங்களூர் தியேட்டர்களில் கண்டானந்தியுங்கள்.

---

## எஸ்ஸெல் பிலிம் கம்பெனி

எழும்பூர். :: :: மதராஸ்.

# வெற்றிமிகு 3வது வாரம்

சென்னை

# பாரகன் டாக்கிஸில்

## 23-7-38 முதல்

---

# * பக்த மீரா *

---

இத்துடன்

## "ஷோக் சுந்தரம் கிராம விஜயம்"

என்னும் காமிக் படம்

**ஒய். வி. ராவ்** டைரக்ஷன்

**சிந்தாமணி பிக்சர்ஸ்** தயாரிப்பு

---

எதிர்பாருங்கள்!

## எங்கள் அடுத்த சமூகப் படம்

# சமூகப் பாபிகள்

(தமிழிலும், தெலுங்கிலும்)

**ஒய். வி. ராவின் டைரக்ஷன்**

---

விவரங்களுக்கு :—

சிந்தாமணி பிக்சர்ஸ், லிமிடெட்,

116, ராயப்பேட்டை ஹைரோடு,

சென்னை.

தந்தி : காமதேனு. போன் : 8331.

# அனாதைப் பெண்

ஒப்பற்ற பெருமையுடன்
விளங்குகிறாள்

**3**வது வாரம்
மதுரை சிடி சினிமா
தஞ்சை மீனாக்ஷி டாக்கிஸ்
இன்னும்
கரூர் வரதராஜா டாக்கீஸ்
தாராபுரம் வஸந்தா டாக்கீஸ்
காஞ்சீவரம் கண்ணன் டாக்கீஸ்
பொன்மலை எஸ். ஐ. ஆர். சினிமா
சிதம்பரம்நடராஜாடாக்கீஸிலும்
காக்ஷி அளித்து
வருகிறாள்.

உங்கள் ஊருக்கு
?
வருகிறாள்

நடிகர்கள்.
எம். கே. ராதா
டி. ஏ. சுந்தராம்பாள்
பி. யு. சின்னப்பா
எல். நாராயணராவ்
கொத்தமங்கலம் சுப்ரமண்யம்
முதலியோர்.
பாடல்களை
ஓடியன் ரிகார்டுகளில்
கேளுங்கள்

விவரங்களுக்கு எழுதவும்:

## ஜுபிடர் பிக்சர்ஸ் லிமிடெட்
## திருப்பூர்

பக்தர்களே!

உங்களது நீண்டகால விருப்பத்தைப் பூர்த்திசெய்ய

**29-7-38 முதல்**

சென்னை,

# கிரௌன் டாக்கீஸிலும்

மற்றும் பல இடங்களிலும் வெளிவருகிறேன் நான்.



என்னை......

# "விஷ்ணு லீலா"

என்ற பிரம்மாண்டமான தமிழ்ப் பேசும் படத்தில் காணலாம்

**ராஜா சாண்டோ**

டைரக்ஷன்

**ஆர்ஸ் கிராமபோன்**

அண்டு

**டாக்கீஸ் தயாரிப்பு**

தஞ்சை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, புதுச்சேரி ஜில்லாக்களுக்கு உரிமை பெற்றவர்கள்:

**எம். கே. என். அண்ட் சன்ஸ்**

ராயபுரம், சென்னை

விஷ்ணு லீலா பாடல்களை 'கொலம்பியா' பிளேட்டில் எதிர்பாருங்கள்

ஸ்ரீராமஜெயம்

# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.


| | | |
|---|---|---|
| மலர் 15 | பகுதான்ய ௵ ஆடி ௴<br>ஆகஸ்டு 1938 | இதழ் 8 |


## திருமால் துதி

மதங்கமழ மால்யானை மாளப் பொருத
பதங்கமழுந் தண்டுளவோய் பார். 1

கடிக்கமலை கேள்வன் கதநாகங் காத்த
அடித்துணையை நெஞ்சே யடை. 2

அடைந்தார் துயரொழிக்கும் அச்சுதனை வேலை
கடைந்தானை நன்மனமே காண். 3

உலகெலா நின்றுலவும் உத்தமனை நின்பால்
நிலவ நினை மனனே நின்று. 4

நின்றுந் திரிந்தும் நிகழ்கின்ற மெய்ப்பொருளும்
ஒன்றும் அவனருளில் ஓர்ந்து. 5

— ஸ்ரீ வீரராகவ கவி.

183025

# காங்கிரஸ் சர்க்கார் சேவை

## ஒரு வருஷத்திய பலன்

---

காங்கிரஸ் மந்திரிகள் அதிகாரப் பொறுப்பேற்று ஜூலை 14-ந் தேதியோடு ஒரு வருஷமாகிவிட்டது. அதனால், நமது மாகாண மக்கள் அடைந்த பலன் என்ன?

இந்திய அரசியலமைப்பைத் தகர்ப்பதே காங்கிரஸின் நோக்கமானால் பதவி ஏற்றதனால் இந்த நோக்கம் எப்படி ஈடேறிற்று என்று கேட்கலாம். காங்கிரஸ் பதவி ஏற்றது சுதந்திர இயக்கத்தை வலுப்படுத்துவதற்குத்தான் என்பதைச் சென்னை காங்கிரஸ் மந்திரி சபை, சட்டசபைத் தீர்மானங்கள் மூலம் அறிவித்துவிட்டது.

பிரஜா பிரதிநிதித்துவ சபை கூட்டி அந்தச் சபையினால் தயார் செய்யப்பட்ட அரசியலமைப்பை ஸ்தாபிக்க வேண்டுமென்றும், காங்கிரஸ் பதவி ஏற்றதிலிருந்து அரசியல் தகர்ப்புக் கொள்கையைக் கைவிட்டுவிட்டதென்று நினைக்கலாகாது என்றும் தீர்மானம் இரு சட்டசபைகளிலும் நிறைவேறியது.

### சமஷ்டி எதிர்ப்பு

1937 ஆகஸ்டு 31-ந் தேதி பிரஜாப் பிரதிநிதித்துவ சபைத் தீர்மானம் நிறைவேறியது. காங்கிரஸின் கொள்கையை விளக்கி பிரதம மந்திரி அசெம்பிளியில் தெளிவாகப் பேசினார். 1938 பிப்ரவரி முதல் தேதியன்று சமஷ்டி திட்டத்தை எதிர்த்துத் தீர்மானம் இரு சட்டசபைகளிலும் நிறைவேறியது. சமஷ்டி திட்டத்தால் தேசத்தின் ஒற்றுமை குலைந்துவிடும் என்றும், மாகாண சர்க்கார்களையும் தேசியத் தலைவர்களையும் கலந்துகொண்டு மத்திய சர்க்காரை நடத்த ஒரு தற்காலிக அரசியலமைப்பு தயாரிக்கவேண்டும் என்றும் தீர்மானம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறது.

### செலவில் சிக்கனம்

சர்க்கார் செலவு இந்தத் தேசமக்கள் தாங்கமுடியாததாயிருக்கிறது என்று காங்கிரஸ் முறையிட்டு வந்திருக்கிறது. கராச்சி திட்டத்தை ஒட்டி காங்கிரஸ் மந்திரிகள் அதிகாரத்திற்கு வந்தவுடன் தங்கள் சம்பளத்தை 500 ரூபாயாகக் குறைத்துக்கொண்டுவிட்டனர். பார்லிமெண்டரி காரியதரிசிகளுக்குச் சம்பளம் 250 ரூபாய்தான். மந்திரிகள் சுற்றுப்பிரயாணம் செய்கையில் ரயிலில் முதல் வகுப்பு வண்டி ரிசர்வ் செய்துகொண்டு போகலாகாது. சர்க்கார் செலவில் சொந்த வேலையாட்களை மந்திரிகள் அழைத்துச்செல்லலாகாது. பிரயாணத்தில் ஒரு ஊரில் அதிக நாள் தங்கும்படி நேரிட்டால் அதற்குப் படிப்பணம் பெறலாகாது. தாங்களாக ஏற்படுத்திக்

600 008

கொண்ட இவ்வளவு கட்டுப்பாடுகளுக்கிடையே மந்திரிகள் வேலை செய்து வருகின்றனர்.

## மதுவிலக்கு

சேலத்தில் மதுவிலக்கு 1937 அக்டோபர் முதல் தேதி யன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருஷம் அக்டோபர் முதல் தேதியிலிருந்து சித்தூர் கடப்பை ஜில்லாக்களில் மதுவிலக்கு அமுலுக்கு வரும். இந்தச் சீர்திருத்தத்தால், சேலத்தைப் பொறுத்தமட்டில் வருஷம் 26 லட்ச ரூபாயும், சித்தூர் கடப்பை ஜில்லாக்களால் இந்த வருஷம் பாக்கி மாதங்களில் 8 லட்ச ரூபாயும் சர்க்கார் வருமானம் குறைகிறது.

## கிராம தண்ணீர் திட்டம்

ஒவ்வொரு கிராமத்திற்கும் பரிசுத்தமான தண்ணீர் சப்ளை செய்ய ஒரு திட்டம் தயார் செய்திருக்கின்றனர். இதற்காக இந்த வருஷம் 15 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கின்றனர். இதில் 5 லட்ச ரூபாய் இந்த வருஷமே செலவு செய்யப்படும். சர்க்கார் காடுகளில் மேய்ச்சல் வரி பாதி குறைக்கப்பட்டது. இதனால் சர்க்கார் வருமானத்தில் மூன்று லட்சத்து சொச்ச ரூபாய் குறைந்துவிடுகிறது கிராமங்களுக்கு ரேடியோ செட்டுகள் வாங்கிக் கொடுத்திருக்கின்றனர்.

## ஹரிஜன அபிவிருத்தி

சென்னை சர்க்கார் ஹரிஜனங்களுக்கு சிரத்தையுடன் தொண்டுபுரிந்து வந்திருக்கின்றனர். சென்னை மந்திரி சபையில் ஒரு ஹரிஜன மந்திரியோடு ஒரு ஹரிஜன காரியதரிசியுமிருப்பது சென்னை சர்க்கார் ஹரிஜன முன்னேற்றத்தில் காட்டும் சிரத்தைக்குப் போதிய சான்றாகும். ஹரிஜனக் கல்வி, பொருளாதார அபிவிருத்தி, தண்ணீர் வசதி முதலியவற்றிற்காக சென்னை சர்க்கார் இந்த வருஷம் 11¼ லட்ச ரூபாய் செலவு செய்வார்கள். ஹரிஜன நன்மைக்காக இவ்வளவு பணம் இதுவரையில் எந்தச் சர்க்காரும் இந்த மாகாணத்தில் செலவு செய்ததில்லை.

## பாசன வசதிகள்

நீர்ப்பாசன வசதிகள் அபிவிருத்திக்கு 83.41 லட்ச ரூபாய் இந்த வருஷம் செலவு செய்யப்போகின்றனர். பைகாரா, மேட்டூர் மின்சார சக்தி மாகாணமெங்கும் பிரயோசனப்படுவதற்குச் சர்க்கார் ஏற்பாடு செய்தும் வருகின்றனர். மின்சார பம்புகளால் ராயல சீமையில்பூமியிலிருந்து ஜலம் எடுப்பதுபற்றி ஆராய்ச்சி நடந்துவருகிறது. துங்கபத்ரா திட்டத்தைப் பற்றி சென்னை, மைசூர், ஹைதராபாத் சர்க்கார்கள் பேசிவருகின்றனர்

பவானி தண்ணீர் திட்டத்தைப்பற்றிச் சென்னை சர்க்கார் யோசனை செய்து வருகின்றனர்.

### உத்தியோகஸ்தர் சம்பளம்

1937 அக்டோபர் முதல் தேதிக்குப் பிறகு சர்க்கார் உத்தியோகத்திற்கு வந்தவர்கள் சம்பளத்தில் 5 சதத்திலிருந்து 30 சதம் வரையில், சம்பளத்தின் அளவிற்குத் தகுந்தாற்போல் குறைக்க திட்டம் செய்திருக்கின்றனர். இந்த ஏற்பாடு 100 ரூபாய்க்குக் குறைவான சம்பளம் பெறுகிறவர்களைப் பாதிக்காது. இந்தச் சம்பள வெட்டினால் இந்த வருஷம் 14,000 ரூபாய் சர்க்காருக்கு லாபம். இந்தத் திட்டம் பூராவும் அமுலுக்கு வந்தால், இறுதியில் சர்க்கார் நிர்வாகச் செலவில் 16 லட்ச ரூபாய் குறையலாம்.

### மலையேற்றம் நின்றது

சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் கௌரவ வைத்தியர்களை நியமிப்பதனால், இந்த வருஷம் 4,000 ரூபாய் மிச்சப்படும். திட்டம் பூராவும் அமுலுக்கு வந்தால், 10 லட்ச ரூபாய் செலவு குறையலாம். காங்கிரஸ் பதவிக்கு வந்த பிறகு சர்க்கார் காரியாலயம் உதகமண்டலத்திற்கு கோடைகாலத்தில் மாற்றப்படுவது நின்றது. இதனால், சர்க்காருக்கு வருஷம் 50,000 ரூபாய் மிச்சம். சிறைச்சாலைகளில் கைதிகள் தண்டனை காலம் முடிவதற்குள் விடுதலை செய்யப்பட்டதால் சர்க்கார் செலவில் 50 ஆயிரம் குறைந்து விட்டது.

### கல்வி சீர்திருத்தம்

சென்னை சர்க்கார் கல்வி விஷயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி விட்டனர். ஸ்கூல் பைனல் வகுப்பு வரையில், ஆங்கிலம் தவிர மற்ற பாடங்களைத் தாய்ப் பாஷையில் கற்பிக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றனர். இவ்வளவு புரட்சிகரமான மாறுதலை இதுவரையில் யாரும் செய்ததில்லை. சென்னை மாகாண மக்கள் எதிர்காலத்தில் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் தக்க பங்கு எடுத்துக்கொள்ள உதவும் ஹிந்துஸ்தானி பாஷையை 125 பள்ளிக்கூடங்களில் கற்பிக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். தொழிலை அடிப்படையாகக்கொண்ட வார்தா கல்வி திட்டத்தைப் பரீட்சார்த்தமாக சில இடங்களில் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர சர்க்கார் ஏற்பாடு செய்துவருகின்றனர்.

### தொழிலாளர் நிலை

சென்னையில் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டதிலிருந்து தொழிலாளர்-முதலாளி தகராறுகள் அதிகமாயிருந்து வந்திருக்கின்றன. அநேகமாக எல்லாத்

தகராறுகளையும் சென்னை சர்க்கார் தலையிட்டுத் தீர்த்து வைத்திருக்கின்றனர். மதுரையில் முதலாளிகள்மீது 144-வது பிரிவு தடையுத்தரவு பிரயோகித்து அவர்களைப் பணியவைத்ததைத் தொழிலாளர் உலகம் என்றும் மறக்கமுடியாது. தொழிலாளர் நிலைமையை நன்கு உணர்ந்த ஒருவர், தொழில் மந்திரியாயிருப்பது நிலைமையைச் சமாளிக்க லகுவாயிருக்கிறது.

## நீலன் சிலை நீக்கம்

1857-ம் வருஷ சுதந்திர யுத்தத்தை அடக்கி, அட்டூழியங்கள் செய்த நீலனின் சிலை, மவுண்டுரோடிலிருந்து மியூஸியத்திற்கு மாற்றப்பட்டது. இதைப்பற்றிப் பார்லிமெண்டில் கேள்வி எழுந்தபொழுது இவ்விஷயத்தில் மாகாண சர்க்காருக்குப் பூரண அதிகாரம் இருக்கிறது என்பதை இந்தியா மந்திரியே ஒப்புக்கொண்டுவிட்டார். இந்தச் சிலை விஷயத்தில் சென்னை சர்க்கார் தீரமாக நடந்துகொண்டது எதிரிகளுக்கு வியப்பை ஏற்படுத்திவிட்டது.

## உத்தியோகஸ்தர் தொடர்பு

காங்கிரஸ் ஆட்சியின் முக்கியபலன் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குப் பொதுமக்களிடம் ஏற்பட்டுள்ள அந்நியோன்ய பாவம். உத்தியோகஸ்தர்களை நம்முடைய எதிரிகளாகப் பாவிக்கலாகாது என்பதைப் பிரதம மந்திரி பன்முறை வற்புறுத்திப் பேசினர். ஜனங்களும் உத்தியோகஸ்தர்களுடன் நேச பாவத்துடன் நடந்து கொள்கிறார்கள். தேச மக்கள் மதிப்பதை உத்தியோகஸ்தர்கள் சிறுமைப்படுத்த மந்திரிகள் இடம் தருவதில்லை. கோதாவரி ஜில்லாவில் தேசீயக் கொடியைத் தாழ்த்திய ஒரு வெள்ளை அதிகாரி, தன் கையாலேயே அந்தக் கொடியை உயர்த்தும்படிச் செய்தது மந்திரிகள் தேசமதிப்பில் எவ்வளவு கருத்தா யிருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. ஜில்லா உத்தியோகஸ்தர்கள் தங்கள் சுற்றுப்பிரயாண திட்டத்தை அந்தந்த ஜில்லா சட்டசபை மெம்பர்களுக்கு அறிவிக்கவேண்டும் என்று ஏற்பாடு செய்திருப்பதால், சர்க்காருக்கும் ஜனப்பிரதிநிதிகளுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படும்.

## லஞ்சத்திற்கு எதிர்ப்பு

சர்க்கார் இலாக்காக்களில் லஞ்சப் பேய் தாண்டவமாடலாகாது என்பதில் சர்க்கார் கவலை கொண்டிருக்கிறார்கள் என்பதைத் திருநெல்வேலி போலீஸார்மீது பஸ்காரர்கள் கூறிய புகார் பற்றிச் சர்க்கார் பிறப்பித்த உத்தரவு நிரூபிக்கிறது. யாராவது ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர்மீது குற்றம் சாட்டப்பட்டால், அதற்கு ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டெண்ட்தான் ஜவாப்தாரி என்று சர்க்கார் விதி ஏற்படுத்திவிட்டனர். ஒரு உத்தி

யோகஸ்தர்மீது பல பேர் லஞ்சக் குற்றம் சாட்டினால், அவரை விசாரணையின்றிப் பதவியிலிருந்து நீக்கிவிடலாம் என்று சர்க்கார் தீர்மானித்திருப்பதால், உத்தியோகஸ்தர்கள் தோரணையே இனி மாறிவிடும்.

## கைத்தறிக்கு உதவி

மாகாணத்தில் கைநெசவுக்காரர்கள் நிலை பரிதாபமாயிருக்கிறது. மில் துணிப்போட்டியினால் அவர்கள் பிழைப்பிற்கே ஆபத்து ஏற்பட்டுவிட்டது. இவர்களுக்கு உதவி செய்வதற்காக, சர்க்கார் துணி விற்பனைச் சட்டம் செய்திருக்கிறார்கள். இதன்படி துணி விற்பனை செய்பவர்கள் லைசென்ஸ் வாங்கவேண்டும். அயல் தேசத்துணி வியாபாரிகள் லைசென்ஸுக்குப் பணம் கொடுக்கவேண்டும். கட்டணம் சென்ற வருஷ வியாபாரத் தொகையைப் பொறுத்து விதிக்கப்படும். நில தர்க்காஸ்து கொடுக்கும் விஷயத்தில் சர்க்கார் ஒரு விதி செய்திருக்கின்றனர். எந்த இடத்திலும் 5 ஏகராவுக்கு மேல் யாருக்கும் தர்க்காஸ்து கொடுக்கலாகாது என்ற தற்காலிக உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். ஏற்கனவே வீடு இருப்பவர்களுக்கு வீடு கட்ட மனைகள் கொடுக்கலாகாது. விவசாயத்திற்கு உபயோகமில்லாத நிலங்களை விற்பனை செய்வதைச் சர்க்கார் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

## சிறைச்சாலை சீர்திருத்தம்

சிறைக் கைதிகளுக்கு மோர் கொடுப்பதுடன் காங்கிரஸ் சர்க்கார் சீர்திருத்தம் நின்றுவிடவில்லை. மிருகங்கள் செய்யும் வேலையை மனிதன் செய்யும் கொடுமை நிறுத்தப்பட்டுவிட்டது. கைதிகளுக்குச் சோப்பும், துணி துவைக்க சலவை மண்ணும் கொடுக்கப்படுகின்றன. கைதிகளின் வாழ்விலும் ஓர் சந்தோஷத்தை உண்டுபண்ண ஹாஸ்யச் சஞ்சிகைகள் படிக்க அனுமதி யளிக்கப்பட்டிருக்கிறது. கைதிகள் காங்கிரஸ் ஆட்சியில் மனிதர்களாக நடத்தப்படுகின்றனர்.

## எதிர்காலம்

ஒரு வருஷத்தில் காங்கிரஸ் சர்க்கார் தங்கள் சக்திக்கு எட்டியமட்டில் சேவை செய்திருக்கின்றனர். பண்டித ஜவஹர்லால் கூறியமாதிரி பதவி ஏற்பினால் மக்களுக்குப் புது பலம் ஏற்பட்டிருக்கிறது. சுதந்திர இயக்கமும் வலிமை பெற்றிருக்கிறது. மக்களின் மட்டற்ற ஆதரவு காங்கிரஸ் மந்திரி சபைக்கு இருக்கிறது என்பது, பிரதம மந்திரி சுற்றுப்பிரயாணத்தில் நிதர்சனமாகிவிட்டது. பொது ஜனங்களின் உற்சாகமும், ஊக்கமும் தேசாபிமானமும் குன்றாமலிருந்தால், மந்திரிகள் இன்னும் சிறப்பான தேச சேவை செய்யமுடியும்.

—" ஹிந்துஸ்தான் "

# வெளிநாட்டுச் செய்திகள்

## 1940 ஒலிம்பிக் பின்லந்தில் நடைபெறும்

1940 ஒலிம்பிக்கை நடத்த முடியாதென்று ஜப்பான் உத்தியோக முறையில் அறிவித்தவுடன், அதை நடத்துமாறு பின்லந்துக்கு அழைப்புப் போகுமென்று தெரிகிறது. பின்லந்து, நிச்சயம் ஒத்துக்கொள்ளுமென்று தெரிகிறது.

## ஏகாதிபத்தியமும் பாஸிஸமும்

"சமாதானமும் ஏகாதிபத்தியமும் ஒன்றுக்கொன்று முரணானவை. ஏகாதிபத்தியத்துக்கும் பாஸிஸத்துக்கும் நெருங்கிய உறவுண்டு. இவை இரண்டையும் அகற்ற உலகம் முயற்சிக்க வேண்டுமே ஒழிய, இரண்டில் எது பரவாயில்லை என்று சீர் தூக்கிப் பார்க்க முயற்சிக்கக் கூடாது.

உலகில் அடிமைகளாயிருந்து வரும் மக்களுக்குப் பூர்ண சுதந்திரம் கிடைக்க வேண்டுமானால் ஏகாதிபத்தியத்தை வேரறுக்க முயற்சிக்க வேண்டும்.

### பாலஸ்தீன் பிரச்னை

"இன்றைய பாலஸ்தீன் நிலைமை பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டியே. ஏகாதிபத்தியத்தினால், இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது. பல நாடுகளில் சித்திர ஹிம்சைக்கு உள்ளாகித் துரத்தியடிக்கப்படும் யூதர்களிடம் எல்லோருக்கும் அனுதாபமுண்டு. ஆனால், பாலஸ்தீன் தகராறு உண்மையிலேயே அராபியர்களின் விடுதலைப் போராட்டம் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்."

—ஜவஹர்லால் நேரு.

## இந்தியாவுக்குப் புதிய அந்தஸ்து

"மனித சமூகத்தின் விவகாரங்களில் செல்வாக்குடன் கூடிய, முதல் தரமான வல்லரசுகள் என்ற அந்தஸ்தையடையும் வரை படிப்படியாக வளர்ச்சியடைவதில் டொமினியன்களுக்குப் பிரிட்டன் உற்சாகமளித்து வந்திருக்கிறது. இக் காலத்தில் நம்முடைய ஏகாதிபத்தியக் கொள்கையின் பிரதான நோக்கங்களில் ஒன்று அதேமாதிரி உற்சாகமளிப்பதாயிருக்க வேண்டும்.

இந்தியாவும் பிரிட்டனும் பரிபூர்ணமாகப் பிரிந்து போவதற்கு அனுகூலமான நாசகால ஏற்பாடு இந்தியாவில் நடைபெறும் மகத்தான அரசியல் பரீட்சையில் ஆரம்பமா யிருப்பதாக நான் அபிப்பிராயப் படவில்லை.

மனித சமூகத்துக்கு ஏற்படக்கூடிய பேராபத்து, கீழுலகிற்கும் மேல் நாடுகளுக்குமிடையே நிறவேற்றுமை சம்பந்தமான போட்டாபோட்டியைப் பெருக்கி, பிளவைச் சிருஷ்டிப்பதுதான் என்று தோன்றுகிறது.

ஒரு காலத்தில் கீழுலகிற்கும் மேல் நாடுகளுக்கும் போர் மூளுமானால், நாகரீகம் இறுதியாக நசித்துப்போம்.

இந்த இரண்டு தரத்தினருக்குமிடையே அனுதாபமும், நல்லுணர்ச்சியும் ஏற்படவேண்டும். பிரிவினை ஏற்படாமல், தடுத்து இரு சாராரையும் ஒன்றுபடுத்தும் பாலங்களை அமைக்க வேண்டும்.

இத்தகைய பாலங்களில் மிகவும் முக்கியமானது, அரசியல் நடைமுறை வேலையில் பிரிட்டனும் இந்தியாவும் நண்பர்களாய் நடந்து கொள்வதுதான்.''

—மால்காம் மாக்டோனல்டு.

## ரஷ்யா - ஜப்பான் சண்டை?

சாங்கூபெங் என்ற மஞ்சுகோ குன்றை ஸோவியத் துருப்புகள் கைப்பற்றிக்கொண்டு, அங்கே யிருந்த ஒரு ஜப்பானிய போலீஸ் வீரனைக் கொன்றதைக் கண்டித்து, ஸோவியத் சர்க்காரிடம் ஆட்சேபனையைச் சமர்ப்பிக்குமாறு மாஸ்கோவிலுள்ள தங்கள் ஸ்தானாதிபதிக்கு ஜப்பானிய சர்க்கார் உத்தரவு அனுப்பியிருக்கின்றனர்.

இந்தச் சம்பவம் பிரமாதமாக வளரப்போகிறதா, இல்லையா என்பது ஸோவியத் மனப்பான்மையையே பொறுத்திருக்கும் என்று ஜப்பானிய வெளிநாட்டு இலாகாவைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறினர். ஸோவியத் துருப்புகள் வாபஸாக வேண்டுமென்று ஜப்பானிய - மஞ்சுகோ அதிகாரிகள் அனுப்பிய கோரிக்கைக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

மேற்கொண்டு கிடைத்த அறிக்கைகளிலிருந்து சாங்கூபெங்குக்கு இன்னும் அதிகமான ஸோவியத் துருப்புகள் வந்திருப்பதாகத் தெரிகிறது.

ஸோவியத் - கொரியா எல்லையில் டூமென் என்ற நதி கடலில் சங்கமாகுமிடத்திற்கு, ஸோவியத் பீரங்கிப் படைகள் வந்திருப்பதாகத் தெரிகிறது.

* * *

ஸோவியத் - மஞ்சுகோ எல்லையிலுள்ள சாங்கூபெங் குன்றிலிருந்து ஸோவியத் துருப்புகள் வாபஸாகாவிடில், ஜப்பான் போர் தொடுக்கப் போவதாக ஜப்பானிய ஸ்தானாதிபதி ஷிகெமிட்ஸூ, ரஷ்ய வெளிநாட்டு மந்திரி ஸ்ரீ. லித்வினைவைக் கண்டு பேசியபோது பயமுறுத்தினாராம்.

தகாரறு பிரதேசம் ஸோவியத் ரஷ்யாவைச் சேர்ந்ததுதான் என்று லித்வினவ் சாதித்தார். 1869-ல் ஏற்பட்ட சாங்குன் உடன்படிக்கையின் பகுதியான ஒரு படத்தை அவர் ஆதாரமாகக் காட்டினாராம்.

# உள்நாட்டுச் செய்திகள்

## ஸ்திரீகளுக்கு
## தனி மாகாணம் வேண்டுமாம்!

ஸ்திரீகள், ஆண்களோடு சம உரிமை கேட்பதே ஒரு காலத்தில் ஆச்சரியமாயிருந்தது. இப்போது அவர்கள் மற்றொரு வகையில் இறங்கியிருக்கிறார்கள். ஆண் வாடையே இல்லாத அல்லிராணி ராஜ்யமொன்று வேண்டுமென்று கேட்கிறார்கள்.

பாரத யுவ சங்கத்தின் ஆதரவில் நடந்த ஒரு ஸ்திரீகள் பொதுக் கூட்டத்தில் ஸ்திரீகளுக்கென்று தனியாக ஒரு மாகாணம் வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

ஸ்திரீகளிடையே ஒற்றுமைக் குறைவு, பொறாமை, அதிகாரப் பேராசை முதலியவைகள் இல்லையாம். ஆண்களிடம் இவையெல்லாம் இருக்கின்றனவாம். ஆகையால், ஸ்திரீகளுக்குத் தனி மாகாணம் வேண்டுமென்று கோரப்படுகிறதாம்.

## அதிர்ஷ்டத்தின் அனர்த்தம்

அம்பாலா ஜில்லா நவுகான் கிராமத்திலிருந்து ஒரு பரிதாபகரமான செய்தி தெரியவருகிறது.

இங்கு ரூ. 15,000 பரிசு கிடைக்கப்பெற்ற ஒரு மனிதன் பரிதாபகரமாக மாண்டான்.

இம்மனிதன் பரம தரித்திரன். இங்கு ஒரு லாட்டரி நடந்தது. "உன் அதிர்ஷ்டத்தைப் பாரேன்" என ஒரு நண்பன் கூறினான். இவனும் சரியென்று லாட்டரி சீட்டு ஒன்று வாங்கினான். ரூ. 15,000 பரிசு வந்துவிட்டது!

இச்செய்தியைத் தந்திச் சேவகன் வந்து அறிவித்தானோ இல்லையோ, இவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. தலைகால் தெரியாமல் குதித்தான். களி வெறி பிடித்தது; மாண்டான்.

பணம் இவன் கைக்குக்கூட கிடைக்கவில்லை. வந்த ஆனந்தத்தில் மாண்டுபோனான்.

## ஆண் பெண் ஆன விந்தை

'இவன் என்னுடைய பேரன்' என, தான் புதிதாகக் கல்யாணம் செய்துகொண்ட மனைவியிடம் கூறினான் புருஷன்.

ஆனல், உண்மையில் பேரன் ஒரு பெண்ணவாள். இவள் அபகரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டாள்.

மனைவி நம்பினள். ஆனல் கிராமத்திற்கு வந்துள்ள இப்புதுப் பையன் விஷயமாக கிராமாதிகாரிக்குச் சந்தேகம் தட்டியது. போலீஸ் ஸ்டேஷனுக்குப் பையனை அழைத்துக்கொண்டு போய்விட்டார்.

அங்கு உடை மாற்றப்பட்டுப் பார்க்கையில், "அவன்" அவளானள்.

இவள் பெயர் பியாரி. இவள் கல்லு என்பவன் புத்திரி. சில நாளைக்கு முன் பண்டா என்ற ஊரிலுள்ள இவள் வீட்டிலிருந்து இவள் மாயமாக மறைந்தாள்.

இந்தக் கிராமத்தில் பித்ருலால் என்று இவளுக்குப் பெயர். வேஷ்டி தரித்துக்கொண்டிருந்தாள். கடைசியில் குட்டு வெளியாயிற்று.

## அசெம்ப்ளி வோட்டர்களுக்குத் துப்பாக்கிகள்

நல்ல நடத்தையுள்ள ஒவ்வொரு அசெம்ப்ளி வோட்டருக்கும், துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி கொடுப்பதென்று சர்க்கார் தீர்மானித்திருப்பதாக எல்லைப்புற பிரதமமந்திரி டாக்டர் கான்சாகிப் அ. பி. நிருபரிடம் கூறினர்.

துப்பாக்கி வைத்துக்கொள்ள அனுமதி கோரினல், டெபுடி கமிஷனர்கள் லைசென்ஸ் கொடுப்பார்கள். இது சம்பந்தமான உத்தரவுகள் சமீபத்தில் அனுப்பப்படும்.

ஏராளமாக ஆயுத லைசென்ஸ் கொடுக்கும்போது யாரும் லஞ்சம் வாங்காமல் அதிகாரிகள் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று பிரதம மந்திரி சொன்னர்.

ஆயுதங்கள் வைத்துக்கொள்வது சம்பந்தமாக விதிகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## சனதனிகளின் சண்டித்தனம்

பண்டரிபுரத்தில் விட்டோபா கோவிலுக்கு அருகிலுள்ள இரு குளங்களின் வாசலில், "ஹரி ஜனங்களும் வரலாம்" என்றுள்ள நோட்டீஸ் போர்டுகளை எடுத்துவிட வேண்டுமென்று இந்தப் புண்ணிய க்ஷேத்திரத்தில் வசிக்கும் சில சனதனிகள் (வைதீகர்கள்) முனிசிபாலிடியைக் கேட்கின்றனர்.

சனதனிகள் ஜுலை 11-ந்தேதியன்று மாலை ஒரு கூட்டம் நடத்தி, இந்த நோட்டீஸ் போர்டுகளை அகற்றி விடுவதென்று தீர்மானித்தார்கள்.

கூட்டம் முடிந்த பின் அங்கிருந்தவர்கள் ஊர்வலமாக குளத்திற்குச் சென்றனர்.

ஊர்வலத்தி லிருந்த ஒருவர் இரண்டு போர்டுகளில் ஒன்றை எடுத்துக் கொண்டிருந்தபோது, போலீஸார் ஸ்தலத்திற்கு வந்து போர்டுகள் அப்புறப்படுத்தப்படுவதைத் தடுத்ததாகத் சொல்லப்படுகிறது.

இந்தப் போர்டுகள் அகற்றப்படும்வரை, அந்த இடத்தை விட்டுச் செல்வதில்லை யென்றும் ஒரு சனாதனி பிரதிக்ஞை செய்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது.

## என்ஜின்களுக்குப் பதில் எருதுகள்

ஆயில் என்ஜின்களுக்குப் பதிலாக காளை மாடுகளை உபயோகப்படுத்தக்கூடிய முறையில் மெஸர்ஸ் பன்னாலால் குல்ஜாரி லால் புதுவிதமான நீர்ப்பாசன பம்பு ஒன்று தயாரித்திருக்கின்றனர். 90 அடி ஆழத்திலும் உள்ள தண்ணீர் எடுப்பதற்கு இதை உபயோகப்படுத்த முடியும். டில்லிக்கு 15 மைல் தூரத்தில் உள்ள டிர்க்கா என்ற கிராமத்தில் இது வெற்றிகரமாகப் பரீட்சிக்கப் பட்டிருக்கிறதாம். இது டில்லி கைத் தொழில் இலாகா சூப்பிரண்ட் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

நிமிஷத்திற்கு 50 காலன் தண்ணீர் இறைக்கும் சக்தி இதற்கு இருக்கிறதாம்.

## "சமஷ்டியை ஏற்கமாட்டோம்"

"பெடரல் அமைப்பு சம்பந்தமாக செல்வாக்குள்ள காங்கிரஸ் தலைவர்கள் யாரோ, பிரிட்டிஷ் சர்க்காருடன் பேரம் செய்து கொண்டிருப்பதாக, பிரிட்டிஷ் பத்திரிகைகளில் அடிக்கடி செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன.

'மாஞ்செஸ்டர் கார்டியனில்' ஒரு செய்தி வந்தது. அதற்கு உடனே மறுப்பு அனுப்பினேன். காங்கிரஸுக்கே தெரியாமல், பிரிட்டிஷ் சர்க்காருடன் காங்கிரஸ் தலைவர்கள் பேரம் செய்கிறார்கள் என்று ருசுப்பிக்கப்படும் வரையில், அதை நான் நம்ப முடியாது; நம்பவும் இல்லை.

மாகாண திட்டத்துக்கும் பெடரல் அமைப்புக்கும் சம்பந்தமில்லை. மாகாணங்களில் காங்கிரஸ் பதவி ஏற்றுக்கொண்டு விட்டதால், பெடரேஷனையும் ஒப்புக்கொள்ளும் என்று அர்த்தம் செய்யமுடியாது. பெடரல் அமைப்பைக் காங்கிரஸ் மீது சுமத்துவதற்குச் செய்யப்படும் முயற்சிகள் தோல்வி யடைந்துவிடு மென்பதைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை.

துரதிர்ஷ்டவசமாக வெற்றி யடைந்து விட்டால், அது காங்கிரஸை உடைத்து விடும். ஏனெனில், மனப்பூர்வமாக பெடரேஷனை எதிர்ப்பவர்கள் பேசாமல் அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? இந்தியாவின் நெருக்கடியான இந்தச் சமயத்தில், காங்கிரஸோ, காங்கிரஸின் ஒரு பகுதியோ, பலஹீனமாயிருந்தால் அது இந்திய விடுதலை லக்ஷியத்திற்குத் துரோகம் செய்ததாகுமென்றே நான் கருதுகிறேன்.

இன்று நாம் மிகவும் பலமான நிலைமையிலிருக்கிறோம். நாம் மாத்திரம் ஒற்றுமையுடன் ஒரே குரலுடன் பேசினால், நமது தேசீய கோரிக்கை பூராவையும் கொடுத்து விடும்படி பிரிட்டிஷ் சர்க்காரைக் கட்டாயப் படுத்தி விடலாம். பெடரேஷன் விஷயத்தில் நாம் கொஞ்சமாவது பலஹீனம் காட்டினாலும் கூட, அது நம் லக்ஷியத்தைப்பலஹீனப் படுத்திவிடும்; பிரிட்டிஷ் சர்க்காரைப் பலப்படுத்திவிடும்.

காங்கிரஸ் பெடரேஷனை ஏற்றுக் கொள்ளுமென்று என்னால் நினைக்க முடியவில்லை. அப்படி காங்கிரஸிலுள்ள ஒரு மெஜாரிடி பெடரேஷனை ஒப்புக்கொண்டு விட்டால், எனது பதவிப் பொறுப்புகளைக் களைந்துவிட்டு, பெடரேஷன் பூதத்தை எதிர்த்து நாடெங்கும் கடுமையான பிரசாரம் செய்யவேண்டியது என் கடமையாகு மென்று நம்புகிறேன்"

— சுபாஷ் சந்திரபோஸ்

## ஆந்திர மாகாணம்

### ராஜாஜி சமாதானம்

"ஆந்திர மாகாணம் நிறுவப்பட வேண்டுமென்றுதான் இந்தச் சர்க்கார் விரும்புகிறார்கள். இதற்கு எதிராக யாராவது சொன்னால், அவர் பொய் பேசுபவராகிறார். நீங்கள் என்னை நம்பவில்லையானால், நான் மேற்கொண்டு பேசமாட்டேன். உங்கள் முன்பு நிற்கும் நான் குற்றவாளியல்ல; நான் உங்கள் பிரதிநிதி. விரைவில் உங்கள் இஷ்டப்படி வேறு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க உங்களிடம் சக்தி யிருக்கிறது. என்னை ஒரு கண்ணியமுள்ளவன் என்று நீங்கள் நம்பினால், இந்தச் சர்க்கார் ஆந்திர மாகாண விஷயத்தைப் பகிரங்கமாக சட்ட சபைகளிலும் ஆதரித்திருக்கிறது என்று சொன்னால், நீங்கள் என்னை நம்பவேண்டும். சட்டசபைகளை மீறி இந்த சர்க்கார் ஒன்றும் செய்யமுடியாது. இத்தகைய அபகீர்த்தி வாய்ந்த காரியங்களைச் செய்ய எங்களுக்கு ஒரு கருத்தும் இல்லை. எதிர்காலத்தை மதிப்பிடும் சாமர்த்தியம் உள்ள ஒருவன் என்று என்னை நீங்கள்

நம்பினால், விரைவில் நீங்கள் ஒரு தனிப்பட்ட மாகாணத்தை அடைவீர்கள் என்றுதான் நான் உங்களுக்கு சொல்லலாம்.''

* * * * *

''ஆந்திர மாகாண பிரச்னைபற்றி இங்கிலாந்துக்கு ஒரு தூது கோஷ்டி செல்வதாக இருந்தால், நான் உங்களின் சிறந்த தூதுவனாக இருப்பேன். என்னைப் புகழ்வதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஆனால், மக்களின் சந்தேகங்களைப் போக்குவதற்காகவே சொல்கிறேன். ஆந்திரர்கள் கட்டாயம் ஒரு மாகாணத்தை அடைய வேண்டியவர்களே. ஆனால், இப்போது கஷ்டங்களைச் சிருஷ்டிக்காதீர்கள் என்று மட்டும்தான் யோசனை சொல்லுகிறேன். காங்கிரசின் பாதையில் கஷ்டங்களை ஏற்படுத்த வேறு மக்களும் இருக்கிறார்கள். இப்போது கிளர்ச்சியைவிட்டு விட வேண்டாமென்று ஆந்திரவாசிகளைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், காங்கிரசுக்கு எதிராக உள்ள ஐரோப்பியர்கள் ஏமாற்றமடைந்து விடுவார்கள். கிளர்ச்சியைக் கைவிடுவது கெட்டதாகும். ஆனால், காங்கிரஸ் எதிரிகளால் அதைப் பயன்படுத்த அநுமதிக்கலாகாதென்று மட்டும் தான் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். பிரதம மந்திரியின் கைகளைப் பலஹீனமாக்க வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

* * * *

நான் ஒரு தமிழன். நான் ஆந்திர மாகாணம் கொடுக்க விரும்பவில்லையென நீங்கள் நினைக்கிறீர்கள். பலர் அவ்விதமும் கூறுகிறார்கள். இது சுத்த பொய்.

ஆந்திராவைப் பிரிக்க உங்களைவிட நான் துடியாக இருக்கிறேன். ஆனால், அதற்குத் தாமத மேற்பட்டால், அது தவிர்க்க முடியாத தாகும். நாளைக்கே இது செய்யப்பட்டாலும் நான் சண்டை போடமாட்டேன். ஆனால், இது உடனே ஏற்பட்டால், எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கும்.

இதை ஏன் நான் கூறுகிறே னென்றால், இவ்விஷயமாக நான் பட்டதும், படாததுமாக இருப்பதாகப் பலர் கூறுவதால் தான்.''

## சீன அனாதைகளுக்குக் கதர்

சீனா - ஜப்பான் யுத்தத்தில் அனாதைகளானவர்கள் உதவிக்கு ரூ. 5,000 பெறுமான கதர் உடைகள் காங்கிரஸ் சார்பாக கல்கத்தாவிலிருந்து சீன சர்க்காருக்கு அனுப்பப்படும். இவ்வுடைகள் யாவும் அஸ்ஸாமிய ஸ்திரீகள் நூற்றவை. ஸ்ரீமதி அம்ருத கௌர் அவைகளைத் திரட்டினார்.

# ஆங்கிலக் கல்வி அவசியமா ?

## காந்திஜியின் விளக்கம்

இங்கிலீஷ் மூலமே சகல பாடங்களையும் கற்கவேண்டிய கட்டாயத்தால், தாம் கலாசாலையில்பட்ட அவஸ்தைகளை மகாத்மா காந்தி "ஹரிஜ"னில் வெகு அழகாக வர்ணித்திருக்கிறார்.

கொஞ்ச காலத்துக்குமுன் கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார், காந்திஜியின் வார்தா திட்டத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில், உயர்தரக் கல்வியை மகாத்மாஜி வெறுப்பதாகக் கூறினார். அதற்குக் காந்திஜீ எழுதிய பதிலில் தான் மேற்கண்ட தமது அனுபவத்தை விளக்கி யிருக்கிறார்.

### வியர்த்த படிப்பு எதற்கு ?

உண்மையில் தமது கருத்து என்ன என்பதை மகாத்மா பின்வருமாறு திட்டமாகக் கூறி யிருக்கிறார் :—

" (1) உலகத்திலேயே மிக உயர்தரமான கல்வியைக்கூட நான் எதிர்க்கவில்லை.

(2) அந்த உயர்தரக் கல்வியால் ராஜாங்கத்துக்குத் திட்டமான பயனுண்டு என்றால், அதற்கான செலவையும் ராஜாங்கமே பொறுத்துக் கொள்ளவேண்டும்.

(3) எந்த உயர்தரக் கல்விக்கும் பொதுஜனங்களின் வரிப் பணத்திலிருந்து சர்க்கார் செலவழிப்பதை நான் எதிர்க்கிறேன்.

(4) நமது காலேஜ்களில் ஏதோ கலைகள் போதிப்பதாகச் சொல்கிறார்களே, அவற்றில் பெரும்பாலானவையும் முற்றிலும் வியர்த்தமாகவே போவதோடு, படித்த வகுப்பாரிடம் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் உண்டாக்கி யிருக்கின்றன. மேலும், அவற்றால் நமது சிறுவர் சிறுமியரின் உடல் மன ஆரோக்கியமும் சீரழிந்துபோகிறது.

(5) அந்நிய பாஷை ஒன்றின்மூலம் இந்தியாவில் உயர்தரக் கல்வி அளிக்கப்படுவதால், நம் தேசத்தாரின் அறிவுக்கும் ஒழுக்கத்துக்கும் அளவற்ற தீங்கு புரியப்படுகிறது."

### தாய்ப் பாஷையும் ஆங்கிலமும்

இவ்வாறு தம் அபிப்பிராயங்களைத் தெளிவுப்படுத்திவிட்டு, அவற்றின் காரணங்களை விளக்குகையில், பின்வருமாறு தமது அனுபவத்தை மகாத்மாஜீ எழுதியிருக்கிறார் :—

" பன்னிரண்டு வயது வரையில், நான் பெற்ற ஞானமெல்லாம் என் தாய்ப் பாஷையான குஜராத்தி பாஷையின்மூலமே பெற்றேன். அப்போது எனக்குக் கணிதம், சரித்திரம், பூகோளம் ஆகியவற்றில் ஏதோ கொஞ்சம் தெரிந்திருந்தது. பிறகு ஹைஸ்கூலில் நுழைந்தேன். முதல் மூன்று வருஷங்களில் இன்னும் தாய்ப் பாஷையே சகல பாடங்களும் போதிக்கும் சாதனமா யிருந்தது. ஆனால், இங்கிலீஷை மாணவனின் மூளைக்குள் அடைப்பதே உபாத்தியாயரின் கடமையாயிற்று. ஆகையால், எங்கள் நேரத்தில் பாதியை இங்கிலீஷ் கற்பதிலும் அதன் அலங்கோல எழுத்துக் கூட்டல்கள், உச்சரிப்புகளை உருப்போடுவதிலும் செலவழிக்க வேண்டியதாயிற்று. இருந்தாலும், முதல் மூன்று வருஷமும் அதிகக் கஷ்டமில்லாமலே கழிந்தது.

## சர்வமும் ஆங்கில மயம்

" நான்காவது வருஷம் தொழுக்கட்டை ஆரம்பமாயிற்று. க்ஷேத்திர கணிதம், பீஜ கணிதம், ரசாயனம், வான சாஸ்திரம், தேச சரித்திரம், பூகோளம் ஆகிய சகல பாடங்களையும் இங்கிலீஷ்மூலமே கற்கவேண்டியதாயிற்று. இங்கிலீஷின் கொடுங்கோன்மை கட்டுக்கடங்காமல் போய் விட்டது. ஏனெனில், சம்ஸ்கிருதம், பாரசீகம் ஆகிய பாஷைகளைக்கூடத் தாய்ப்பாஷையின் மூலம் கற்கக் கூடாதாம்; இங்கிலீஷ் மூலமே கற்க வேண்டியதாயிற்று. வகுப்பில் எவனாவது தன் சொந்த பாஷையான குஜராத்தியில் பேசினானோ அவனுக்குத் தண்டனை கிடைத்துவிடும். தப்பு இங்கிலீஷ் பேசினால்கூட உபாத்தியாயருக்குக் கவலையில்லை. அவருக்கேன் கவலை? அவர் இங்கிலீஷே தகராறு தானே! அவர் இங்கிலீஷும் பிழையில்லாமல் இருக்கமுடியாது. ஏனெனில், மாணவருக்கு எப்படியோ அப்படியே அவருக்கும் இங்கிலீஷ் அந்நிய பாஷையே யன்றோ? இதனால் ஏற்பட்ட பலன் ஒரே குழப்பந்தான்.

## விஷயம் புரியாவிட்டாலும் படிக்க வேணும்

" அநேக விஷயங்களுக்கு எங்களுக்கு அர்த்தம் தெரியாது; என்றாலும், பையன்களாகிய நாங்கள் அவற்றை உருப்போட்டு வந்தோம். க்ஷேத்திர கணிதத்தை எங்களுக்கு விளக்குவதற்காக எங்கள் உபாத்தியாயர் இங்கிலீஷோடு போராடிக் கொண்டிருக்கும்போது, என் மூளை சுழல ஆரம்பித்துவிடும். யூக்லிட் முதல் புத்தகத்தின் 13-வது சித்தாந்தம் வரும் வரையில், க்ஷேத்திர கணிதத்தில் எனக்கு ஒன்றும் கால் தலையே புரியவில்லை. எனக்கு என் தாய்ப் பாஷையில் மிகுந்த அன்பு இருந்தும்

இன்று வரையில் 'ஜியாமெட்ரி' (க்ஷேத்திர கணிதம்) 'அல்ஜீப்ரா' (பீஜ கணிதம்) என்பனபோன்ற இங்கிலீஷ் பதங்களுக்குச் சரியான குஜராத் பதங்கள் எனக்குத் தெரியாதென்பதை நான் வாசகரிடம் ஒப்புக் கொள்ளுகிறேன்.

## தகப்பனுருக்கும் பிள்ளைக்கும் சம்பந்தமில்லை

"இங்கிலீஷ் மூலம் நான் நான்கு வருஷத்தில் கற்ற க்ஷேத்திர கணிதம், பீஜ கணிதம், அங்ககணிதம், ரசாயனம், வான சாஸ்திரம் ஆகியவற்றை, குஜராத்தி மூலம் கற்றிருந்தால், மிகச் சுலபமாக ஒரே வருஷத்தில் கற்றிருப்பேன். அந்த விஷயங்களில் இன்னும் சுலபமாகவும் தெளிவாகவும் எனக்கு ஞானம் ஏற்பட்டிருக்கும். எனக்கு ஏராளமான குஜராத்தி வார்த்தைகளும் தெரிந்திருக்கும். நான் கற்ற பாடங்களினுல் ஏற்பட்ட ஞானத்தை வீட்டிலே உபயோகித்திருப்பேன்.

"இந்த இங்கிலீஷ் என் குடும்பத்தார்க்கும் எனக்குமிடையே, கடக்க முடியாததோர் தடைச்சுவரை எழுப்பிவிட்டது. நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது என் தகப்பனுருக்குத் தெரியாது. நான் படிக்கும் பாடத்தில் அவருக்குச் சிரத்தை யுண்டாக்க நான் ஆசைப்பட்டால்கூட அது சாத்தியமல்ல. ஏனெனில், அவர் நல்ல புத்திமானேயென்ருலும், அவருக்கு ஒரு வார்த்தைகூட இங்கிலீஷ் தெரியாது.

"என் வீட்டிலேயே நான் வெகு வேகமாய் ஓர் அந்நியனுக மாறி வந்தேன். மற்றவரைவிட உயர்ந்த மனுஷ்யனுகி விட்டேன். என் உடைகள் கூடத் தலைகீழாய் மாறிவிட்டன. எனக்கு நேர்ந்த அனுபவம் ஏதோ அபூர்வமானதல்ல. பெரும்பாலோருக்கும் ஏற்பட்டிருக்கும் சர்வ சகஜமான அனுபவமே யாகும் இது.

## பொது அறிவு அளிக்காத ஆங்கிலக் கல்வி

"ஹைஸ்கூலில் படித்த முதல் மூன்று வருஷமும் எனது பொது அறிவு துளி கூட அதிகரிக்கவில்லை. சகல விஷயங்களையும் இங்கிலீஷ் மூலம் போதிப்பதற்குத் தகுதியுள்ளவர்களாகப் பையன்களைத் தயாரிப்பதற்காகவே அந்த மூன்று வருஷப் படிப்பும் நடந்தது. இங்கிலீஷ் நாகரிகம் நம்மை வெல்வதற்காகவே ஹைஸ்கூல்கள் ஏற்பட்டிருக்கின்றன. எனது ஹைஸ்கூலில் படித்த முந்நூறு பையன்கள் சம்பாதித்துக் கொண்ட ஞானமும் கூண்டிலடைக்கப்பட்ட ஞானமேயாகும். பாமர மக்களுக்கு மாற்றித் தரக்கூடிய ஞானமன்று."

# தொழிலாளர் - முதலாளி ஒற்றுமை
## காந்திஜி கூறும் சிறந்த ஏற்பாடு

"தொழிலாளர்கள் பெரும் தொகையினர். அப்படியிருந்தும் அவர்கள் முதலாளிகளின் அடிமைகள்போல இருக்கவேண்டியிருக்கிறது. முதலாளிகள் எது வேண்டுமானாலும் செய்யமுடிகிறது. 'இந்த நிலைமைக்குக் காரணம் என்ன? தொழிலாளர் தமது சக்தியை உணராததே. அவர்கள் தமது சக்தியை யுணர்ந்தால், அவர்கள் தமது கோரிக்கை இன்னதென்று அறிவித்து, முதலாளிகளைத் தொழிலாளர் பணியவைக்க முடியும். தொழிலாளரின் கோரிக்கையை முதலாளிகள் மீற முடியாது. ஒரு தொழிற்சாலையில் உலோகங்கள் (உருக்கும் இரும்பும்) எப்படி மூலதனமாக மதிக்கப்படுகிறதோ அதுபோலவே உழைப்பும் ஒரு மூலதனம்தான் என்பதைத் தொழிலாளர் உணரவேண்டும். இந்த உணர்ச்சி ஏற்பட வேண்டுமாயின், அஹிம்சையைக் கடைப்பிடித்தால்தான் ஏற்படும்.

### அஹிம்ஸையின் அவசியம்

"இவ்வுணர்ச்சி ஏற்பட்டுத் தொழிலாளர்கள் தமது சக்தியை உணர்ந்து வீட்டார்களாயின், பிறகும் அஹிம்சை அனுவசியமாய்விடாது. சக்தியை உணர்ந்தாய் விட்டதென்று அஹிம்ஸையைக் கைவிட்டு விட்டால், பிறகு தொழிலாளரும் முதலாளிகளைப்போலவே தீய முறையில் இறங்குவதாகவே ஏற்படும். முதலாளிகள் போலவே இவர்களும் "அக்கிரம சுரண்டலில்" ஈடுபடுவதாகவே ஏற்படும்.

தொழிலாளர்கள், தமது சக்தியை உணர்ந்து அஹிம்சையையும் கைக்கொண்டால் பிறகு அவர்கள், மூலதனத்துடன் ஒத்துழைத்து மூலதனத்தைச் சரியான, நியாயமான வழியில் பயன்படுத்துவதற்குச் சக்தி பெறுவார்கள்.

### தொழிலாளர் அறியவேண்டியவை

அப்போது "மூலதனம்", "உழைப்பு" இரண்டுக்கும் பரஸ்பரம் பாதகமான முரண்பாடு இருக்காது. மில்லும் மெஷின்களும் முதலாளிகள் தொழிலாளரை நசுக்குவதற்கான கருவிகள் என்று தொழிலாளர்கள் மதிக்கமாட்டார்கள். அவைகள் தமக்குச் சொந்தமான உற்பத்திக் கருவிகள் என்று மதிப்பார்கள்.

ஆகையால், தமது சொத்தைப் பாதுகாப்பதுபோலத் தொழிற்சாலைச் சொத்தையும் பத்திரமாகப் பாதுகாப்பார்கள். நேரத்தை வீணாக்கிச் சீர்கெட்ட முறையில் வேலை செய்யமாட்டார்கள். தம்மாலியன்ற மட்டில் சிரத்தையுடன் வேலை செய்வார்கள்.

## நன்மை எப்போது ஏற்படும்?

மூலதனமும், உழைப்பும் (முதலாளியும்' தொழிலாளியும்) ஒத்துழைத்து, பொருள்களை விலைக்கு வாங்குவோரின் உரிமையைக் காப்பாற்றுவார்கள்; முதலாளியும் தொழிலாளரும் பரஸ்பரம் ஒருவர் க்ஷேமத்துக்கு மற்றவர் பொறுப்பாளியாக நடந்துகொள்வார்கள். முதலாளியும் தொழிலாளரும் பரஸ்பரம் டிரஸ்டீக்களாயின், யார் உயர்ந்தவர், யார் தாழ்ந்தவர் என்ற ஏற்றத் தாழ்வுக்கு இடம் கிடையாது. இது ஒரு பரஸ்பர உறவு.

தொழிலாளரின் க்ஷேமத்தைப் பாதுகாப்பதே தமக்குப் பாதுகாப்பு என்று முதலாளி எண்ணுவார்; முதலாளியின் க்ஷேமமே தனக்கும் க்ஷேமம் என்று தொழிலாளர் எண்ணுவார்கள்.

## சிறப்பு அடைய சீரிய முறை யாது?

"நீங்கள் தேவர்களை மகிழச் செய்வீர்களாக. தேவர்கள் உங்களை மகிழ்விக்கட்டும்; இவ்வாறு பரஸ்பரம் மகிழ்வித்து நீங்கள் பரமசிரேயஸைப் பெறுவீர்களாக!" என்று பகவத் கீதை கூறுகிறது.

இந்த உலகில் தேவர்கள் என்று தனி வர்க்கம் எதுவும் கிடையாது. உற்பத்திக்கு, சக்தி யாரிடமெல்லாம் இருக்கிறதோ, யாரெல்லாம் சமூகத்தின் நன்மைக்காக அந்தச் சக்தியை உபயோகிக்கிறார்களோ அவர்களெல்லாம் தேவர்களே.

தொழிலாளிகள், முதலாளிகள் எல்லோரும் தேவர்களே."

# நூதன குறள்

செய்தற் கரிய செயலைப் புரியாக்கால்
எய்தற் கெளிதாமோ வின்பு. 1
காதல் பெருகக் கமலத் தடங்கண்ணால்
ஏதம் இயற்றும் இவள். 2
தவறின்றி யூடியதும் இன்பந் தருமே
அவரால் எனக்கின் றது. 3
வெங்கதிர் வெய்யோனை வேய்த்தோளி வேண்டினளே
திங்கள் நிலவெறிப்பத் தேய்ந்து. 4
தோன்றாத் துணையாய்த் துணையிலியா யென்ஞான்றும்
என்றாரைக் காக்கும் இறை. 5

—திரு. ராகவாசாரியர்.

## “ அனாதைப்பெண் ” காட்டப்படும் இடங்கள்

| | |
|---|---|
| மதுரை—ஸிடி ஸினிமா | 4-வது வாரம் |
| தஞ்சாவூர்—ஸ்ரீ மீனாக்ஷி டாக்கீஸ் | 3-வது வாரம் |
| காஞ்சீபுரம்—கண்ணன் டாக்கீஸ் | ,, |
| சிதம்பரம்—நடராஜா டாக்கீஸ் | ,, |
| கீழ்சாவல்பட்டி-அண்ணாமலையார் டாக்கீஸ் | 2-வது வாரம் |
| கூனூர்—நியூ ரீகால் டாக்கீஸ் | ,, |
| வேலூர்—ஆபெரா டாக்கீஸ் | ,, |
| தூத்துக்குடி—பாலஸ் டூரிங் டாக்கீஸ் | முதல் வாரம் |
| பவானி—பழனியப்ப டாக்கீஸ் | ,, |

---


# நவாப்புக்கு

## மந்திரிப் பதவியா?



இன்பசாகரனில்

**நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம்**


### சர்வதேச பிலிம் காட்சிக்கு ‘எதிர்பாராதது’

வெனிஸில் நடக்கும் சர்வதேச பிலிம் காட்சிக்கு, பிரபாத் கம்பெனியாரின் ‘எதிர்பாராதது’ என்ற படம் சிபார்சு செய்யப்பட்டிருப்பதைக் கேட்டுச் சந்தோஷமடைகிறோம்.

வெற்றி மிகுந்த 4-வது வாரம்

# பிராட்வே டாக்கீஸ்

## சங்கீத வித்துவான் எஸ். வி. சுப்பய்யா பாகவதர்

தோன்றும்

வேல் பிக்சர்ஸ்

# கம்பர்

(தமிழ் டாக்கி)

## ஜுலைமீ 23உ சனிமுதல்

தினசரி 3 காட்சிகள். மணி. 2-45; 6-15; 9-30.

---

இந்த டாக்கியில் வரும் பாட்டுகளை, 'கோலம்பியா' ரிகார்டுகளில் கேட்டு ஆனந்த மடையுங்கள்.

## 20

சுரேந்திரன் சோர்ந்து போய், வெகு நேரம் தன்னை மறந்து துக்காக்கிராந்தனாய் உட்கார்ந்திருந்தான். பிறகு அவன் கைகள் ஏதோ நான்கு வரிகளை அவன் அறியாதபடியே எழுதின. அந்தக் கடிதத்தை எடுத்துக் கொண்டு தபாலாபீஸை நோக்கிச் சென்றான். தபால் பெட்டியில் கடிதத்தைப் போடும்போதுதான் அதற்குத் தான் தலை ஒட்டாததையறிந்து ஜோபியைப் பார்க்கிறான். ஒரு அணா காசு இல்லாக் கொடுமையைக் கண்டு வருந்தி, கண்ணீர்விட்டபடியே வெளியில் வந்து விட்டான்.

"இன்று இக் கடிதத்தை யனுப்பினாலேயே போய்ச் சேருவதற்கு இன்னும் மூன்று நாட்களாகும். இன்று தவறுமாயின், தாயாரின் மனமும், அலமுவின் மனமும் எவ்விதம் துடிக்குமோ? என்னைப்பற்றி என்ன நினைப்பார்களோ" என்று நினைத்தபடியே வீதியில் தயங்கித் தயங்கி நின்று நாற்புறமும் பார்த்தான்.

இவனோடு படித்து வந்த ஒருவன் வீதியில் செல்வதைப் பார்த்ததும், அவனுடைய மனோவேகத்தின் மிகுதியினால் வெட்கத்தையும் விட்டு ஒரு அணாவைக் கடனாக வாங்கித் தபால் தலையை ஒட்டிக் கடிதத்தைப் போட்டுவிட்டான். அந்தச் சமயத்தில் எந்தவிதமான வழியும் இல்லாமல் தவிக்கும்போது ஒரு அணா கடனாகக் கிடைத்ததானது அவனுக்குப் புதையலே கிடைத்ததுபோன்ற சந்தோஷமும் மனத்திற்குத் திருப்தியும் உண்டாகியது.

அந்தச் சிநேகிதனை வாழ்த்திக்கொண்டே வழக்கம்போல் கோவிலுக்குச் சென்று பிரதக்ஷணம் செய்துகொண்டு வேணுகோபால ஸ்வாமி சன்னதியில் வரும்போது தினத்தைவிட அதிகமானக் கூட்டமிருப்பதையும், பரபரப்புடன் ஏதோ பேசுவதையும் கேட்ட சுரேந்திரன் ஸ்வாமி தரிசனத்திற்கு உள்ளே சென்றான். அப்போதுதான் நாம் முன்பு தெரிவித்தபடி நிர்மலா, தன் முறை கைங்கர்யத்தைச் செய்துவிட்டு, அங்கு ஒரு தனிகர் கொடுத்த மோதிரத்தை ஔதாசீனமாக எறிந்துவிட்டு, "இது ஒரு தூசிக்குச்

சமானம். பிச்சைக்காரர்களுக்குக் கொடுத்தாலும் அவர்கள் திருப்திப்படுவார்கள். உபயோகமுண்டு" என்று கூறிவிட்டு, விர்ரென்று போய்விட்ட சமயமாகும்.

"ஓர் தாசிப் பெண்ணின் மனேவுறுதி என்னே! அவளுடைய வைராக்கிய மொழிகளின் அழுத்தமென்ன? அடாடா! பணத்தைப் பறிப்பதில் வழி பறிக்கொள்ளேக்காரனேவிட அதிகமான பேராசையும் இரக்கமற்றத்தனமும் கொண்டு தவிக்கும் தேவடியாள் ஜாதியிலுதித்த பெண்ணுக்கா இந்த அற்புதமான குணம்! இத்தகைய அதிசயமான மனப் போக்கு! என்ன ஆச்சர்யம்!" என்று சுரேந்திரன் பிரமித்து விட்டான்.

நிர்மலா குட விளக்கு முறைக்காக வேறு விதமான அலங்காரத்திலிருந்ததால், முதலில் தெரியவில்லேயெனினும் பிறகு அன்றொரு நாள் அலமுவுடன் பேசிய பெண் இவள்தான் என்று தெரிந்துவிட்டது. அவள் சென்ற திக்கையே சிறிது நேரம் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போது பகவானுக்குக் கற்பூராரத்தி செய்யவும், ஜனங்கள் பக்திப் பெருக்கால், "என்னப்பனே! வேணுகோபாலா! தயாநிதே! ருக்மிணீரமணு!" என்று வாய் விட்டுச் சொல்லும் கர்ணும்ருதமான சப்தத்தைக் கேட்டுத் தடதட வென்று உள்ளே வந்து ஸ்வாமி தரிசனம் செய்தான்.

"கருணுநிதே! என்னப்பனே! சர்வலோக சரண்யா! சரணுகதவத்ஸலா! எத்தனே நாளேக்குத்தான் என்னே இப்படித் துன்புறுத்தப் போகிருய்? என் கஷ்டம் நிவர்ரணம் ஆகும் காலத்தை என்றுதான் காட்டப்போகிருய்? என் மதிகெட்டு தூர்த்தனென்று அறியாது அபாத்திரத்திற்கு நான் பச்சாத்தாபம் காட்டியதன் பயனுல் என் குடும்பமே சிதறுண்டு அழிந்துவிட்டதே. எனக்கு ஏன் அந்தச் சமயம் அத்தகைய தயாளகுணத்தைக் கொடுத்தாய்? பிறகு ஏன் என்னேக் காட்டிக்கொடுத்துச் சோதிக்கிருய்? போதும். என்னப்பனே! சோதித்தது போதும்.

நான் அதிகம் ஆசைப்படவில்லே. மாதம் ஒரு 15 ரூபாய் சம்பளம் கிடைக்கும்படி ஏதாவதொரு மார்க்கம் காட்டினுல் போதும். கால் வயிறு கஞ்சி காய்ச்சி நாங்கள் மூவரும் குடித்து இன்புற்றி

ருப்போம். என்னால் இந்தச் சங்கடத்தைச் சகிக்கமுடியவில்லை. என்னை இனியும் சோதித்தால், என்னுயிரை நான் மாய்த்துக் கொள்வதைவிட வேறு வழியே இல்லை. எனக்கோர் வழியைக் காட்டு.

"மனத்திலோர் தூய்மையில்லை வாயிலோ ரின்சொலில்லை
சினத்தினால் செற்றம்நோக்கித் தீவிளி விளிவன்வாளா
புனத்துழாய் மாலையானே பொன்னிசூழ் திருவரங்கா
எனக்கினிக் கதியென்சொல்லா யென்னையா ளுடையகோவே."

—திருமாலை.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோன் அணியரங்கன் என்ன முதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே."

—திருப்பாணாழ்வார்.

என்ற இரண்டு பாட்டுக்களையும் பரவசத்தினால் கண்ணீர்சோர இரு கை கூப்பியபடியே பாடித் துதித்தான். பின்னரே நேரமாகி விட்டதை யறிந்து வெளியே வந்தான். நிர்மலாவின் அபிநயத்தைப் பற்றி அங்குள்ள ஜனங்கள் கொண்டாடியும், அவளது வைராக்கிய வைர மொழிகளைப்பற்றி வியந்தும் கூறிச் செல்வதைக் கேட்ட வுடன், மீண்டும் நிர்மலாவின் மொழிகள் இவன் காதிலும் ஒலிப் பதுபோல் தோன்றிற்று.

'சே! இதென்ன பிரமை!' என்று மனத்தை வேறு வழியில் மாற்றிக்கொண்டு, வெளியில் வந்தான். "எத்தனையோ ஆபீஸு களிலும் கம்பெனிகளிலும் கடைகளிலும் கூட ஏறி இறங்கிப் பார்த் தாகிவிட்டது. என்னுடைய தீச்செயலின் மர்மம் அறியாது, 'தகப்பன் திருடியிருக்கையில் மகன்மாத்திரம் எங்ஙனம் திருடா திருக்க முடியும்? வேண்டாம்' என்று சொல்லியனுப்பும்போது பரிசுத்த ஆத்மாவாகிய என் பிதாவின் பெயருக்கு இத்தகைய ஹானியை, களங்கத்தை—அபாண்டமான இழிவை — வாங்கி வைத்துவிட்டேனே! இந்த அபவாதத்தை எப்படி மாற்றி நல்ல மார்க்கம் காட்டப் போகிறாய் கடவுளே!" என்று நினைத்துக் கொண்டே வீதியில் சென்றான்.

எங்காவது ஒரு வக்கீலின் கீழ் குமாஸ்தாவாகவோ, பெரிய மனிதர்கள் வீட்டில் மேல்பார்வை பார்க்கும் மானேஜராகவோ வேலை கிடைத்தாலும் அமர்ந்து செய்யலாம் என்று தீர்மானித்து விட்டால் பெரிய மனிதர்களின் வீட்டுத் தகவலை யறியவேண்டு மாயின், அவர்கள் வீட்டு வேலைக்காரர்கள், சமயல்காரர்கள் முதலியவர்களை விசாரித்தால் போதும். எல்லா விஷயமும் ஒரு விநாடியில் தெரிந்துகொள்ளலாம். நல்ல விஷயமாயினும் கெட்ட விஷயமாயினும், வேண்டுமென்று பகையினால் கயிறு திரிக்கும் விஷயமாயினும் ஏதோ அவர்களின் தவிர்க்கமுடியாத கடமை போலப் பரவச் செய்துவிடுவார்கள்.

இந்த ரகசியத்தை யறிந்த சுரேந்திரன் அத்தகையோர்களை விசாரித்து வரத்தொடங்கினான். அன்று கோவிலுக்குப்போய் திரும்பி வருகையில், வீதியில் 5—6 பேர்கள் கூட்டமாக விருப் பதைக் கண்டு அவனும் அங்கு சென்று நின்று கவனித்தான். அவ னுக்கு ஒன்றும் புரியவில்லை; எனினும் அவர்கள் அப்போது பேசிய வார்த்தையில், "எந்த வேலையாயின் என்ன? பிழைப்புக்கு ஒன்றும் குறைவில்லை. அதுதானே வேண்டும்" என்ற வார்த்தை சுரேந்தி ரனின் காதில் விழுந்தது. காஞ்சீபுரத்தில் கோவில் கொண்டெழுந் தருளியிருக்கும் ஸ்ரீ வரதராஜப்பெருமானைப் பக்தியுடன் தியா னித்துக்கொண்டு, 'கஞ்சி வரதப்பா!' என்று வாய் விட்டு ஒரு பக்தன் கூறியதைக் கேட்ட ஒரு பசியாண்டி 'எங்கேப்பா! என் வாயில் வாரப்பா!' என்று அலறினனும்.

அதுபோல் சுரேந்திரனின் மனமும் ஆவலால் நிறைந்து பறந் ததால், அவர்களிடம் வலுவில் தானே பேசி, "என் சார்! எங்கே பிழைக்க வழி கிடைக்கிறது. எந்த ஆபீஸில்? எனக்குக் கொஞ்சம் சொல்லுங்கள்" என்றான். இதைக் கேட்ட அவர்கள் சுரேந்திரனை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, 'என் ஐயா! வேலைக்காக அலையும் ஜாபிதாவில் சேர்ந்தவரா நீர்? எங்களுக்கு ஆபீஸுமில்லை; ஒன்று மில்லை. நாங்கள் காரி அண்டு கோ., ஏஜெண்டுகள்' என்று ஒருவன் கூறியதும் மற்றையோர் கொல்லென நகைத்தார்கள்.

சுரேந்திரனுக்கு இது ஒன்றுமே புரியாததால், மனத்திற்கு ஒரு மாதிரியாய்விட்டது. "என் சார்! நீங்கள் கூறியதும் சிரிப்

பதும் எனக்கு ஒன்றுமே புரியவில்லையே! நான் ஓர் ஏழை. பிழைக்க வழி இன்றித் திண்டாடுகிறேன். தயவு செய்து சொல்லுங்களேன்'' என்று பரிதாபமாகக் கேட்டான்.

முதல்வன் :—நீ படித்தவனா, படிக்காதவனா?

சுரேந் :—படித்தவன் என்றுதான் பேர். ஆனால், படித்தால் மட்டும் உத்தியோகம் கிடைப்பதுதான் குதிரைக் கொம்பாக இருக்கிறதே!

முதல் :—ஓஹோ! படித்தவனாயின் காரி அண்டு கோ என்றால் தெரியாதா?

சுரேந் :—ஐயா! கம்பெனிகள் பேரெல்லாம் எனக்குப் பாடமா! காரி அண்டு கோ என்பது எங்கிருக்கிறது? தயவு செய்து அந்த விலாசத்தைக் கூறிச் சற்று சிபார்சுசெய்தால் மிகவும் புண்ணியமுண்டு.

முதல் :—(கடகடவென்று நகைத்துக் கொண்டே) அடே அப்பாவி! காரி என்றால் ஆங்கிலத்தில் என்ன அர்த்தம்?

சுரேந் :—ஏதோ என்னைக் கேலி செய்கிறார் போலிருக்கிறதே. காரி என்றால் தூக்குவது என்பார்கள். கர்ப்பிணிகளுக்கும் சொல்வதுண்டு. என் கேட்கிறீர்கள்?

முதல் :—அட பயித்தியக்காரா! இன்னும் புரியவில்லையா? காரி அண்டு கோ என்றால், தூக்கும் கம்பெனி. அதாவது தானாக நடந்து போகும் சக்தியற்று உள்ளிருக்கும் சத்துப் போய்விட்ட (செத்துப் போய்விட்ட என்ற பதமே பழக்கத்திலாகிவிட்டது.) மனிதனைத் தூக்கிச் சென்று கரை ஏற்றுவது. இப்போது தெரிந்ததா? நீயும் வருகிறாயா?

சுரேந் :—(சற்றுத் திகைத்து அச்சமுற்று) என்ன! பிணந் தூக்குவதற்கா நீங்கள் இத்தனை ஒழுங்கான பெயர் வைத்து கம்பெனி என்கிறீர்கள்!

முதல் :—ஆமாம் அய்யா! ஆமாம். இதைப்போல் புனிதமான கைங்கர்யம் ஏது? ஒருவனால் முடியாது என்று விழுந்துவிட்ட

வனைத் தூக்கி உதவி புரிவது லேசா! தினம் அதிர்ஷ்டம் உண்டானல் 4, 5 ரூபாய்கள்கூட சம்பாதிக்கலாம்....

சுரேந் :—ஹா!....ராம! ராம!....நீங்கள் பிணந் தூக்கி சம்பாதிப்பதற்காக தினம் நாலைந்து பேர்கள் சாகவேண்டுமா? சாவையா நீங்கள் விரும்புகிறீர்கள். மக்கள் வாழ்வை விரும்பும் வழக்கமில்லையா?

முதல் :—அடேயப்பா! நெருப்பு என்ருலே வாய் சுட்டு விடுமா! "முடிசார்ந்த மன்னரும் முடிவிலொரு பிடிசாம்பராவது திண்ணம்" என்று பெரியோர்கள் பாடி இருக்கவில்லையா? எல்லோரும் என்ன மார்க்கண்டேயர்களா? என்னிக்குப் பிறந்தாயிற்ருே அதிலிருந்து இறப்பதும் சகஜந்தானே! ஐயா! நீ சின்ன பிள்ளையாயிருப்பதால், உனக்கு இன்னும் அஞ்ஞானம் நீங்கி வேதாந்த வைராக்கியம் பிறக்கவில்லை. நாங்கள் வேதாந்திகள். ஆகையால் எங்களுக்கு இறப்பும் பிறப்பும் ஒன்றுதான்.

சுரேந் :—ஐயா! உங்கள் வார்த்தை எனக்கு வெறும் கேலிக்கூத்தாகத் தோன்றுகிறதேயன்றி வேதாந்த வைராக்கியமாகத் தோன்றவில்லை. மக்களின் சாவைக் கோரிப் பிணந்தூக்கிச் சம்பாதித்து மகிழ வேண்டுமென்ற இழிவான ஆசையை உடைய நீங்களா வேதாந்திகள்? வைராக்யர்கள்? ஊஹூம்....

முதல் :—நாங்கள் கோராவிட்டால் ஒருவருமே சாகமாட்டார்களா? போய்யா போ! என்னமோ பேச வந்துட்டே. ஏதோ வேலை இல்லாமெ அலைகிறேன் என்று கேட்டதால் சொன்னேன். இன்று கூட ஒரு வீட்டில் மட்டை விழுந்திருக்கிறதாம். தூக்கினயானல் ஏதோ கிடைக்கும். இந்த ஒரு உத்தியோகம் மட்டுமென்று நினைக்காதே! செத்தவர்களுக்கெல்லாம் கர்மாந்திரம், சவுண்டி, வருட திதி முதலியன வரும். அவைகளிலும் நல்ல லாபம் அடிக்கலாம். நீ நல்ல சாமர்த்தியசாலியானல், குறைந்தது ஒரு நாளைக்கு மூன்று பிராமணர்த்தம் சாப்பிடலாம். நல்ல வரும்படியும் வரும். பெரிய மனுஷர்கள். உத்தியோகஸ்தர்கள் வீட்டிலோ காலை 10 மணிக்கு முன்னேயே திவசமாகிவிடும். அதை முடித்துக் கொண்டு வந்து ஒரு ஸ்பென்ஸர் ஸோடா குடித்து

விட்டு, மீண்டும் மடியாக மத்தியஸ்தமாயிருக்கும் பாதி லௌகீகம் பாதி வைதீகம் கலந்தவர்கள் வீட்டில் 12 மணிக்குள் முடித்துக் கொள்ளலாம். முழு வைதீகப் பிச்சவின் வீட்டில் மாலை மூன்று மணிகூட ஆகும். அதைப் பார்த்துக்கொண்டால் வேஷ்டிகள் ரூபாய் சாப்பாடு எல்லாம் கிடைக்கிறது. சாமர்த்தியம் உண்டானால் வாத்தியார்த்தனம் செய்யலாம்; சமயலும் செய்யலாம்; எல்லாம் பணந்தானே. என்ன சொல்றே?

சுரேந் :—அப்புறம். உங்கள் உத்தியோக முறைகளை எல்லாம் சொல்லிவிடும். பிறகு நான் சொல்கிறேன்.

முதல்:—ஓஹோ! நீ என்ன எங்களைப் பரீக்ஷிக்கப் போகிறாயோ! உத்தியோகமுறை என்ன இருக்கிறது. மனிதன் திருடியும் மோசம் செய்தும் பிழைக்கக்கூடாது. எந்த விதமான தொழில் செய்து பிழைத்தால் என்ன? பிணந்தூக்கிச் செல்லும்போதே யார் யார் வீட்டில் மேளமடிக்கிறதோ அதை ஒரு கண் பார்த்துக் கொள்வோம். ஸ்நானம் செய்துவிட்டு வந்ததும் கல்யாண வீட்டு தக்ஷிணை தேங்காய் வெற்றிலை பாக்குடன் சாப்பாடு கிடைத்தால் அதையும் ஒரு கை பார்த்துக் கொள்வோம். சில வைதீக வாத்தியார்களைக் கையில் போட்டுக்கொண்டால் போதும்.

கல்யாணத் தரகனிடம் ஜாதகக் கட்டுகள் இருப்பதுபோல், அந்தப் புரோகிதர்கள் கையில் திதிகளின் ஜாபிதா இருக்கும். அவருக்குக் கொஞ்சம் கமிஷன் கொடுத்துவிட்டால், தினம் மூன்று பிராம்மணார்த்தம் அவரே சொல்லி, ஏற்பாடு செய்து விடுவார். சரிதானு!

சுரேந் :—ஐயா! ரொம்ப சரிதான். திருடுவதுமட்டும் பாபம் என்று படித்தறிந்திருக்கும் நீர் அதைவிட பித்ரு துரோகங்கள் செய்து சிரார்த்த நஷ்டத்தை யுண்டாக்கிப் பிழைப்பது மகாபாபம் என்று படிக்கவில்லையா? சாதாரணமாக கர்மாதி காலங்களில் தானம் வாங்குவதே மகாபாபம் என்றும், அதற்குப் பரிகாரங்கள் இன்னின்ன செய்தல் வேண்டுமென்றும், சாஸ்திரத்தில் கூறியிருப்பவற்றை நீர் படிக்கவில்லையா? ஆமாம். நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருநாள் குளிர்ந்த ஜலத்தில் குளித்தால் குளிர் தெரியும்.

சதா பனிக்கட்டியிலேயே மிதப்பவனுக்குக் குளிர் எப்படித் தெரியும்? அதுபோலப் பாவத்திலேயே உழலும் உங்களுக்கு வேறு எதுவும் கண்ணுக்குத் தெரியாது. போரும் போரும். காரி அண்டு கோவும், கருமாதி சம்பாத்யமும்—என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

அவன் மனத்தில் இந்தப் பேதைகளின் பேச்சு தாங்கவியலாத ஆச்சரியத்தையளித்தது. "கடவுளே! 'நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை' என்பதுபோல் எல்லோரையும் நன்மார்க்கத்தில் காப்பாற்று. கெடுதல் செய்ய விடாதே" என்று வேண்டியவாறு வீட்டிற்கு வந்தான்.

வானத்தில் மேகங்கள் கவ்விக்கொள்வது சகஜம். ஆனால் எப்போதும் மேகம் சூழ்ந்து இருண்டே இருப்பதில்லையல்லவா? ஒரு காற்றடித்தால் அல்லது மழை பெய்தால் மேகம் கலைந்து பிரகாசம் உண்டாகிவிடுகிற இயற்கையை நாம் பார்க்கிறோம். அதேபோல் மனித வாழ்க்கையிலும் எத்தனையோ மேகங்கள் மூடிக் கொள்கின்றன. அதிர்ஷ்டமாகிய மழையோ, நல்ல காலமாகிய காற்றோ அடித்தால், சற்றுக் கலைந்து சாந்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது.

சுரேந்திரன் வீட்டிற்கு வந்ததும் அவன் விடுதியில் ஒரு கடிதம் கிடந்தது. அதை ஆவலுடன் எடுத்துப் பார்த்தான். அதில் "நாளைக் காலை எட்டு மணிக்குக் கீழ்க்கண்ட விலாசத்தில் வந்து பார்க்கவும்" என்ற ஒரே வரி இருப்பதைக் கண்டவுடனே அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை. எனினும், அக்கடிதத்தில் கிராமபோன் கம்பெனி என்ற எழுத்துக்கள் அச்சிடப்பட்டிருந்ததால், 'தனக்கு வேலை கிடைக்கவே ஈசன் வழிகாட்டிவிட்டார்' என்று தானே எண்ணி, பரமசந்தோஷமும், பேரானந்தமும் அடைந்துவிட்டான். மறுநாள் காலை எட்டு மணியையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

## 21

ஒயிலாம்பாள், ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்போல் நிர்மலாவின் விடுதிக்கு வந்து, ஓசை செய்யாமல் நின்றாள். அப்போது நிர்மலா ஏதோ எழுதிக்கொண்டிருந்தாள். ஒயிலாம்பாள் இரும்பியும், தும்பியும், கனைத்தும் தான் வந்திருப்பதைத் தெரிவித்தாள். நிர்மலா தலை நிமிர்ந்து பார்த்து, என்ன விஷயமென்று தலையை ஆட்டியே கேட்டாள்.

ஒயிலாம்பாள் சற்றுச் சலிப்புடனேயே பேசத் தொடங்கி, "விஷயமென்னவா? நான் காலையிலேயே சொல்லவில்லையா? நாளைச் சாயங்காலம் கௌரி பூஜை செய்யவேண்டாமா? அதற்கான ஏற்பாடுகளைச் செய்துவிட்டாயா? கையிலோ ஒத்தைக் காசில்லை. கடன் கொடுப்போரும் யாருமில்லை. உன்னிடம் சொல்லவும் பயமாயிருக்கிறது. நீயோ பெத்த தாயார் என்கிற விச்வாசம் கடுகளவுமில்லாது அலக்ஷியம் செய்து என்னை அழவைக்கிறாய். வீட்டுச் சாமானுக்கு என்னிடம் காட்டிக் கொடுக்காமல், ஜீவாவும் மணியும் பார்த்துக் கொள்கிறார்கள். இதற்கு என்ன செய்வது என்று கேட்கத்தான் வந்தேன்.

தாசி வீட்டில் சதா கஜ்ஜை ஓசையும், தம்பூராவின் நாதமும், பாட்டின் சப்தமும், கமகமவென்று மணக்கும் பரிமளவாசனையும் ஓய்வதே இல்லை என்று பழய காலம் முதல் சொல்லும் பழமொழியாயிருக்கிறது. இந்த வீட்டிலோ சண்டையும், பூசலும், கண்ணீர் வழிதலும், பாழ்வீடு போன்ற நிசப்தமுந்தான் குடிகொண்டிருக்கு. 'போதாக்குறைக்குப் பொன்னியம்மன் குறை' என்பதுபோல் சதா எழுதுகிறாய். எழுத்தென்னடி வேண்டிருக்கு? எழுதி யெழுதி என்னடீ சாதிக்கப்போகிறாய்? எழுத்துத்தானா தாசிகளின் குலத்திற் கழகு?"—என்று பேசி முடிப்பதற்குள்,

நிர்மலா வழக்கமாயுள்ள சீற்றத்தைச் சிறிது விடுத்து எழுதுவதை நிறுத்திவிட்டு, 'அம்மா! ஆத்திரப்படாதே என்று சொன்னால் உனக்குக் கோபம் வருகிறது. உன் வாதத்தின்படியே சங்கீதம் சரஸ்வதியின் வரப் பிரஸாத மல்லவா! அதே சரஸ்வதியின் வரந்

தான் இந்த எழுத்தும், தெரியுமா? அந்தக் கலைத்தேவியாகிய நாமகளின் அருளுடன் பூமகளின் அருளும் சேர்ந்து உண்டாகு மல்லவா! எழுத்தின் வாசனை யறியாத உனக்கு என்ன தெரியும் அதன் ருசி? அந்த இன்பம்! அந்த தனித்த உணர்ச்சியின் மகி மையை அறிந்த யாரும் அதை வெறுக்கமாட்டார்கள் தெரியுமா!

இதோ இந்தா பத்து ரூபாய். அன்று ஒரு கட்டுரையைப் படிக்கக் கொடுத்தேன்; அதை நீ வீசி எறிந்தாயே. அந்தக் கட்டு ரைக்காக புகழுரைகள் நிறைந்த கடிதமும் இந்தப் பத்து ரூபாய் நோட்டும் இன்று தபாலில் எனக்கு வந்தது. கௌரியம்மன் பூஜைக்கு உதவும்படி இது மிகவும் சரியான சமயத்தில்தான் வந்தது. இதைக் கொண்டுபோய் வேண்டிய சாமான்களை வாங்கி பூஜைக்குத் தயார் செய்துவிடு.

அம்மா! நான் கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டேன். இந்த வியாஜத்தை வைத்துக்கொண்டு எந்தத் தடியனையேனும் அழைத்து வந்தாயானால், நான் சும்மா இருக்கமாட்டேன். உன்னையும் அவனையும் சேர்த்து அவமானப்படுத்திவிடுவேன். அதன் பிறகு என்னைத் திட்டுவதில் பிரயோஜனமில்லை. ஏழைச் சுமங்கலிகளைக் கூப்பிடு. ரவிக்கையுடன் வெற்றிலைப் பாக்குக் கொடுக்கலாம்" என்றாள்.

ஒயிலா:—ஏண்டி! உன் உத்திரவு கிடக்கட்டும். இதுமாதிரி பூஜை காலங்களில் பல பெரிய மனிதர்களுக்கு அழைப்பு அனுப்பு வதும் அவர்கள் வந்து ஆனந்தமாகப் பூஜையைப் பார்த்துவிட்டும் சங்கீதத்தைக் கேட்டுவிட்டும் அங்குள்ள தட்டில் சவரனும், ரூபா யாயும், நோட்டாயும் அம்மனுக்குப் போடுவதும் வழக்கம். இதில் உனக்கு........

நிர்மலா:—ஆரம்பித்துவிட்டாயா? இதில் உனக்கென்ன கஷ்டம் என்றுதானே கேட்கவந்தாய். எனக்கென்ன கஷ்டமா? கஷ்டம் மாத்திரமில்லை. அவமானமும், பெரும் நஷ்டமும் தானுண்டு. அம்பாளுக்கா பணத்தைப் போடுகிறார்கள்? ஹூம். மையிட்டக்கண்ணால் மயக்கி, ஊத்தை வாயால் புன்சிரிப்பு சிரித்து, விஷப்பல்லைக் காட்டி குலுக்கிப் பிலுக்கி, நடிக்கும் அம்பாளுக்

கன்றோ பணம் போடுவது? அப்படிப் பணம் பறிப்பதற்காகத்தான் இம்மாதிரி பண்டிகைகள் செய்வது வழக்கமோ! அப்படியாயின் ஒன்றுமே செய்யவேண்டாம்.

ஒயிலா :—'ஆ! ஆ !! ஆ !!! என்னடீ தைரியம் உனக்கு? நான் செத்தால் திதிகூட வேண்டாமென்று கூறிவிடுவாய் போலிருக்கிறது. அம்பாள் பூஜையையாடீ நிறுத்துவார்கள். நல்ல அழகுதான். உன்னிஷ்டம்போல் ஆடு. பூஜையை நிறுத்தாதே'—என்றாள். அதற்குமேல் அவளால் ஒன்றும் சொல்வதற்கு இடமில்லையாகையால் நிர்மலாவை விட்டுப் பிடிக்கவேண்டுமென்று எண்ணிப் போய் விட்டாள்.

நிர்மலா மறுதினம் அதிகாலையிலேயே எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு மடியாக, கௌரியம்மனுக்குப் பூஜை செய்துவிட்டுப் பின் ஆனந்தமாகத் தம்பூராவை மீட்டிக்கொண்டுப் பாடவாரம்பித்து விட்டாள். வீட்டு வேலைக்காரியின் மூலம் 10 ஏழைச் சுமங்கலிகளை அழைத்துவரும்படிச் சொல்லியிருந்தாள். அதன்படியே பல ஏழைப் பெண்கள் வந்தார்கள். நிர்மலாவின் மதுரகானத்திலீடுபட்டு தம்மையும் தம் வீட்டு வேலைகளையும் கூட மறந்துவிட்டு உட்கார்ந்திருந்தார்கள்.

நிர்மலா பொருக்காக கௌரியம்மன்மீது பாடல்களைப் பாடிவிட்டு, அந்தச் சுமங்கலிப் பெண்களுக்கு நலங்கிட்டுச் சந்தனம் குங்குமம் புஷ்பம் முதலியவைகளைத் தானே அணிவித்து ரவிக்கையுடன் தக்ஷிணை வைத்துத் தட்டுடன் வெற்றிலைப் பாக்கு, மஞ்சள், பழம், தேய்காய் முதலியவைகளைக் கொடுத்துப் பின் அவர்களைச் சுற்றிச் சேவித்தாள். அவர்களுக்கெல்லாம் ஒரு டம்ளர் பாலையும் பழத்தையுங் கொடுத்துச் சாப்பிடச் செய்து பிறகு ஆனந்தமாக வழியனுப்பினாள்.

வந்த பெண்களின் மனம் ஆச்சரியத்தினாலும் ஆனந்தத்தினாலும் பொங்கிப் பூரித்தது. "அம்மா! நீ இத்தனை சிறு பெண்ணாகவிருந்தும் உனக்குள்ள சீரிய ஒழுக்கமும், தெய்வபக்தியும் எங்களைப் பிரமிக்கச் செய்கின்றன. அந்தக் காலத்தில் உன் தாயார் சிறியவளாயிருந்தபோதெல்லாம் இந்த வீட்டுப்பக்கமே எங்களைப்

போன்றவர்கள் வரவேமாட்டார்கள். மொத்தத்தில் 'தாசி வீட்டுக்கா போவது? வெகு அழகு! அங்கு தடியன், தடியன்களாய் மொட்டையுங் கட்டையும் சதா இருப்பார்கள். அசுத்தம் நிறைந்த குப்பைத் தொட்டியன்றோ தாசி வீடு! அங்கு கால் வைக்கலாமா? அங்கு மழைக்காகவும் வெயிலுக்காகவும் ஒண்டினுல்கூடப் பெயர் கெட்டுவிடும் பத்திரம்" என்று எங்கள் பெரியவர்கள் கூறுவார்கள்.

அம்மா! நீ எப்படியோ பூர்வ ஜென்மாந்திரத்தின் கர்மத்தால் இக்குலத்தில் பிறந்துவிட்டாய். சேற்றில் செந்தாமரை முளைத்தது போல் நீ பிரகாசிக்கிறுய். தாசி வகுப்பிலும் இம்மாதிரி ஒருத்தி இருப்பாள் என்று உன்னுல் விளங்குகிறது. நீ மகாராஜியாய் நன்ருக இருக்கவேண்டும். நாங்கள் போய்வருகிரேும். எங்கே அம்மாவைக் காணவில்லை?" என்று கேட்டார்கள்.

நிர்மலா:—உத்தம சிகாமணிகளே! உங்கள் ஆசீர்வாதத்திற்கு என்னைப் பாத்திரமாக்கியது அம்பிகையின் அருள்தான்....அம்மாள் எங்கேயோ வெளியில் போயிருக்கிருள். காலையில் மடியாகப் பூஜை செய்வதுதான் எனக்குப் பிடிக்கும். சாயங்காலமென்ருல், மடியுமிருக்காது; சாப்பாடும் ஆய்விடும். ஆகையால் காலையிலேயே செய்துவிட்டுத்தான் நான் சாப்பிடுவது வழக்கம்—என்ருள். வந்தவர்களும் விடைபெற்றுக்கொண்டு போய்விட்டார்கள்.

நிர்மலாவும் நிர்மலமாகப் பூஜை செய்துவிட்டு, வழக்கம்போல் எழுதச் சென்றுவிட்டாள். ஒயிலாம்பாள் அன்று மாலையில்தான் பூஜை நடத்த வேண்டுமென்ற நம்பிக்கையுடன் வெளியே போய் விட்டாள். இந்த உளவை அறிந்துதான் நிர்மலா காலையிலேயே பூஜையை நடத்திவிட்டாள். ஒயிலாம்பாள் ஊர் சுற்றிவிட்டு வரும் போது சாம்பிராணி வத்தி, புஷ்பம், சந்தனம் முதலியவைகளின் பரிமளம் அவளது மூக்கைத் துளைத்ததால் எங்கே இருந்து இந்த வாஸனை வருகிறதென்று யோசித்தபடியே ஜீவாவின் விடுதிக்குச் சென்ருள்.

அத்தையின் வரவையே எதிர்பார்த்து, அவள் வந்ததும் கலகத் தீயை மூட்டுவதற்காகவே காத்துக்கொண்டிருந்த ஜீவா

முகத்தை யொருமாதிரித் திருப்பியும், தன் மனோபாவத்தை விளக்கியும் காட்டும்முறையில் நின்று "அத்தே! போதும். உன் முயற்சிகள் எல்லாம் நாசமாய் போயுடுத்து. பூஜைகள் எல்லாம் முடிந்து, பத்து சுமங்கிலியாம், யாரோ பிச்சைக்காரிகள் அவர்களுக் கெல்லாம் பாதபூஜை செய்தும், வெற்றிலைப் பாக்குக் கொடுத்தும் அனுப்பியாய்விட்டது" என்பதற்குள்.

ஒயிலா:—ஐயையோ! நீ என்னடீ செய்தாய்? சொல்லி நிறுத்துவதற்கென்னடீ?

ஜீவா:—போருமே! நானும் வெட்கங்கெட்டு அவளிடம் போய் 'அத்தை இல்லாது பூஜை செய்யலாகாது. அவள் வரட்டும்' என்று எத்தனையோ நயமாகக் கூறினேன். அதற்கவள் பேசிய பேச்சை நினைத்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டும். உனக்காக நாங்கள் இந்த வீட்டிலிருக்கிறோமேயன்றி இல்லாமல் போனால் அரைக்கணத்தில் வெளியேறிவிடுவோம். அத்தனை பேச்சு பேசி "வீட்டை தண்ட குடியாக்கி உருட்டியும், பாபக்குகையாக் கியதும்போதும், நீ எனக்குச் சொல்லவேண்டாம். வீட்டைவிட்டு நடவுங்கள்" என்றும் முடித்துவிட்டாள். இனுமே நீ என்னதான் சொன்னாலும் நான் கேட்கமாட்டேன். பிச்சை எடுத்தாவது பிழைக்காமலா போவேன்—என்று கண்ணைத் துடைத்தும் மூக்கைச் சிந்தியும் அழ வாரம்பித்தாள்.

ஒயிலா:—அப்படியா சமாச்சாரம்! இத்தனை தைரியமா அவளுக்கு வந்துவிட்டது. உன்னை வீட்டை வீட்டு விரட்டும்போது எனக்கென்னடீ இங்கு காரியம். நானும் வந்துவிடுகிறேன். அந்த புத்திகெட்ட கழுதை என்ன பாடுபடுகிறாளோ படட்டும். தனியே கிடந்து திண்டாடித் தவித்தால்தான்டீ புத்திவரும். இருக்கட்டும்; இருக்கட்டும். அவளை அழவைத்து புத்தி கற்பிக்கிறேன்....

என்று ஆவேசத்துடன் சொல்லும்போது நகைத்த முகத்துடன் நிர்மலா அங்கு தோன்றி 'அம்மா! அந்தக் கவலை உனக்கு வேண்டாம். நீ என் கண் முன்பு இல்லாமல் மறைந்து விட்டதால் நான் தனியாகித் தவிப்பதாய் நீ எண்ணி இருப்பது வெறும் மாயை. நம்பியவர்களைக் காக்க உன் கண்ணுக்குத்

தெரியாது சதா வீற்றிருக்கும் உலக மாதாபிதாவை உன்னால் அகற்ற முடியவே முடியாது. அதற்கு உங்கள் ஜாதியிலுள்ள தந்திரம் தளுக்குகளெல்லாம் பலிக்காது. அவனுடைய அழியாத துணையை நான் விரும்பும்போது எனக்குப் பயமென்ன? முன்னறி தெய்வமாயிற்றே என்ற மரியாதையால் உன்னை நான் காப்பாற்ற நினைக்கிறேன். உன் தலைவிதி வேறுவிதமாயிருந்தால் அதைத் திருப்ப யாரால் முடியும்? எனக்கா பிழைப்புக்கில்லாது திண்டாடும் காலம் வருமென்று சாபமிடுகிறாய்?

அம்மா! அந்தமாதிரி பட்டினியாகவே நான் காலங்கழிக்கும்படி உன் சாபம் பலித்தாலுங்கூட உங்கள் ஜாதித் தொழிலின்படி சம்பாதித்து மானங்கெட்டு உயிர் வாழமாட்டேன். கிணற்றிலோ குளத்திலோ என்னுயிரை நீக்குவேன். இதோ பாரு. இன்றும் ஒரு பத்து ரூபாய் மணியார்டர் வந்தது. இப்படி சிறு தொகை கொடுத்துதவ பகவான் இருக்கிறார். பயப்படாதே. சாகுங்காலத்திலாவது சன்மார்க்க நெறி தவறாமல் நடந்து பாபத்தைத் துலைக்க வழியைத் தேடு" என்று படபடத்துக் கூறினாள்.

ஒயிலாம்பாளின் அப்போதைய நிலைமையில் நான்காவது அவதாரம் எடுத்துவிட்டாள் என்றே கூறவேண்டும். இரண்யனைக் கிழித்ததுபோல் நிர்மலாவையும் எங்கே கிழித்துவிடுவாளோ என்ற அச்சம் ஜீவாவுக்கே உண்டாகிவிட்டதென்றால், அந்தக் கோபத்தின் ஜ்வாலை எத்தனை கொடியதாக இருந்திருக்கும்? "அடியே! என்னை இம்மாதிரி எல்லாம் அவமானப்படுத்த வேண்டுமென்று எத்தனை நாளாகக் கங்கணம் கட்டிக்கொண்டிருந்தாயடீ! நான் வீட்டிலில்லாமலிருக்கையில் பூஜையைச்செய்வதற்கு உனக்கென்னடீ அத்தனை தைரியம் வந்துவிட்டது. நான் உயிருடன் இருக்கிறதாக நினைத்தாயா! செத்துவிட்டதாக எண்ணினாயா! சாயங்காலம் நடக்க வேண்டிய பூஜையை இப்போதே செய்வது என்ன முறையடீ? இந்தமாதிரி சங்கடங்களையும் அவமானத்தையும் இனி என்னால் சகிக்கமுடியாது.

அடீ ஜீவா! உம். மூட்டையைக் கட்டு. மணி எங்கே கூப்பிடு. அவள் எக்கேடாவது கெட்டுப்போகட்டும். இனி அதைப்பற்றி

எனக்கு அவசியமில்லை. ஏண்டீ நிற்கிறாய்? இந்த மூதேவி வீட்டிலிருக்க வேண்டாமென்று அந்த சாண் சிறுக்கி சொல்லிய பிறகு இங்கு உனக்கும் வேலை இல்லை. எனக்கும் வேலையில்லை. அவள் மகா வேதாந்தி. வைராக்யக் கொழுந்து, தபஸ்வினி. பெத்த தாயை மகிழ்விக்கத் தெரியாத புத்தி கெட்டவளுடைய வேதாந்தமும் ஒரு வேதாந்தமா? உம். மூட்டை கட்டுடீ" என்று கூறியவாறு துணி துப்புகளை வாரி எடுத்துக் கட்டினாள்.

நிர்மலாவின் வார்த்தைகள் எதுவுமே அவள் காதில் விழவில்லை. அப்போதும் நிர்மலா குறுக்கே சென்று சாந்தத்துடன், "அம்மா! நான் மறுபடியும் சொல்கிறேன். உன்னைக் காப்பாற்ற வேண்டிய கடமை என்னுடையது. நான் வேதாந்தியானால் உனக்கென்ன? தேவடியாள் தொழில் செய்தால் உனக்கென்ன? மானமாக வாழ்வு நடத்துவதில் நீ இம்மாதிரி தடங்கல் செய்தால் உனக்கு முன்பு நான்தான் பிராணனை விட்டுவிடவேண்டும் போலிருக்கிறது. நீ இந்த வீண் பூச்சி மிரட்டல் மிரட்டாதே. முத்திரை போடும்போது நீ சாமியாடி என்னை ஏமாற்றியதுபோல் இனி ஏமாற்ற முடியாது. வீணாக ஆத்திரப்படாதே. உன்னை நான் காக்கத்தயாராயிருக்கையில் உனக்குக் கவலை வேண்டாம். பேசாமலிரு. அவர்களை வீட்டைவிட்டு அனுப்பிவிடு' என்று கூறி முடிப்பதற்குள்,

ஒயிலாம்பாள் "போறுண்டீ போறும். பெத்த தாயாருக்கு மதிப்பு கொடுத்தது போறும். என்னுடைய இனத்தார்க்கு முன், நான் வாழ்ந்த வாழ்வும் இப்போது என் கதி இருக்கும் சிரிப்பாணியும் என்னால் சகிக்க முடியாது. இதோ நான் போகிறேன்" என்று ஜீவாவையும் பிடித்து இழுத்துக்கொண்டு பிசாசு பிடித்தவள் போவதுபோல் தடதடவென்று நடக்க வாரம்பித்தாள்.

நிர்மலாவும் பின்தொடர்ந்தபடியே மூட்டையைப் பிடுங்கிப் பார்த்தாள். "அம்மா! அம்மா"வென்று தடுத்தும் பார்த்தாள். அந்த ஜடப்பொருள் அவைகளை லக்ஷ்யம் செய்யாமல் மூர்க்கத்தனத்துடன், என்னால் உனக்கு அவமானமோ தலைகுனிவோ வேண்டாண்டியம்மா வேண்டாம். உன்னிஷ்டப்படியே இரு. நான்

183025

எடுத்து வளர்த்து ஆயிரம் பாடுபட்ட குழந்தைகளை அடித்துத் துரத்திவிட்டு உன்னிடம் நாய்போல், அடிமைபோல் நான் ஏண்டி கிடக்கவேண்டும்? உனக்கா நல்லபுத்தி வரும்போது பெத்த தாயை பரிபவப்படுத்தின வயிற்றெரிச்சலைத் தெரிந்துகொள்வாய். என் வயிற்றெரிச்சல் வீணாய்ப் போய்விடாது'' என்று கூறிக்கொண்டே போய்விட்டாள்.

அவள் எங்கே போகிறாள், என்ன செய்யப்போகிறாள் என்பதை யொன்றுமறியாத நிர்மலாவின் மனங் குழம்பியது. நல்லது பொல்லாது தெரியாமல் குப்பையையே சொர்க்கமாக நினைத்துப் பேசும் தன் தாயாருக்கு நல்ல புத்தியைக் கொடுத்துக் காப்பாற்ற மாட்டாயா! என்று கடவுளை வேண்டியபடியே, தன்னறையில் போய்ப் படுத்துவிட்டாள். என்ன விருந்தாலும், பெத்த தாயார் தனியே போய்விட்ட உள் மர்மத்தை யறியாது ஊர் ஜனங்கள் தன்னை நிந்திப்பார்களே என்ற பெருங்கவலையும் உண்டாகி அவளை வருத்தத் தொடங்கியது. கண்ணீர் வழிந்தோடியது.

## 22

எல்லோருடைய கவலையையும் போக்கும் பொருட்டு சூரிய பகவான் உதயமானான். சுரேந்திரனின் எண்ணம் முற்றும் மணி எட்டடிக்கும் சமயம் எப்போது வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. எழுரை யடித்ததும் கடவுளை எல்லாம் வேண்டிக்கொண்டு கிளம்பி, அக்கடிதத்தில் கண்டுள்ள விலாசத்திற்குப்போய் சேர்ந்தான்.

ஸூட்டும் ஹாட்டுமாக இருந்தால் தடபுடல் மரியாதைகள் நடக்கும். வீதி காக்கும் சேவகனும் விரைவாக உள்ளே அழைத்துச் செல்வான். சாதாரணமாக வந்திருக்கும் சுரேந்திரனைக் கண்டதும் யாரய்யா அது. ஒக்காரு இப்படியே. இன்னும் ஆபீஸ் தறக்கல்லே. யாருப் வரல்லே—என்று சற்று அலக்ஷியமான குரலால் கூறினான்.

சுரேந்திரன் அப்போதுதான் அந்த ஆபீஸ் கட்டிடத்தின் மேலுள்ள கடியாரத்தைப் பார்த்தான். மணி ஏழரை கூட ஆக வில்லை. தன் மனோவேகத்தின் பலன் மணியைக் கூடச் சரியாக கவனிக்க முடியாது வந்து விட்டதைப்பற்றி மிகவும் அவமான மடைந்தான். இதற்கு அனுகூலமாக அந்த வேலைக்காரன் சுரேந் திரனை நோக்கி, "ஏஞ்சாமி! இத்தினி காலையிலே இங்கே எதுக்காவ வந்தீங்க? இது என்ன ஆபீசுன்னு பாத்தங்கோ?" என்றான்.

சுரேந் :—இது என்ன ஆபீஸோ தெரியாது. எட்டு மணிக்கு என்னை வரும்படியாகக் கடிதம் வந்திருக்கிறது. என் வீட்டு கடி யாரம் தப்பாகப் போவதால், மணி தெரியாமல் வந்து விட்டேன்.

வேலை:—என்ன! என்ன! உன்னையா வரச்சொல்லிக் காயிதம் போட்டாங்க. பேஷ். நீ என்ன பெரிய வித்துவானா? இல்லாப்போனா ட்ராமாக்காரனா? பஃபூனா? என்னய்யா?—என்று கட கடவெனச் சிரித்தான்.

அதே சமயம் மானேஜர் வந்து விட்டதால், வேலைக்காரனின் கும்மாளம் சற்று அடங்கியது. மானேஜர் உள்ளே சென்றதும் சிறிது நேரத்திற்கெல்லாம் சுரேந்திரனை யழைத்தார். சுரேந்திரன் வேண்டாத கடவுளை எல்லாம் வேண்டிக்கொண்டே ஒரு அடெண்டர் வேலையாவது கிடைத்தால் போதுமென்று பிரார்த் தித்தபடியே உள்ளே சென்றான். ஏழ்மையும், திகிலும், கவலையும் உள்ள எந்த மனிதருக்கும் கூச்சமும் ஒரு மாதிரியான ஒடுக்கமும் தானாகவே தன்னை யறியாது வந்து விடுமல்லவா?

சுரேந்திரன் ஒடுங்கியபடியே நின்றான். மானேஜர் அவனை நோக்கி, "ஐயா! உமக்கு யாரிடத்தில் சிக்ஷை? எத்தனை உருப்படிகள் பாடத் தெரியும்? கீர்த்தனங்களா! ஹிந்துஸ்தானியா! சில்லரை உருப்படிகளா எது தெரியும்?" என்று கேட்டார்.

இம்மாதிரி கேள்விகள் கேட்பார்களென்று அவன் சற்றுமே எதிர்பார்க்கவில்லை யாதலால், அவனைத் தூக்கி வாரிப்போட்டது. தான் ஏதோ வேலை கிடைக்குமென்று எண்ணி வந்ததற்கு, இம் மாதிரி கேள்விகள் ஏமாற்றமாகிவிட்டதே என்று சப்பிட்டுவிட்டது.

"சார்! எனக்கு சங்கீதமே தெரியாது. சிக்ஷையுமில்லை. ஒன்று மில்லை. ஏதாவது வேலை கிடைக்குமென்று வந்தேன்" என்றான்.

மானேஜர் :—ஐயா! இப்படி உட்காரும். பயப்படாமல் பேசும். நீர் அன்று கோவிலில் தோத்திரப் பாடல்கள் பாடவில்லையா?

சுரேந் :—ஆமாம். பகவானை மன முருகித் துதித்துப் பாடினேன்.

மானேஜர் :—அதைத்தான் கேட்டேன். அன்று நான் கோவிலுக்கு வந்திருக்கையில், உமது பாட்டைக் கேட்டு நான் உண்மையில் பரவசமானேன். வித்வான்கள் என்றும், ட்ராமா, சினிமா நடிகர்கள் என்றும் பெயர் வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் கூட இத்தனை அருமையாய்ப் பாடவில்லை. உமது குரல் மைக்ரோ போனுக்கு மிகவும் பொருத்தமாயும் அழகாயுமிருக்கும். இது ஓர் கிராமபோன் கம்பெனி. தெரியுமா? உமக்கு சில ஸ்பெஷல் பாட்டுகளைச் சொல்லித்தருவதற்கு ஏற்பாடு செய்கிறேன். நீர் ரிகார்டில் பாடினால் சினிமா பாட்டுகளெல்லாம் தோற்றுப்போய் விடும். என்ன சரிதானே!" என்றார்.

சுரேந்திரனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. பிளேட்டில் பாடுவதற்கு தனக்கு அத்தனை சங்கீதம் என்ன தெரியும் என்று பெரிய யோசனையில் ஆழ்ந்திருப்பதைக் கண்ட மானேஜர், "ஐயா! நீங்கள் ஏன் இத்தனை பெரிய யோசனை செய்கிறீர்கள்? அன்று நீங்கள் கோயிலில் பாடிய பாட்டையே இப்போது பாடும் பார்க்கலாம். இங்கே வாரும்" என்று வேறு அறையில் அழைத்துச் சென்று உட்காரவைத்தார். எதிரில் மைக்ரோபோன் இருக்கிறது என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? வேணுகோபால மூர்த்தியை மனதாரத் தியானித்துக் கொண்டே, அதே தோத்திரப் பாடலாகிய "முரளீகான முகுந்தா நந்தா! அரவிந்தா! கோவிந்தா ஸ்ரீ ஹரி" என்ற பாட்டை பியாக் ராகத்தில் வெகு இனிமையாகப் பாடினான்.

மானேஜர் பாடும்போது சட்டென நிறுத்தச் சொல்லிவிட்டு அடுத்த நிமிடம் அந்தப் பாட்டையே ரிகார்டு செய்த மெழுக்கைப்

பாடவைத்தார். ஒரு நாளும் ஒன்றையும் கண்டறியாத சுரேந்திரனுக்குத் தான் பாடிய பாட்டே உடனே பெட்டியில் பாடுவதைக் கேட்டதும் வியப்பிலும் வியப்புகொண்டு, "இதென்ன ஆச்சரியம்! இப்படியும் ஒரு புதுமை யிருக்கிறதா! நான் கூடவா இத்தனை நன்ருகப் பாடுகிறேன்" என்று பிரமித்துப்போய் அப்படியே நின்றுவிட்டான்.

இதைக் கண்ட மானேஜர், "என்ன சார்! இப்போது சரிதானு? இனிமே உமக்குக் கவலேயோ, சந்தேகமோ இல்லையல்லவா! அன்று கோயிலில் கேட்டது முதல் வலுவில் உம்மை யழைத்துப் பாடச்செய்ய வேண்டுமென்றே நினைத்திருந்தேன். உபயோகமத்தவர்களெல்லாம் ஒரு சினிமாவில் நடித்துப் பாடிவிட்டால் எத்தனை கர்வம் வந்து விடுகிறது தெரியுமா? ஒரு நடி இப்போது நன்ருகப் பாடுகிருள். அவளுடன் கூட நடித்தவனின் பாட்டு சுகமில்லே. ஆனுல் அந்தப் பாட்டை ரிகார்டிங் செய்தால் கொள்ளை கொள்ளையாக விற்கலாம். ஆதலால் வலியவரும் ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளாதேயுங்கள். அந்த டாக்கிப் பாட்டுகளை அந்த நடியுடன் சேர்ந்து பாடவேண்டும்.

எங்கள் கம்பெனி வாத்தியாரை வைத்து உமக்குப் பழக்கித் தருகிறேன். அவளுடன் கூடப் பாடும். பணத்தைப் பெற்றுக் கொண்டு போகலாம். கூடிய சீக்கிரத்திலேயே நல்ல பெயர் வரும். அதிக டிமாண்டும் இருக்கும். என்ன தெரிந்ததா! இப்படி வாரும். அக்ரிமெண்டில் கையெழுத்துப் போடும். அந்த கர்வம் பிடித்த நடிகையை அமுக்கி விடலாம். உம். எழுந்திரும். யோசனை என்ன?" என்று கூப்பிட்டார்.

சுரேந்திரனின் மனத்தில் இந்த வார்த்தைகள் சொல்லத்திற மற்ற சந்தோஷத்தையும், ஆச்சரியத்தையும் உண்டாக்கின. "என் தாயாரையும் தங்கையையும இனி தவிக்க விட வேண்டாம். எவளுடன் பாடினுல் என்ன குறைவு? ஆகலால், பாடி விட்டுப் பணத்தைப் பெறுவதே நல்லது" என்று தீர்மானித்து விட்டான். மானேஜருடன் எழுந்து வந்தான். அக்ரிமெண்டு பாரத்தில் கையெழுத்திடும்படி மேஜை மீது வைத்தார். சுரேந்திரன் அதைப் படித்துப் பார்த்தான்.

அதில் கண்டிருந்ததாவது: " அந்த நடியுடன் சேர்ந்து மூன்று ரிகார்டுகளும், சேராது தனியே மூன்று ரிகார்டுகளும் ஆக ஆறு ரிகார்டுகள் நாங்கள் கொடுக்கும் பாட்டைப் பாடவேண்டும். ஒரு ரிகார்டுக்கு 50 ரூபாய் வீதம் ஆறு ரிகார்டுக்கு 300 ரூபாய் கொடுக்கப்படும். இப்போது முதலில் அட்வான்ஸாக 50 ரூபாய் கையில் கொடுக்கப்படும். ஆறு ரிகார்டுகளும் கொடுத்த உடனே 250 ரூபாயும் கொடுக்கப்படும்" என்று எழுதியிருந்ததைப் படித்ததும், அவன் மனத்தில் ஏற்கெனவே இருந்த சந்தோஷம் இன்னும் பன் மடங்காகப் பெருகியது. தன் தாயாரையும், சகோதரியையும் மனத்தில் எண்ணினன். பகவானையும் ஸ்மரித்தபடியே கையெழுத்துப் போட்டான்.

மானேஜர் அதை வாங்கிக்கொண்டு 5 பத்து ரூபாய் நோட்டுகள் எண்ணி வைத்தார். அதை எடுத்துக்கொண்டு மானேஜரை வணங்கினன். அவர், "சரி. ரொம்ப சந்தோஷம். இனிமேல் தினம் நாங்கள் சொல்லி யனுப்பும்போதெல்லாம் இங்கு வந்து பாட்டு கற்றுக்கொண்டு பின்னணி சங்கீதத்துடனும், அந்த நடியுடனும் பழக வேண்டும். தெரியுமா? இன்று பிற்பகல் மூன்று மணிக்கு இங்கு வாரும்" என்றார். சுரேந்திரனும் தன் வந்தனத்தைச் செலுத்தி விட்டு விடை பெற்றுக்கொண்டு சென்றான்.

இரவு கவலையுடன் படுத்த தனக்கு, விடியும்போது திடீரென்று தன் கஷ்டமும் விடிந்து சந்தோஷச் சூர்யனும் உதயமாகித் தன்னை ஆனந்தக் கடலில் மூழ்கவித்ததை எண்ணிப் பெரு மகிழ்ச்சி கொண்டவாறே வேணுகோபாலன் சன்னிதிக்குச் சென்று பிரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்துவிட்டு வீட்டிற்கு வந்தான். உடனே தன் தாயாருக்குப் பெரிய கடிதமொன்று எழுதிப் போட்ட பிறகே அவனுக்கு மூச்சு சரியாக வந்தது.

## 23

வெகு முடுக்காக வீட்டைவிட்டுச் சென்ற ஒயிலாம்பாள் வீதியில் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே போனாள். ஏனெனில், 'வீதியிலும் தன்னை தன் மகள் வந்து அழைக்கின்றாளா! அதைப் பிறர் பார்த்துத் தெரிந்து கொண்டால் தன் மகளுக்குப் புத்தி வரும்' என்று எண்ணியே அவ்வாறு செய்தும் நிர்மலா திரும்பி வராததால் ஏமாற்றத்துடன் அவள் மறைந்துவிட்டாள்.

உள்ளே இருக்கும் நிர்மலாவுக்கு மனம் அமைதி கொள்ளவில்லை. ஒயிலாம்பாள் எங்கே போகிறாள் என்று பார்க்கும்படி வேலைக்காரியை அனுப்பினாள். வேலைக்காரியும் அவள் சென்றவிடமறிந்து எத்தனையோ கெஞ்சிக் கேட்டும் அது பலிக்காது அவளுக்கே திட்டு சன்மானத்துடன் அனுப்பிவிட்டாள். ஒரு நொடியில் அன்றைய பொழுது கழிந்துவிட்டது. இவர்களின் இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒருத்தி ஒருத்தியாக வந்து, "பெத்த தாயாரை இம்மாதிரி அலக்ஷியம் செய்து வீட்டைவிட்டுத் துரத்தலாமா! இது கடவுளுக்குத்தான் அடுக்குமா! நீ மகா படித்த மேதாவி என்று ஜம்பம் அடிக்கிறாயே! பெத்த தாயை பரிபவப்படுத்துவதுதான் உன் படிப்பின் ஸாரமா! அவள் எங்கேனும் கிணற்றில் குளத்தில் விழுந்து இறந்துவிட்டால் அந்தப் பாவம் உன்னைச் சேராதா!" என்று கூறும்போது நிர்மலாவின் இதயம் 'படக் படக்' கென்று அடித்துக்கொண்டது.

நிர்ம:—என் தாயாரிடம் எனக்கு அன்பில்லைபோல் நீங்கள் பேசுகிறீர்களே! நான் அத்தனை சண்டாளியல்ல. என் இதயம் புல் பூண்டற்ற பாலைவனமல்ல. என் தாயாரை நான் தெய்வம் போல் வைத்துப் பூஜிக்கத் தயாராகவிருக்கிறேன். ஆனால், நல்ல பழத்தைச் சாப்பிட இச்சிப்பவர்களை அமேத்யத்தைத் தின்னும்படியாகக் கூறினால் நீங்கள் இசைவீர்களா!

வந்த:—ஓகோ! நம் ஜாதி நேத்து இன்று முளைத்த ஜாதியாடீ! பெரியவர்களின் பழக்க வழக்கங்களைத்தானே செய்யும்

படிக் கூறினுள். நீ என்னடீ ஆகாசத்திலிருந்து குதித்துவிட்டதாக நினைக்கிருயோ! எத்தனையோ இளப்பமாக நினைக்கும் தேவடியாளின் வயிற்றில்தான் நீ பிறந்தாய் என்பதை மறந்துவிட்டாயா. எத்தனை பிரபுக்களின் பணத்தினுல் நீ இந்த நிலைமையை அடைந்திருக்கிருய் என்பதை சிந்தித்துப் பார்த்தாயாடீ! வீணுக பெத்த தாயின் மனத்தை முறியடிக்காதே. இது கொஞ்சங்கூட உன் க்ஷேமத்திற்கு அடுத்ததல்ல. நாங்களெல்லாம் பெரியவர்கள்தான். நாங்கள் உனக்கு ஹிதத்தைத்தான் பேசுவோம். நீ முரட்டுப் பிடிவாதம் செய்யாமல் உன் தாயாரிருக்கும் இடத்திற்குப்போய் அவளை அழைத்து வா. இதனுல் உனக்குக் குறைந்துபோய்விடாது.

நிர்ம :—நான் அழைத்துவர மறுக்கிறேனு? எது எப்படியாயினும் சரி. வீணுக என்னுடைய சொந்த விஷயத்தில் அவள் பிரவேசிக்கவே கூடாது. அதோடு ஜீவாவை வீட்டில் வைத்துக்கொண்டு அனியாயத்தைச் செய்யக்கூடாது. இவ்விரண்டிற்கும் ஒப்புக்கொண்டால் இப்போதே நான் சென்று அழைத்து வருகிறேன்—என்ருள்.

இம்மாதிரி இருவருக்கு மனஸ்தாபம் ஏற்பட்டுள்ள சமயம் தான் அநேக தந்திரப் புலிகள் மத்தியில் வந்து சேர்ந்துகொண்டு இருவருக்கும் நல்லவர்கள்போல் நடித்துத் தாளம் போட்டுப் பேசி சமயம் பார்த்து அகப்பட்டதையும் சுருட்டிக்கொண்டு போவது உண்டு. இந்தச் சமயத்தில் கலகத்தைச் செய்வோரும் உண்டு. க்ஷாத்திரத்தை அதிகரிக்கச் செய்வோரும் உண்டு.

நிர்மலா அப்படியெல்லாம் அசைகிறவளா? தன் தாயாரை இங்கு கூட்டிக்கொண்டு வரும்படிக்குத் தன் வேலைக்காரியிடமே சொல்லியனுப்பினுள். வேலைக்காரியும் சென்று வந்து, "நான் சொல்கிறபடியே கேட்பதாயின் திரும்பி வருவதாயும், இல்லையேல் வரமாட்டே"னென்று ஒயிலாம்பாள் தெரிவித்ததாகக் கூறினுள். எப்படியாவது அவளை இங்கு வரவழைத்தால் போதும் என்ற ஆவலால் அப்படியே ஆகட்டுமென்று சொல்லியனுப்பிய பிறகு இரவு எட்டு மணி சுமாருக்கு ஒயிலாம்பாள் மட்டும் முக்காடிட்டுக்கொண்டு கோபாக்ராந்த முகத்துடன் பிரஸன்னமானுள்.

அவள் வரவையே எதிர்பார்த்துக்கொண்டிருந்த நிர்மலா எழுந்து தாயின் கையைப் பிடித்துக்கொண்டு, "அம்மா! என் என்னை இப்படி வருத்துகிறாய்? உன் மனத்திற்குப் பிடிக்காத காரியத்தை நான் செய்ய வேண்டுமென்றால் உனக்கு எத்தனை கோபம் வருகிறது. அப்படிதானேம்மா எனக்கு இஷ்டமில்லாத காரியத்தை என்னால் செய்ய முடியாது என்கிறேன். உங்கள் ஜாதித் தொழிலின் இழிவை நீங்களறியாது அதையே மேன்மையாக நினைத்திருப்பதை என் மனம் முற்றிலும் வெறுத்துக் காறியுமிழச் செய்கிறது.

அம்மா! வீணாக என் மனத்தையும் வருத்தி ஊரார் சிரிக்கவும் செய்யாதே. மனித யத்தனத்தில் உனக்கு நானும் எனக்கு நீயும் ஆதாரம்போல் தோன்றுகிறோம். எல்லோருக்கும் மேல் ஒருவனிருப்பதை ஜனங்கள் மறந்து விடுகிறார்கள். நான் சொல்வதைக் கேள். மானத்தை விலைக்கு விற்று ஹீனமான வழியில் இப்பாழும் ஊனை வளர்ப்பதை விட உயிரை விட்டு விடுவது மேல். ஆதலால் அந்த ஒரு விஷயத்தை மட்டும் விட்டு விட்டு என்னை மன்னித்து விடு. மற்றபடி உன்னிஷ்டம்போல் நான் நடக்கிறேன். அம்மா! நீ வீட்டை விட்டுப் போய் என்னை வீண் அபவாதத்திற்கு ஆளாக்காதே" என்று கெஞ்சினாள்.

ஒயி:—இந்த மாமாலங்கள் எல்லாம் எதற்காகடீ! உண்மையில் நீ சொல்லுவது நிஜமானால் என் மனங்கோணாமல் நடக்கிறேன் என்று சத்தியம் செய்து கொடு பார்க்கலாம்.

நிர்மலா:—ஐயோ! இந்த அல்பத்திற்கெல்லாமா சத்தியம் செய்வது. என் வார்த்தையில் நம்பிக்கை இல்லாத உனக்குச் சத்தியம் செய்த பிறகு மாறி விடுவேன் என்ற அவநம்பிக்கை மட்டும் இல்லாது போய் விடுமோ! என் வார்த்தையை நம்பு. அந்த ஒரு விஷயத்தைத் தவிர வேறு நியாயமான காரியங்களில் நான் உன்னிஷ்டப்படியே செய்கிறேன்.

ஒயிலா:—சரி! அப்படியானால் நாளை சாயங்காலம் சினிமா முதலாளி வருவார். ஏற்கெனவே அவரிடம் நம் மணி எல்லா விஷயமும் பேசி விட்டான். ஒரு ஆட்டக்கச்சேரி இல்லை. பாட்டுக்

கச்சேரி இல்லை. தாசித் தொழிலும் இல்லை. ஒரு எழவும் இல்லாது நீ எப்படித் தான் பிழைப்பது. உன்னுயிசுகாலம் முழுதும் ஏதாவது எழுதிக்கொண்டு உட்கார்ந்திருந்தாலும் அதற்கு யாரும் அதிகப் பணம் கொடுக்க மாட்டார்கள். 10,000 ரூபாய் உனக்கு எண்ணி விடுவதாக முதலாளி சொல்லுகிறாராம். முதல் படத்திற்கே அப்படி என்றால் இரண்டாம் படத்திற்குக் கேட்கவே வேண்டாம். அதற்கு ஒப்புக்கொண்டுதானகவேண்டும். நீதான் கதா நாயகி உன்னை....

நிர்மலா :—(இடைமறுத்து) அம்மா! தூக்கு மரத்தை விட்டுத் தொழு மரத்தில் மாட்டிக்கொள்வது போலல்லவோ உன் வார்த்தை இருக்கிறது. சினிமாவில் நடிப்பதில் உள்ள சாதக பாதகங்களைத் தெரியாமல் 10,000 ரூபாய் என்று மட்டும் பெரிதாகச் சொல்லுகிறாயே. தூரத்து மலை பச்சை என்பதுபோல் சினிமாவின் விபரீதங்களை அறிவதற்கு முன்பு அதைக் கண்டு மலைத்துப்போய் நடிக்கச் சென்றுவிட்ட பெண்களின் கதியை நீ பார்க்கவில்லையா? உன் சினேகிதியின் பெண் ஊர்வசி போய்விட்டு வந்து என்ன சொன்னாள் என்பதை மறந்துவிட்டாயா! அதை விட வெட்கக் கேடானது சினிமா உலகில் உண்டா!

ஒயிலா :—ஏதோ ஒரு கம்பெனியில் அந்த மாதிரி ஊழல் நடந்து விட்டதென்றால் எல்லாக் கம்பெனிகளிலும் அப்படித் தான் நடக்குமென்று கூறி விடுவது சுத்த பிசகு. எத்தனையோ முதலாளிகள் மகா யோக்கியமாயும், ஒழுங்காயும் நடிகர்களை நடத்த வில்லையா?

நிர்மலா :—அம்மா! உன் வார்த்தையைக் கொண்டே நான் மடக்குகிறேன். தேவடியாள் என்கிற சப்தத்தைக் கேட்கும் போதே, “அப்பப்ப! தேவடியாள்களா! இலும்புருக்கி நோய்மாதிரியல்லவோ மனிதர்களை உருக்கி விடுவார்கள். கொடிய பாலைவனத்தைவிடக் கொடிய நெஞ்சமுடையவர்களல்லவோ அவர்கள். கொலைக்கும் அஞ்சமாட்டார்களே” என்று பொதுவாக ஜனங்கள் கூறி விடுகிறார்களல்லவா! தேவடியாள் ஜாதியிலும் ஒழுக்கத்துடனும் தெய்வ பக்தியுடனும் நெறிதவறாது இருப்பவர்களில்லையா?

எத்தனையோ பேர்கள் தாங்கள் அபிமானித்துள்ளவனின் குடும்பத்தையே தம் சொந்த சொத்துக்களால் போஷித்து உதவிசெய்யவில்லையா? நம்ப பாலாமணி தான் அபிமானித்துள்ளவனின் பெண்டாட்டிக்கு நகைகள் முதல் செய்து போட்டும் அவன் பெண்ணுக்குத் தன் பணத்திலேயே கல்யாணம்முதல் செய்விக்கவில்லையா? எத்தனையோ பேர்கள் கோவில்களுக்கே தங்கள் சொத்துக்களை அர்ப்பணம் செய்யவில்லையா? இன்னும் எத்தனையோ தர்மங்கள் செய்யவில்லையா?

அம்மா! இவைகளெல்லாம் சற்றுவது வெளியில் வருகின்றனவா பார்த்தாயா! உங்களைப்போல் பலர் செய்யும் அக்கிரம துர்நாற்றம் மற்றவர்களின் தூயவாஸனையையும் பாழாக்கி விடுகிறது. அதுபோல் சினிமாவென்றாலே பயப்படும்படியாக விருக்கிறது. நான் தேவடியாள் என்கிற கவசத்தால் மறைந்திருந்தாலும் என் இதயம் அதற்கு அடிமையில்லை. ஆகையினால்....

ஒயிலா:—ஐயையோ! உன் ஆணவத்தையே ஆரம்பித்துவிட்டாயா! எத்தனை சினிமாக் கம்பெனியைப்பற்றியடீ உனக்கு விருத்தாந்தம் தெரிந்துவிட்டது. குப்பையில் பிறந்துவிட்டு குலமகளைப்போல் பேசுகிறாயே! எந்தக் குடி கெடுத்த நாயடீ உனக்குக் கலகம் செய்தது? நீ எனக்குக் கொடுத்த வாக்கு இதுதானடீ?

நிர்மலா:—அம்மா! ஆத்திரப்படாதே. வாய் வார்த்தை வாயிலிருக்கும்போதே ஏன் கத்துகிறாய்? எந்தக் குடி கெடுத்த நாயா சொல்லியது என்று கேட்கிறாய்! உன் அருமைச் சினேகிதிகளின் பெண்கள் சென்று ஆடிவிட்டு வந்து சொன்ன கதையைத்தான் சொல்கிறேன். டைரெக்டரின் அதிகாரம் ஒருபுறம். அவன் இஷ்டப்படி நடக்கவில்லை என்றால், 'பார் உன்னை இனி தலை எடுக்க முடியாதபடி தொலைத்துவிடுகிறேன்' என்று உருமலும் பயமுறுட்டலும் ஒரு பக்கமாம்.

டைரெக்டருக்கும் காமேராமேனுக்கும் ஆகாவிட்டால் அவன் கைவரிசைகளைக் காட்டிச் சரியானபடி ஆங்கில் கொடுக்காமல் குரங்குமாதிரியும், கோட்டான்மாதிரியும் படமெடுத்துக் குட்டிச் சுவராக்கி விடுவானாம். ஒலிப்பதிப்பவனுக்கும் முதலாளிகளுக்கோ,

டைரெக்டருக்கோ, நடிக்கோ மனக் கசப்பு இருந்தால், மனிதக் குரலையே மாற்றி பைசாசம், பூதம் முதலியவைகளின் குரல் போலும், கழுதை நாய் நரி முதலியவைகளின் குரல்போலும் செய்துவிடுவானும்.

இத்தனைக்கும் தப்பிப் பிழைத்தபின் கத்திரிக்கோல் பிரயோகம் நடக்கும்போது யார் யார்மீது யாருக்கு ஆத்திரமோ அவைகளை வைத்து முக்கியமான இடங்களை வெட்டி எறிந்து படத்தையே குட்டிச்சுவர் அடித்துவிடுவார்களாம். இத்தனை பயங்கரச் சுழல் காற்றல்லவா அந்தச் சினிமா லோகத்தில் அடிக்கிறதாம். இம் மாதிரி கெடுத்துப் பாழாக்கியதினால்தான் சிலருடைய படம் பல னற்று விட்டது. அதில் நடித்தவர்களின் பெயரும் கெட்டு அவர்கள் தலை எடுக்கமுடியாதபடி ஆகிவிட்டதாம்.

எல்லோருடைய இஷ்டப்படியே ஒரு நடி நடந்துகொண்டால், அவள் சர்வமோசமாக நடித்தும், பாடியுமிருந்தாலும் பலே செல் வாக்குடன் நடத்தப்பட்டு எல்லோராலும் கொண்டாடப்படு கிருளாம். நல்ல கம்பெனி, நல்ல டைரெக்டர் முதலிய எல்லோரும் யோக்கியமாயிருக்கும் இடத்தில்தான் படங்களும் வெற்றியுடன் ஓடுவதோடு நடிக,நடிகளுக்கும் நல்ல பெயர் இருக்கிறதாம். இத்தனை விபரீதங்கள் இருப்பதை யறிந்தும், நான் எப்படியம்மா கண்ணை மூடிக்கொண்டு அதில் கால் வைப்பது? எனக்குப் பயமாக விருக் கிறதே!

ஒயிலா:—நீ நாசமாய்ப்போனே! பயமாம் பயம்! உன்னை என்ன புலி கரடி விழுங்கிவிடுகிறதா? அங்கு உன் போன்ற எத்தனை பெண்கள் நடிக்கிருர்கள். அவர்களெல்லாம் மனுஷ்யர்கள் இல்லையா! நீ தானு உலகத்தில் பிறக்காமல் அதிசயமாய் ஆகாயத் திலிருந்து குதித்துவிட்டாய்? உன் வீண் விதண்டா வாதங் களெல்லாம் எனக்கு வேண்டாம். என் கேள்விக்குப்பதில் உண்டா, இல்லையா! ஒரே பேச்சில் முடித்துவிடு.

நிர்மலா:—அம்மா! எந்தப் புத்தில் எந்த பாம்பு, எந்தத் தேள் இருக்கிறது என்பதை யறியாமல் புதையலிருப்பதாக எண்ணிக் கையை வைத்துவிடு என்று சொல்வது போலிருக்கிறது உன்

வார்த்தை. அப்படி முன்பின் தெரியாமல், நான் எதுவும் செய்து விடமாட்டேன். அங்குச் சென்றால் பெரிய ஆபத்துக்கள் வருமென்று....

ஒயிலா :—ஓஹோ! ஆபத்தா வரும். ஆமாம் நீ பெரிய குலத்தில் பிறந்த சீமாட்டியோ இல்லையோ! நீ என்னதான் உன்னை மகா உயர்ந்தவள் என்று நினைத்துக்கொண்டிருந்தாலும் நீ தேவடியாள் பெண் என்றுதான் உன்னை ஊரார் சொல்லுவார்கள். அதை மாற்ற நீ இன்னொரு ஜன்மம் எடுத்தாலன்றி முடியாது. அனுவசியமாக வார்த்தையைக் கொட்டி யளக்காதே. நாளை கண்டிப்பாய் சினிமா முதலாளி வருவார். அவர் வந்த உடனே உன்னுடைய பிடிவாத புத்தியை விட்டுவிட்டுச் சரியானபடி பேசி முடித்துக் கொண்டு அட்வான்ஸைக் கையில் வாங்கிக் கொள்ளவேண்டும். தெரிந்ததா?

நிர்மலா :—அம்மா! உனக்கேன் இத்தனை ஆத்திரமும் ஆசையும் தாண்டவமாடுகிறது? நான் செய்துள்ள பாபத்தினால் தான் இந்தப் பாழும் குலத்தில் பிறந்துவிட்டபோதிலும் அதன் துர் நாற்றத்தை யடியோடு அகற்றி குலத்திற்கே பரிமளத்தை உண்டாக்குவதற்குத்தான் நான் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறேன். என்னுயுட்குள் அம்மாதிரி ஓர் புதிய சீர்திருத்தத்தைச் செய்யாமல் நான் சாகப் போவதில்லை. ஆகையால் நீ வீணாக உடம்பையும் மனத்தையும் அலட்டிக்கொள்ளாதே! உன்னுடைய சௌகர்யத்திற்கும் செலவுக்கும் பங்கமில்லாது நான் உனக்குச் செய்துகொடுக்கிறேன். ஆகையால், நீ எதற்கும் கவலைப்படாதே! உன் இஷ்டப் படியே சினிமா முதலாளி வரட்டும்; அவனிடம் நானே நேரில் பேசிக்கொள்கிறேன். நீ யாகட்டும், மணியாகட்டும் வாயைத் திறக்காதேயுங்கள். மத்தியில் பேசாமல் என் இஷ்டப்படியே விட்டு விட்டால், நான் பேசி முடித்துக்கொள்கிறேன். தெரிந்ததா! என்றாள்.

இவ்வளவாவது அவள் வாயில் வந்தால் போதுமென்று காத்திருந்த ஒயிலாம்பாள், அதற்குமேல் வாலாட்டாமல் போய்விட்டாள். மறுநாள் சாயங்காலம் எப்போது வருமென்றே உட்கார்ந்

திருந்தாள். மாலை 6 மணி சுமாருக்கு, சினிமா முதலாளியின் கார் வந்தது. அதிலிருந்து இறங்கி வந்த மனிதன், "அம்மா! உங்களை முதலாளி அங்கேயே அழைத்துக்கொண்டு வரச்சொல்லி கார் அனுப்பி இருக்கிறார்" என்றான்.

ஒயிலாம்பாள் பரபரப்புடன் உள்ளே ஓடிப்போய், "அடி! நிர்மலா! உன் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். முதலாளியின் முகத்தைப் பார்ப்பதற்கு முன்பே, ஒரு வார்த்தை வாயிலிருந்து வருவதற்கு முன்பே, உனக்கே உனக்கென்று மோட்டார் காரைக் கொடுத்து அதிலேயே உன்னை வரச்சொல்லிவிட்டாராம். பார்த்தாயா அவர் தாராள மனமும் உன்னிடமுள்ள மதிப்பையும்" என்று கூறி முடிக்குமுன்னர், நிர்மலா முகத்தைச் சுளித்தபடியே அங்கு நிற்பவனை நோக்கி, "ஐயா! அழைத்த இடத்திற்கெல்லாம் கூலிக்காரிபோல் ஓடி வருவதற்கு மரியாதை கெட்ட மனுஷி நானல்ல. உங்கள் முதலாளியின் கர்வம் அவர் மட்டும் இருக்கட்டும். என்னோடு பேசவேண்டிய அவசியமிருந்தால், என் வீட்டிற்கு வந்து பேசிக்கொள்ளச் சொல்லும். நான் அங்கே வரமுடியாது. யாராவது அரை வாயால் வாவென்று கூப்பிடுவார்களா! என்று ஓடிப்போகக் காத்திருக்கும் கோஷ்டியில் நான் சேர்ந்தவளல்ல என்பது என்றைக்கும் ஞாபகமிருக்கட்டும். போய் வாரும்" என்று கண்டிப்பாய்க் கூறி, முடுக்காய் உள்ளே போய் விட்டாள்.

அங்கு நின்ற மனிதனின் முகம் கருத்துச் சுருங்கியது. பேந்தப் பேந்த விழிக்க வாரம்பித்துவிட்டான். நிர்மலாவின் சொல் விபரீத வாணம்போல் ஒயிலாம்பாளின் நெஞ்சைத் துளைக்கிறது. நிர்மலாவை முழித்துப் பார்க்கிறாள். கண்ணைச் சுழட்டுகிறாள். கோப ஜுவாலை முகத்தில் தாண்டவமாடுகிறது. இந்நிலையில் நிர்மலா போய்விட்ட பிறகு, அந்த மனிதனை நோக்கி, "ஐயா! இதோ பாருங்கோ! அவள் சொல்லிய வார்த்தைகளை நீங்கள் கடுமையாக எடுத்துக் கொள்ளவேண்டாம். நான் தவமாய் தவங்கிடந்து இவளைப் பெற்று வெகு செல்வமாய் வளர்த்துவிட்டதால், கொஞ்சம் முன் கோபம் வந்துவிடுகிறது; அவ்வளவுதான். அவள் குணம்

அத்தனையும் தங்கக் கம்பிதான். நீங்கள் வித்தியாசமாக எதுவும் நினைக்காமல், முதலாளியை நானே இங்கு வரச் சொல்லியதாகச் சொல்லி, மெல்ல அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்" என்று சமாதானப்படுத்திப் பேசினாள். அவனும் தலையசைத்துக்கொண்டே போய்விட்டான். முதலாளி, 'வருவாரோ வரமாட்டாரோ' என்று ஒயிலாம்பாளின் வயிற்றில் கலக்கம் உண்டாகிவிட்டது.

## 24

வீட்டுக்குச் சென்ற சுரேந்திரன் மிக்க சந்தோஷத்துடன் கடைக்குப்போய்த் தனக்குச் சில உடைகள் வாங்கிக் கொண்டு வந்தான். மூன்று மணிக்கு மானேஜர் சொல்லியபடியே கம்பெனிக்கு வந்தான். மானேஜர் இவனை வரவேற்று ஒரு தனி விடுதிக்கு அழைத்துக்கொண்டு போய், பாட்டு வாத்தியாரிடம் அவனை அறிமுகப்படுத்திப் பின்னர், "ஐயா! இவருக்கு அந்த டாக்கி பாடலைக் கற்றுக்கொடும். புதிய நடி வரப் போகிறாளே அவளுக்கும் இவருக்குமாகச் சேர்த்து அந்தத் தர்க்கப் பாடலைச் சொல்லிக் கொடுத்து நிமிஷப் பிரகாரம் சரியாக, டயம் பார்த்துவிடும். இரண்டே நாளில் இதை ரிகார்டு செய்து 15 தினத்திற்குள் கொண்டு வந்துவிடவேண்டும். என்ன தெரிந்ததா! சுரேந்திரா! தைரியமாகக் கற்றுக்கொள்ளும்" என்று கூறிவிட்டுச் சென்றார்.

சுரேந்திரன் ஏதோ பள்ளிக்கூடத்தில், எஸ். எஸ். எல். ஸி. வரையில் படித்தவனே யன்றி, வெளி விவகாரங்களோ வீண் அரட்டலோ ஒன்றுமே தெரியாது. சகவாஸமும் நல்லதாகவே அமைந்துவிட்டதால், அவன் வெகு பரிசுத்தவானாகவே இருந்தான். உபாத்தியாயர் முதலில் இரண்டொரு பாட்டுக்களை அவனுக்குக் கற்றுக்கொடுத்தார். சுரேந்திரன் தைரியமாகவே அவைகளைக் கற்றுக்கொண்டு பாடம் செய்து கொண்டிருக்கையில், புதிய

பாடகியை அங்கு மானேஜர் அழைத்து வந்தார். அப்பாடகியின் முகத்தில் உண்டாகிய சந்தோஷமும் தேஜஸும் கூறத் திறமில்லை. வெகு தைரியத்துடனும் வெகுநாள் வரையில் பழகிய மனுஷி போலும் தட தடவென்று வந்து அத்தனை ஆண் பிள்ளைகளின் மத்தியில் உட்கார்ந்துகொண்டு, சுரேந்திரனை இமைகொட்டாது பார்த்தாள்.

இவளுடைய தடபுடல் அட்டகாஸங்கள், மகா மானியாகிய சுரேந்திரனின் மனத்தில் அச்சத்தையும் ஒரு மாதிரியான ஆச்சரியத்தையும் உண்டாக்கின. அவன் தான் பெண்போன்று நாணிக் கோணி நெளிந்து சற்று ஒதுங்கிக்கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான். அங்கு வந்த மனேஜர் சுரேந்திரனை நோக்கி, "சுரேந்திரா! இந்தம்மாள்தான் இனிமேல் பெரிய நக்ஷத்திர நடிகையாகப் போகிற ஜீவரத்தினம்மாள். இவர்களின் சங்கீதம் அருமையாக விருக்கும். இவர்களுடன் சேர்ந்துதான் நீர் பாடவேணும். வாத்தியாரே! சரியாகச் சொல்லிக்கொடுத்து சீக்கிரம் தயார்செய்து விடும். ஜீவா! இவர் மிஸ்டர் சுரேந்திரநாத். வெகு அழகாகப் பாடுகிருர். சரி! நான் வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார்.

வாத்தியார் உடனே டாக்கி பாட்டைக் கற்றுக் கொடுக்க வாரம்பித்தார். உம். ஜீவா! பாடு.

பாட்டு

வாத்தியார் :— "என் பிராணேசா! உம்மீதில் காதலாகினேனே!"

இதோ இந்தக் காகிதத்தில் எழுதி இருக்கிறேன். இதைப் பார்த்துக்கொண்டே சொல்லு அம்மா!

ஜீவா :— என் பிராணேசா உம்மீதில் காதலாகினேனே. நாம்
கரங் கோர்த்துப் பூங்காவில் களிப்பெய்துவோமே!

என்ற இரண்டடிகளை ஜீவா திரும்பத் திரும்ப பாடியவாறு சுரேந்திரனைப் பார்ப்பதும், கண்ணை உருட்டி முகத்தைக் குலுக்கி உடம்பை நெளிப்பதும், சங்கதிகள் போட்டும் அந்தச் சாக்கில் பலதரம் அதே அடிகளைப் பாடி வருவதும், சுரேந்திரனுக்கு

ஏதோ மனத்தில் சங்கடத்தையும் வேதனையையும் சகிக்க முடியாத படி செய்ய வாரம்பித்தன. அவள், தன் கடமைப்படி பாடாமல், தனக்காகவே குலுக்கிப் பிலுக்கி நடித்து, தளுக்கு செய்வதுபோல் அவன் மனத்தில் தோன்றிவிட்டது.

இந்தப் பக்கமும் திரும்ப முடியவில்லை. திருடன்போல் திருகத் திருக விழிக்கிறான். முகம் சுருக்கு விழுந்து வேதனையைக் காட்டு கிறது. அச்சமயம் வாத்தியார் சுரேந்திரனை நோக்கி, "சார்! அடுத்த இரண்டடிகள் உங்களுடையது. இதோ இந்தக் காகிதத் தைப் பார்த்தபடியே பாடும்" என்று சொல்லிக் கொடுக்க வாரம் பித்தார்.

பாட்டு

என் மானே ! மாரன் வாளி பாயுதே என் நெஞ்சம்
தீயுதே யுன் அன்பால் நோயைப் போக்குவாயே !—என்

என்று எழுதி இருந்த இரண்டடிகளைப் பாடும்போது சுரேந்திர னின் வெறுப்பும் மனக் கசப்பும் அவனைப் பீறிக்கொண்டு வெளிப் பட்டு விட்டது. இந்தமாதிரி காதல் பாட்டுக்கள் அவன் கேட்டதே இல்லையாதலால், அவனுக்கு இது மிகவும் அருவருப்பாயிருந்தது. அவன் மிகவும் வணக்கத்துடன், "ஏன் சார்! இதுவா டாக்கி பாட்டு. இது என்னமோபோ லிருக்கிறதே! வேறு பாட்டுக் கிடை யாதா?" என்று கேட்டான்.

வாத்தியார் :—சார்! இது சாதாரணமான பாட்டல்ல. டாக்கி பாட்டு; தெரியுமா! "துர்ப்போதனை" என்ற படத்தின் பாட்டு. அதில் வரும் காதல் பாட்டைப் பாடித்தானே தீரவேணும். எனக்கு எஜமான் உத்திரவுப்படி இதைத்தான் உங்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். உம். பாடும்.

ஜீவா :—கட கடவென்று நகைத்துக்கொண்டே சுரேந்திரனை நோக்கி, "ஏன் சார்! காதல் பாட்டுப் பாடுவதற்குக்கூட யாராவது ஆக்ஷேபனை செய்வதுண்டா? காதல் சம்பாஷணைக்குக் காத் திருக்கும் காலத்தில் இந்தப் பாட்டிற்கு........

சுரேந் :—சரி! என்னிடம் இந்தப் பேச்சுக்கள் வேண்டாம் அம்மா! காத்திருப்பவர்களிடம் பேசினால் பலன் உண்டாகும்....

சரி! சொல்லுங்கள் வாத்தியாரே என்ருன். பிறகு வாத்தியார் சொல்லிக் கொடுக்க வாரம்பித்தார். இந்தப் பாட்டிலுள்ள அர்த்தத்திற்குமேல் ஜீவா செய்யும் சாகஸம், அவனுல் சகிக்கவே முடியவில்லே.

இவ்விதம் வாத்தியாரிடம் இரண்டு நாட்கள் கற்றுக் கொண்ட பின்னர், இருவரும் டயம் பிரகாரம் பாடிப் பழக வாரம்பித்தார்கள். அச்சமயம் அவள் பாடலிலுள்ள அர்த்தத்தின் படியே நடிக்கவே ஆரம்பித்து விட்டாள். "ஆரணங்கே ஆர்வமுடன் அணேந்திட வாராய்" என்று சுரேந்திரனின் பாகத்தைப் பாடும்போது, ஜீவா வலுவில் அவனே அணேந்துவிடவும் தயாராகி விட்டதைக் கண்ட சுரேந்திரனுக்கு, வெகு கோபம் வந்துவிட்டது. "சீச்சீ! வெட்கங் கெட்டவளே! உன் காரியம் பாடுவதே யல்லாது பல்லிளிப்பது அல்ல. இம்மாதிரி அநியாயம் செய்தால், மானேஜரிடம் தெரிவித்து விடுவேன். ஜாக்கிரதையாய் தூர விரு" என்று அதட்டினுன்.

ஜீவா :—இதுதான் தருணமென்று எண்ணி, "சுரேந்திரா! வெறும் தடபுடல் செய்கிறீரே இதுவா அழகு. தாசிகள் எப்போதும் பணம் பணம் என்று பேயாய்ப் பறப்பார்கள் என்பதை மறந்து விட்டீரோ! ஆயிரம் ஆயிரமாய்க் கொண்டு கொட்டும் குபேர சீமான்கள் என் காலடியில் சரணுகதி செய்யக் காத்திருக்கிருர்கள். அப்படியிருந்தும் பரம தரித்திரரான உம்மைக் காசுக்காக வல்லாமல் என் ஆசைக்காகச் சந்தோஷமாக அடையவே இந்தக் கம்பெனி மானேஜருக்கு என் அண்ணன் மூலம் தூபம் போட்டு, உம்மை இந்த வலேயில் இழுத்து உமக்கே பணம் வரும்படி உதவி செய்தேன் என்ற ரகசியம் உமக்குத் தெரிந்த பிறகாவது என்னே வெறுக்க மாட்டீர் என்று நம்புகிறேன். தாசிகளின் தன்மையில் தாசிகளுக்கு உண்மையாகக் காதலே இல்லே என்று எண்ணுகிருர்கள். அது தான் சுத்த தப்பு.

அவர்களுக்கும் காதலுண்டு. அன்பு உண்டு. ஆனல், பணத்தின் முன்பு அது மறைந்துவிடுகிறது. காதலித்தவன் கைக்குக் கிடைப்பதில்லே. கிடைத்தாலும் பணமில்லே. பணமில்லாதவனேடு

நட்புக்கொண்டால் ஜாதியார் பரிகசிப்பார்கள். இவைகளை உத்தேசித்துக் கைவிட்டு விடுகிருர்கள். நான் எல்லாவற்றையும் யோசித்து, உமக்கு வருமானத்தையும் உண்டாக்கி, இந்தத் தொழிலையுங் காட்டி, என் அன்பையும் வலியக் கொடுக்கிறேன். தெரியுமா! வீணுக மறுத்து வாதம் செய்வது அழகல்ல" என்று வெகு கனிகரத்துடன் மதுரமாய்க் கூறினுள்.

சுரேந்திரன் "அட கிரகசாரமே! ஏதோ சந்தோஷமும் அதிர்ஷ்டமும் உதயமாகிவிட்டதென்று நினைத்தால், அது பெரிய சுழல் காற்றில் கொண்டுவிடும்போல் இருக்கிறதே! என்ன செய்வேன்?" என்று தனக்குள் எண்ணியபடியே ஜீவாவை உற்று நோக்கினுன். அவள் முகம் அவனுக்குப் பிசாசைப் பார்ப்பதுபோல் தோன்றியது. வெறுப்பினுல் முகத்தைச் சுளித்துக்கொண்டு, "அப்படியானுல் நீ என்னைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதற்குத்தான் கங்கணங் கட்டிக்கொண்டாயோ!" என்ருன்.

ஜீவா, "அப்படி யொன்றுமில்லை. நீர் இனி தனி விடுதியில் தவிக்க வேண்டாம். என் வீட்டோடு வந்து விடும். நாம் இருவரும் சுகமாக விருக்கலாம். டாக்கீயிலும் நடித்துப் பெரும் புகழும் பணமும் அடையலாம். இல்லையென்ருல் உமது இந்த முதல் ரிகார்டிலேயே உமது குரலை பைசாசத்தின் குரல்போல் விகாரப் படுத்தியும், அபஸ்வரக் குடுக்கை போல் செய்தும் உமது பாட்டு எடுபட முடியாதபடிக்குக் குட்டிச்சுவர் அடித்து விடுவேன்; தெரியுமா? அந்த எஞ்சினீயர் என் கைக்குள் பொம்மை போன்றவன்; தெரியுமா? என் கண் வீச்சில் கதி கலங்கி விடுவான். என் சொல்படிதான் ஆட்டம்; என் அண்ணன் சட்டந்தான் மானேஜருக்குத் திட்டம். நீர் விருத்திக்கு வர வேண்டுமா, விநாசகாலமாய் முடியவேண்டுமா என்பதை யோசித்து நாளையதினம் தீர்ப்புக் கூறிவிடும். நாளை மறுநாள் ரிகார்டு செய்யப் போகிருர்கள்; தெரியுமா!' —என்று கடுபிடியாகப் பயமுறுத்திவிட்டு முடுக்காய் ஓடிப்போய் விட்டாள்.

அந்தோ, பாவம்! தனக்கு ஏதோ பிழைப்பு கிடைத்துவிட்டதென்று சந்தோஷப்படுவதற்குள் இப்படியா ஓர் பிசாசு பிடிக்க

வேண்டும். இந்த உபத்திரவத்திற்கு என்ன செய்வது என்று சுரேந்திரன் இடிந்துபோய் விட்டான். அவன், மனம் எண்ணா ததும் எண்ணிப் புண்ணாய்த் தவித்தபடியே வீட்டிற்குச் சென்றான்.

## 25

சினிமா முதலாளியும், இன்னொரு ஆசாமியும் ஒயிலாம்பாளின் கவலையைப் பறக்கடிக்கும் பொருட்டு வந்தார்கள். ஒயிலாம்பாளின் முகமலர்ச்சியைக் கூற வேண்டுமா? "வாருங்கள்! வாருங்கள்" என்று நல்வரவு கூறிய படியே அவர்களை அழைத்துச்சென்று, நிர்மலாவின் தனிவிடுதியில் உட்காரவைத்துப் பின் "அம்மா! கண்ணா! இவாதான் சினிமா முதலாளிகள். உன்மீது இவர்களுக்கிருக்கும் ஆசையும் மதிப்பும் சொல்ல முடியாது. தினம் பதினாயிரந்தரம் மணியுடன் சொல்லியனுப்பிக் கொண்டே இருந்தா. ஐயாவுக்கு வெற்றிலை பாக்கு கொண்டு வந்து குடு" என்றாள்.

நிர்மலாவின் முகத்தில் எள்ளுங் கொள்ளும் வெடிக்கிறது. தாயாரை ஒரு முழி முழித்துப் பார்த்தாள். "சரி சரி! நீ இத்தனை பீடிகைகள் போடவேண்டாம். இவரை எனக்குத் தெரியும். நீ உட்காரம்மா! என்ன ஐயா சமாசாரம்? வந்த வேலையைச் சட்புட்டென்று முடிக்கலாம்" என்று சற்றுக் கடுமையாகவே பேசியதைக் கேட்ட சினிமா முதலாளிக்கு ஒருமாதிரி யாகிவிட்டது. சற்று நிதானித்தவராய் பல்லைப் பிளந்துகொண்டு "எங்க சமாசாரங்களை எல்லாம் மணி உங்களுக்குச் சொல்லி இருப்பார் என்று நினைக்கிறேன். நாங்கள் ஒரு சமூகப்படம் எடுக்கப்போகிறோம். அதில், நீங்கள்தான் கதாநாயகியாக நடிக்கவேண்டும். தொகையைப் பற்றி மணியிடம் தெரிவித்திருக்கிறேன். நீங்கள் இன்றே அட்வான்ஸ் வாங்கிவிடலாம்" என்று கூறி முடிப்பதற்குள் நிர்மலா இடைமறுத்து "என்ன கதை எடுக்கப் போகிறீர்கள்? கதையின்

சாரமென்ன? கதாநாயகியின் அம்சங்களென்ன? கதை யார் எழுதியது? கற்பனையா அல்லது மொழிபெயர்ப்பா?" என்று அடுக்கடுக்காகப் பல கேள்விகளைக் கேட்டாள்.

முதலாளி :—கதை வெகு ஸ்வாரஸ்யமானது. யார் எழுதினார்கள் என்றதைப்பற்றி நமக்கு அவசியமே இல்லை. இக் காலத்தில் கதைக்கா பஞ்சம்? தினம் பத்துபேர் கத்தை கத்தையாகக் கதைகளை எழுதிக்கொண்டு எங்கள் கம்பெனி வாசலில் வந்து காலையும் மாலையும் நிற்கிறார்கள். அது மொழிபெயர்ப்பானால் என்ன, கற்பனையானால் என்ன, கத்தரிக்கோல் கதையானால்தான் என்ன? கதை சுமாராயும் சீப்பாயும் கிடைத்துவிட்டால் போதும். பெரிய எழுத்தாளர்கள் எல்லாம் பணம் நிறையக் கேட்கிறார்கள். இம்மாதிரி வலுவில் கொண்டு வருகிறவர்களுக்கு நாமாகப்பார்த்துக் கொடுத்ததுபோதும். அதோடு படித்துப் பார்த்துப் பிடிக்காவிட்டால் வீசி எறிந்துவிடுவோம். பிடித்தமாயிருந்தால், அதில் ரஸமான பாகத்தை எடுத்துக்கொண்டு பிடிக்கவில்லை என்று கொடுத்துவிடுவோம். இப்படியே பத்துக் கதைகளைப் பொறுக்கினால் ஒரு பெரிய கதை தொகுத்துப் படமாக்கிவிடலாம்.

"காதலின் ஜோதி" கதையின் பெயர். கதாநாயகி சிறந்த வீரப் பெண்மணி. குதிரை சவாரியும், ரயில் ஓடும்போது குதித்தும், ரயிலிலேயே எதிரியுடன் சண்டை போட்டும், வீட்டுக்கு வீடு தாவியும் பல மாறுவேடங்கள் அணிந்தும் வெகு அழகாய் நடிக்கும் பாகமாகும். கணவனைத் திருப்பும் பொருட்டு அவனுக்குப் பல வழிகளில் புத்திவரச் செய்வதற்காக இவள் திருடியாகிறாள். கணவனை இம்சிக்கிறாள்.

நிர்மலா :—(காதைப் பொத்திக்கொண்டு) போதும்; போதும் ஐயா! உங்கள் கதையின் ஸாரமே இத்தனை அழகாயிருக்கும்போது கதையைப் படித்தால், நடித்தால் எத்தனை ஆனந்தமாயிருக்கும்? எனக்கு இம்மாதிரி கதைகள் பார்க்கவே பிடிக்காது. என்ன ஸ்டண்ட் வேண்டி இருக்கிறது? ஐயா! நான் ஒரே வார்த்தையில் முடிக்கிறேன்: நான் நடிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், சகலமும் என்னிஷ்டப்படியே நீங்கள் நடக்கவேண்டும்.

அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டு அக்ரிமெண்ட் தயார் செய்தால்தான் நான் நடிக்கமுடியும். முதலாவது, கதை நீங்கள் எடுத்திருப்பது சற்றும் நன்ருக இல்லை. நானே கதையும் தொகுத்துத் தருகிறேன். அதைத்தான் நீங்கள் எடுக்கவேண்டும். கதையைப் படித்தாலும், பார்த்தாலும் அதில் ஒரு கடுகத்தனையாவது ஜனங்களுக்கு உபயோகம் இருக்கவேண்டும். குதிப்பதும், ஓடுவதும் குத்திக் கொலை செய்வதும், பெண்கள் பல வேடங்களில் தோன்றுவதிலும் லாபமென்ன? ஓர் பெரிய கொலைகாரனைப் பிடிப்பதற்கோ, பேராபத்திலிருந்து தப்புவதற்கோ, பிறருக்கு உதவி செய்வதற்கோ மேற்குறித்தவாறு செய்தால், ஒருவாறுபொருந்தும். அதை விடுத்து, வீண் கலாட்டா செய்வதாக ஒரு படம் ஏன் தயாரிக்கவேண்டும்?

முதலாளி :—அப்படியானல், நீங்கள் எம்மாதிரி இருக்க வேண்டுமென்கிறீர்கள்?

நிர்மலா :—எம்மாதிரியா! உலகத்தில் சகலராலும் இழிவாய் மதிக்கப்பட்டும், பாலைவனத்தினும் கொடிய நெஞ்சையுடையவர்கள் தேவ தாசிகள் என்று கவிகளால் பாடப்பட்டும், எலும்புருக்கி நோயைப்போல் குலமக்களை நாசம் செய்யும் வேசி குலமிருக்கிறதே அதிலுள்ள ஊழல்களை எல்லாம் விளக்கி அவர்களால் எத்தனை குல மக்களின் வயிறெரிந்து கண்ணீர் விட்டுக் கலங்கும் பரிதாபத்தையும் அதிக அக்கிரமம் செய்யும் வேசிகளும் விளங்காது பாழாய் அழிந்துபோகும் உண்மையையும், வேசி வலைப்பட்ட மைனர்களின் குடும்பமே சிதைவுண்டு போதலையும் இன்னும் பல அக்கிரமங்களையும் படத்தில் காட்டி, வேசி குலத்தின் இழுக்கைப் போக்கி, இனியாவது அவர்கள் மானமாய் வாழும் வழியைப் பாடங் கற்பிக்கவேண்டும். இம்மாதிரி கதைக்குச் சம்மதந்தானு!

முதலாளி :—(வியப்புடன்) ஐயோ! தாசிகள் எல்லாம் சண்டைக்கு வரமாட்டார்களா! அது சரியா?

நிர்மல :—உம். சினிமாவில் ஆட வந்துள்ளவர்களில் பாதிக்கு மேல் தாசிகள்தான். எத்தனையோ கதைகளில் தாசிகளையே தாறுமாருகத் திட்டி நடிக்கும் பாகத்தை அவர்களே நடிக்கவில்லையா?

தான் தாசியாக விருந்து தாசித் தொழில் செய்துகொண்டே அதைக் கண்டித்து நடிக்கையில், அதை இன்னும் விஸ்தாரமாகக் காட்டினால்தான் கோபம் வந்துவிடுமா! அப்படி கோபம் வந்தாவது தங்கள் ஊழல் தொழிலை நிறுத்தி ஒழுங்கான முறையில் நடக்கட்டும் என்றுதான் துணிந்து நானே அதைக் கதையாக எழுதி நடிக்கத் தீர்மானித்துவிட்டேன். முதல் காரியத்திற்கு ஒப்புக் கொள்ளுகிறீர்களா?

முதலாளி :—சரி! உங்களிஷ்டப்படியே ஆகட்டும். அதற்கு மேல்.........

நிர்மலா :—அதற்குமேலா! என்னுடன் நடிக்கவேண்டிய நடிகரோ, நடிகையோ நான் பார்த்து எனக்கிஷ்டமானபடிச் சேர்த்தால்தான் நடிக்கமுடியும். முக்கியமாக கதாநாயகன் என்னிஷ்டத்திற்கு விரோதமாகப் போடவேகூடாது. ஸ்திரீகளுக்கு நடிப்பு கற்றுக் கொடுப்பதற்கு ஒரு ஸ்திரீயே உதவி டைரெக்டராயிருக்க வேண்டும். மேக்கப் செய்வதற்கு ஸ்திரீகளுக்கு ஸ்திரீகளே தயார் செய்யவேண்டும். டைரெக்டர் தம் மனம்போனபடி எல்லாம் ஆட்சி செலுத்தக் கூடாது. மரியாதைக் குறைவாக 'வாடீ போடீ! வாடா போடா! அடே! புடே!' என்றெல்லாம் சிலர், நடிகர்களை அவமதிப்பாய் நடத்துவதாகக் கேள்விப்படுகிறேன். அம்மாதிரி எல்லாம் சொல்வார்களேயானல், அடுத்த நிமிடம் நான் அங்கு நிற்கமாட்டேன். யாராயிருப்பினும் மரியாதையுடன் நடத்தவேண்டும். முதலாளிகளும் அப்படியேதான் தெரிந்ததா?........

இந்த வார்த்தைகளெல்லாம் அவர் மனத்தில் விபரீதக் கிளர்ச்சியை உண்டாக்கிவிட்டன. இதுவரையில் ஆயிரக்கணக்கான நடிகர்களைப் பார்த்தாய்விட்டது. ஒருவராவது இம்மாதிரி கேள்விகள் போடவில்லை. முதலிலேயே இத்தகைய கறார் பேர் வழியாயிருந்தால், போகப் போக என்னமாய் முடியுமோ என்று சிறிது பயமும் உண்டாகிவிட்டது. அந்த எண்ணத்துடன் யோசித்துக்கொண்டிருப்பதை முகத்தால் அறிந்து கொண்ட நிர்மலா, ஒரு மாதிரியாக நகைத்துக்கொண்டே, "ஓகோ! ஏதோ பெரிய யோசனை செய்வதாகத் தெரிகிறது. முதலிலேயே இத்தனை கண்

டிப்பாகப் பேசும் இவளுடன் கடைசிவரையில் எவ்விதம் நடக்க முடியும் என்று நினைக்கிறீர்கள்போலும்! சரி. அப்படியாயின் எனக்கு அவசியமில்லை. தாங்கள் போய்வரலாம்" என்று தானே முடித்து விட்டாள்.

முதலாளி:—(ஒருமாதிரியாகப் பல்லை இளித்துக்கொண்டே) சே! சே! சே! அப்படிக்கெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் அம் மாதிரி நினைக்கவேண்டாம். விலைமகளாய்ப் பிறந்து இத்தனை ஒழுங்கா யிருப்பதைக் காண எனக்குண்டாகும் ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. சினிமாக்கம்பெனிகாரர்கள்மீதுமட்டும் குற்றம் கூறுவதில் பலனென்ன? எத்தனையோ நடிகைகள் தாசியாயினும் சரி, தாசி அல்லாதவர்களாயினும் சரி தாங்களே ஒழுங்கு தவறி நடப்பதனால்தான் எல்லாம் கெட்டு விடுகிறது. அந்தக் குற்றம் வெளியில் தெரியாமல், சினிமாவே கெடுதல் என்று ஜனங்கள் பொதுப்படையாகக் கூறிவிடுகிறார்கள். அந்த ஊழலை மாற்றுவ தற்கு உங்கள் தீர்மானம் வெகு பொருத்தமானதுதான். ஆனால், எங்கள் கம்பெனி அப்படிப்பட்டதல்ல. மிகவும் சுத்தமானது.

நிர்மலா:—ஐயா! சினிமாக் கம்பெனி பேரில் மட்டும் யாரும் கண்மூடித்தனமாகக் குறை கூற மாட்டார்கள். உலகத்திலிருக்கும் எல்லா சினிமாக் கம்பெனிகளும் ஊழலென்றும் சொல்லமாட் டார்கள். எங்கோ சிலர் அப்படி இப்படி இருக்கலாம். சில நடிகைக ளால் அவைகள் வெளியாகி விடுவதால், பொதுமக்களுக்குப் பயமும் அதிருப்தியும் உண்டாகி விடுகின்றன. உங்கள் கம்பெனி சுத்த மானதாக விருக்கலாம். இன்னும் ஒழுங்காக நடத்தி மற்றக் கம் பெனிகளுக்கு வழி காட்டியாகச் செய்யுங்களேன். என் தீர்மானங் களுக்கு ஒப்புக்கொள்வதாயின், நான் ஒப்பந்தத்தில் கையொப்பம் இடத் தயார்தான்.

ஒயிலா:—ஐயா! குழந்தை ஏதோ கண்டிப்பாய்ப் பேசுகிறாளே என்று நீங்கள் நினைக்கவேண்டாம். அவள் தங்கக் கம்பி என்றால், கம்பிதான். அவள்....

நிர்மலா:—அம்மா! நீ பேசாமலிரு. தங்கக் கம்பியும், இரும் புக் கம்பியும் இங்கு வேண்டாம். நான் அப்போதே சொல்ல வில் லையா?....ஐயா! நன்றாக யோசனை செய்துகொண்டு நாளை வாரும்.

முதலாளி:—ஹா! ஹா! அப்படியொன்றுமில்லை. எப்படியும் உங்களைக் கதாநாயகியாக ஏற்படுத்தியாகி விட்டது. இதோ இன்று வெறுங்கையுடன் போகாமல் இதை முதல் அட்வான்ஸாக வாங்கிக் கொள்ளவேண்டும்.—என்று கூறிக்கொண்டே ஆயிரம் ரூபாய் நோட்டு ஒன்றை நிர்மலாவின் முன் நீட்டினர்.

அதே சமயம் ஜீவா மிக்க ஒய்யாரமாய் குலுக்கிப் பிலுக்கிக் கொண்டே வெற்றிலை பாக்குத் தட்டுடன் அங்கு வந்து, "ஓகோ! முதலாளியா! இந்தாருங்கள்; வெத்திலை போட்டுக்கொள்ளுங்கள்" என்று கூறியவாறு, தட்டை முதலாளிக்கு முன்னல் வைத்துவிட்டுத் தானும் அவர் பக்கத்திலேயே சற்றும் கூச்சமின்றி உட்கார்ந்தாள்.

இதைக் கண்ட நிர்மலாவின் நெஞ்சம் குமுறியது. முகம் சிவந்தது. முதலாளிக்கும் கூச்சத்தினல் முகம் கோணியது. தன்னை யொருவாறு சமாளித்துக்கொண்டு நிர்மலாவை நோக்கி, "அம்மணீ! பார்த்தீர்களா! நடிகை இல்லாதவர்களே இம்மாதிரி செய்தால் நடிகைகளில் சிலர் செய்வதைக் கேட்கவேண்டுமா! தாமாக வலிய இவ்வாறு செய்தால், ஏன் கெட்டுப்போகாது? நான் ஒரு சினிமா கம்பெனிக்காரன் என்கிற பெயருள்ளவனே யன்றி, இதுவரையில் ஒழுங்கு தவறி நடந்தவனன்று. நான் பெரிய குடும்பி. 10 குழந்தைகளுக்குத் தகப்பனர் நான். என் குடும்பபோஷணையே எனக்குப் பெரிய தொல்லையாயிருப்பதால் நான் எந்தவிதமான லாகிரிவஸ்துக்களும் உபயோகிப்பவனல்ல. ஆகையால் எங்களிடம் எந்தவிதமான வித்தியாசமுமின்றி இதைப் பெற்றுக்கொண்டு முதலில் ஒரு கையொப்பம் செய்யுங்கள்" என்றார்.

ஜீவாவின் முகம் கருத்து சுருங்கியது. ஆயிரம் ரூபாய் நோட்டையும், நிர்மலாவையும் பார்த்தவுடனே வயிற்றில் செய்யும் சங்கடம் கூறத் திறமில்லை. அதோடு முதலாளியின் வார்த்தை பாணம் போல் குத்தியது. அதற்குமேல் அங்கு உட்காரப் பிடிக்காமல் ஒரு திருப்பு திருப்பிக்கொண்டு கடுமையானபார்வையுடன் எழுந்து போய் விட்டாள். நிர்மலா முதலாளியை நோக்கி "பணத்திற்காகவே இவ்வுலகத்தில் பிறந்திருப்பதாயும், எந்த ஹீனமான வழியாயிருப்பினும் பாதகமில்லை பணம் சம்பாதித்தால் போதும் என்

றும், அதுவே ஜன்ம சார்த்தகம் என்றும் நினைப்பவள் இதோ இருக்கும் என் தாயார்தான். அவள் கையில் இன்னும் ஓராயிரம் ரூபாய் சேர்த்துக் கொடுங்கள். கையொப்பம் நான் செய்கிறேன். பணத்திற்காக பயப்படவேண்டாம். இன்னும் ஒருமாத தவணை கொடுங்கள். கதை எழுதி விடுகிறேன்" என்றாள்.

ஒயிலாம்பாளுக்குப் பணமான சொர்க்கத்தைப் பார்க்கும் போது இருக்கும் சந்தோஷத்தில் இவர்கள் பேசிய சுடுமொழிகளெல்லாம் சற்றும், உரைக்கவே இல்லை. பல்லை இளித்துக் கொண்டு இரண்டு கைகளையும் நீட்டிப் பணத்தை வாங்கிக் கொண்டாள். நிர்மலா வெகு கெட்டிக்காரியாகையால் ஒரு காகிதத்தில் தன் கையெழுத்திலேயே நான்கு வரிகள் எழுதி ரசீதுபோலும் அக்ரிமெண்ட்போலும் வாக்கியங்களைப் பிணைத்துக் கொடுத்துவிட்டாள். முதலாளியும் அதை எடுத்துக்கொண்டு இவர்களிடம் விடைபெற்று மறுநாள் வருவதாகக் கூறிச்சென்று விட்டார்.

ஒயிலாம்பாளின் முக மலர்ச்சியை என்னவென்றுதான் சொல்வது? நிர்மலாவின் மனம் முற்றும் கதைக்கு விஷயம் சேகரிப்பதற்காக கற்பனை உலகிற்குச் சென்று விட்டது. எனினும் தான் சில விஷயங்களை நேரில் அறிந்து உண்மைக்கு உயிர் கொடுத்து, பின் ஜோடிப்பதுதான் ருசி என்று தோன்றியதால், அந்த விஷயத்திலேயே ஈடுபட்டு விட்டாள்.

## 26

சுரேந்திரனின் மனம் ஒரே குழப்பமாக ஆய்விட்டதால் தான் பாடம் செய்யவேண்டிய பாட்டில் மனம் செல்லவே இல்லை. தனக்கு வலியவந்த பிழைப்பிற்கும் பங்கம் வந்து விட்டால் என்ன செய்வது. தன்னுடைய சங்கீதம் இதில் பிரபலமானல் பின்னல் தனக்கு ஏராளமான மதிப்பு உண்டாகும் என்று எண்ணியதற்கு மாறாக

அதைப் படுதோல்வி யடையச் செய்து விட்டால், தான் என்ன செய்வது என்ற பயம் அவனைப் பூர்ணமாகப் பிடித்து வாட்டு கிறது. எனினும் அவன் மனம் ஜீவாவின் விருப்பத்திற்கு இணங்க சற்றும் சம்மதப்படவில்லை யாதலால், தான் ரிகார்டு கொடுக்காமல் நிற்பதற்காக ஏதேனும் வழி செய்து விடலாம் என்ற தீர்மானமே தோன்றியது. பாடாவிட்டால் மானேஜர் கோபிப்பாரே அதற் கென்ன செய்வது என்ற யோசனையும் கூடவே தோன்று மல் இல்லை.

இத்தகைய நிலைமையில் அவன் புரண்டுகொண்டிருக்கையில், மானேஜர் கூப்பிடுவதாக ஒரு ஆள் வந்து தெரிவித்தான். சுரேந் திரனுக்குக் குலை நடுக்கம் எடுத்துக்கொண்டது. 'அந்தப் பாவி ஜீவா, மானேஜருக்கு ஏதோ வத்தி வைத்துவிட்டாள். அது பற்றிக்கொண்டு விட்டதோ என்னமோ! அதனுல்தான் திடீ ரென்று கூப்பிடுகிறுர் என்ற நடுக்கமும், பயமும் எடுத்துக் கொண்டுவிட்டது. அவள், தன்மீது ஏதாவது அபாண்டமானக் குற்றங்கள் சொல்லிக் கொடுத்திருப்பாளோ! என்னென்ன புதிய விஷயங்கள் வருமோ' என்று பயந்தவாறே கம்பெனிக்குச் சென் றுன்.

அப்போதுதான் மானேஜர் காரில் ஏறுவதற்காக வந்து ஏறியும் உட்கார்ந்துவிட்டார். சுரேந்திரனின் பயந்த முகத்தைப் பார்த்த மானேஜர், "சுரேந்திரா! இப்படி வந்து காரில் உட்கார். உம். என் தயக்கம்? ஏறு" என்று சற்று அதிகார தொனியில் கூறியதைக் கேட்டதும் சுரேந்திரனின் பயம் பின்னும் அதிகரித்து விட்டது. நடுங்கிக்கொண்டே ஏறி உட்கார்ந்தான். காரும் கிளம்பி விட்டது.

மானேஜர்:—சுரேந்திரா! ஏன் இத்தனை மாறுதல் உன் முகத்தில் தெரிகிறது? விஷயமென்ன? உடம்பு சரி இல்லையா! ஒன்றையும் ஒளிக்காமல் சொல்லு. உனக்கும் ஜீவாவுக்கும் நடந்த சகல விஷயமும் எனக்குத் தெரியும்—என்று சொல்லுவதைக் கேட்கும்போது சுரேந்திரனின் தேகமே ஒரு குலுக்குக் குலுங் கியது. ஒருமாதிரியாய் விழித்துக்கொண்டே, "சார்! என்மீது...."

என்று சொல்கிறான். வாய்க் குழறிவிட்டது. கண்ணிலும் ஜலம் முட்டிவிட்டது. "சுரேந்திரா! உன்மீது குற்றமே இல்லை என்பதை நான் நன்றாக அறிவேன். அறிந்ததனால்தான் உன்னை வரவழைத்து வலிய என் பக்கலில் உட்காரச் செய்திருக்கிறேன். இது தெரிய வில்லையா! நான் உன்னைக் கண்டிக்கக் கூப்பிட்டதுபோல் நீ எண்ணி, இத்தனை பயமும் நடுக்கலும் அடைந்து விட்டாய்."

சுரேந் :—சார்! உண்மையில் என் மனம் தவிக்கும் தவிப்பைக் கூறவே திறமில்லை. இங்கு வந்து சேருவதற்குக்கூட முடியாமல் கால்கள் உதறல் எடுத்துவிட்டன. ஏதோ பெரிய விபரீதம் நடந்து விட்டதாகவே நான் நினைத்து வந்தேன். கடவுள் என் பங்கி லிருந்து காப்பாற்றினார் என்றே நினைக்கிறேன். உங்களுக்கு விஷயம் எப்படித் தெரியும்?

மானேஜர் :—"ஜீவாவும் நீயும் சரியாகப் பாடம் செய்கிறீர்களா வென்பதைக் கவனிக்கும் பொருட்டுக் கதவருகிலேயே நின்று இடுக்கால் கவனித்தேன். சகல விஷயத்தையும் நானே நேரில் கண்டுகொண்ட பிறகு எனக்கே மிக்க ஆத்திரமும் கோபமும் உண் டாகிவிட்டன. இருக்கட்டும்; வேறு என்ன நடக்கிறது பார்க்கலா மென்று நினைத்துப் பேசாமல் போய்விட்டேன். நீ சரியாய்ப் பாடவில்லை என்றும், துன்மார்க்கமாக நடக்கும் சோதாவாயிருப்ப தாயும் ஜீவா கயிறு திரிக்கத் தயாராயிருப்பதை யறிந்துகொண்டு, அம்மாதிரி விஷயம் பரவாது இருக்கவேண்டியே ஜீவாவை அந்தப் பாட்டைப் பாடவேண்டாமென்றும் அவளைவிட அழகாய்ப் பாடும் வேறொருத்தி கிடைத்திருப்பதால், ஜீவா தனியாகப் பாடினால் போதுமென்றும் இப்போதுதான் தெரிவித்து அனுப்பிவிட்டேன்.

அவளுக்கு அவ்விஷயம் அதிக அதிர்ச்சியை உண்டாக்கி விட்டது. உன்னை எந்த வழியிலும் இந்தப் பிளேட்டின்மூலம் முன் னுக்குக்கொண்டு வருவதற்கு நான் எடுத்துக்கொண்ட பிரயாசை யை விட்டுக்கொடுக்க மாட்டேன். ஆகையால், நீ எதற்கும் பயப் படவேண்டாம். உன்னையே அந்தப் பாடகியின் வீட்டிற்கு அழைத் துச் செல்லவே இங்கு வரவழைத்தேன். தைரியமாகப் பாடு. ஜீவாவைப்போல் மானங்கெட்ட பெண்ணல்ல இவள். ஆகையால்,

தைரியமாயும் அழகாயும் பாடு. ரிகார்டு செய்யும் தேதியை ஒத்திப் போட்டுவிட்டேன்.—என்று கூறிக்கொண்டே ஒரு பெரிய மாடி வீட்டு வாசலில் வண்டியை நிறுத்தினர்.

இம்மாதிரி தனக்கோர் நல்ல செய்தியும் அனுகூலமும் கிடைக்கு மென்று கனவிலும் அவன் கருதாது பயந்துகொண்டே இருந்த தற்கு, மானேஜரின் வார்த்தைகள் அவனைப் புத்துயிர் பெறச் செய்தன. இந்தச் சந்தோஷத்தைத் தாங்கமாட்டாது கண்ணி லிருந்து இரு துளி ஜலமும் பெருகியது. அதே சமயம் வண்டி நின்றது. மானேஜர் இறங்கி 'ஊம். சுரேந்திரா! என் கூட வா. ஏன் தயங்குகிறாய்?' என்று கூறி, சுரேந்திரனையும் அழைத்துக்கொண்டு உள்ளே சென்றார்.

முன்பக்கத்து ஹாலிலேயே 'வலையில் யார் விழுவார்கள்?' என்று வலை போட்டுப் பார்த்துக்கொண்டிருக்கும் ஒயிலாம்பாள் காரிலிருந்து கம்பீரமாக இறங்கி வரும் மனிதரைக் கண்டதும், "வாருங்கள்! வாருங்கள்" என்று தன் ஜாதி முறைமை தவறாது அழைத்து ஆசனங் கொடுத்து அமரச்செய்த பிறகு, "என்ன சமா சாரம்?" என்று கேட்டாள்.

மானேஜர் :—உங்கள் மகள் நிர்மலாவைப் பார்க்க வந்தோம். நாங்கள் கிராமபோன் கம்பெனிக்காரர்கள்.

"ஆஹா! அப்படியா! இதோ கூப்பிடுகிறேன்" என்று அவள் தலைகால் தெரியாது சந்தோஷமாக ஓடிப்போய், "நிர்மலா! நிர் மலா!" என்று கத்தினாள். அப்போது நிர்மலா தான் நூற்ற நூலைச் சுத்தி வைத்துக்கொண்டிருந்தாள். ஒயிலாம்பாள் "நிர்மலா! யாரோ ஒருவர் கிராமபோன் கம்பெனிக்காரராம். உன்னைப் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள். அதிர்ஷ்ட தேவதை உன்னைப் பார்த்து அருள்புரிய வாரம்பித்துவிட்டதடீ! எழுந்து வா! எப்போ பார்த்தாலும் எழுதுவதும், நூற்பதுமா? இனிமேல் அவற்றையெல்லாம் நிறுத்தித் தொலைத்துவிடு" என்றாள்.

நிர்மலா, தாயை ஒரு முறை முழித்துப் பார்த்தபடியே அவைகளை வைத்துவிட்டு, நிதானமாக முன்பக்கத்துக்கு வந்தாள். மானேஜரும் சுரேந்திரனும் உட்கார்ந்திருந்தார்கள். மயில்போல்

நிர்மலா வருவதைப் பார்த்த உடனே சுரேந்திரனுக்குத் திடுக்கிட்டது. முன்பொரு நாள் கோவிலில் தனக்கு அலமு காட்டியவளும் பிறகு கோவிலில் நாட்டியமாடியவளும் ஒருத்தியேதான் என்பதை யறிந்ததும் அவனுடைய வியப்பு பன்மடங்காகப் பெருகியது.

நிர்மலா, அலமுவுடன் ஒன்ருகப் படித்த காலத்தில் பலதரம் சுரேந்திரனைப் பார்த்திருக்கிருள். ஆதலால், சுரேந்திரனைப் பார்த்ததும் தனது பழைய பள்ளிக்கூடத்து ஞாபகமெல்லாம் அவளுக்கு வந்துவிட்டது. அமரிக்கையாக வந்து உட்கார்ந்துகொண்டாள். சுரேந்திரனும் தன்னைப் பார்த்துத் தெரிந்துகொண்டதை வெகு சூக்ஷ்மமாகக் கவனித்துக் கொண்டாள். அவனிடம் ஒருநாள்கூட பேசியதில்லை எனினும் அலமுவைப்பற்றி விசாரிக்க வேண்டுமென்று நினைத்தாள். அவளுக்குத் தாளுக வலியப் பேசும் வழக்கமில்லை யாதலால், தன் மனத்துள் எழுந்த எண்ணங்களை உள்ளடக்கிக் கொண்டாள்.

மானேஜர் :—அம்மணீ ! உங்களைத்தான் பார்க்க வந்தேன். நாங்கள் ஓர் கிராமபோன் கம்பெனிக்காரர்கள். ரிகார்டிங் ஸெஷன் இப்போது ஆரம்பமாகப் போகிறது. அதில் நீங்கள் பாடவேண்டும். சில பாட்டுக்களை நாங்களே பொறுக்கி இருக்கிருேம். அதில் சிலவற்றை இவருடன் சேர்ந்து, நீங்கள் பாடவேண்டும். சிலவற்றை நீங்கள் மாத்திரம் பாடவேண்டும். அதைத் தவிர, உங்கள் இஷ்டப்படியே ஏதாவது சில பாட்டுக்கள் பாடுங்கள். இன்றே முடித்துக் கொண்டுபோய் விடவேண்டுமென்று வந்தேன். ஒரு பாட்டு, தயவு செய்து பாட வேண்டும்.

நிர்மலா :—ஓஹோ ! மெத்த சந்தோஷம்—என்று உடனே பாட உட்கார்ந்தாள்.

ஹிந்துஸ்தானி வர்ணமெட்டு

தாரணியின் ஜோதி ஸ்வரூப ஹரே ! ஏழைஜன நேசா !
இன்போல்லாசா ! ஜகத்தோத்தார ஹரே ! (தா)

சோதித்தல் சகித்திடேன் கண்ணு !
பிறவித் துன்பம் தவிர். (தா)

ஹிந்துஸ்தானி வர்ணமெட்டு

கோரி கோரி யான்முறை செய்து கூவும்
பேரொலி கேளாதேன் ?
சோதனை செய்திடல் நீதியோ ! உன்தன்
பாதமாதாரமே தாராயோ !
வாதனையால் மனம் வாடிடும் ஏழையைக்
காத்திட வாராயோ ! (கோ)

இவ்விரண்டு பாட்டுக்களையும் கேட்கையில் மானேஜர் மெய்ம் மறந்து விட்டார் என்றே கூறலாம். சுரேந்திரனுக்கோ நிர்மலா வின் பாட்டால் ஆனந்தப் பரவசமாகியது ஒருபுறமிருக்க, அவ ளுடன் தான் பாடுவதில் கட்டாயம் தோல்விதான் அடையவேண் டும் என்ற பயமும் அச்சமும் உண்டாகிவிட்டன. மானேஜர் சுரேந்திரனைப் பார்த்து, எப்படி என்று கேட்பதுபோல் தலையை அசைத்தார்.

சுரேந்திரன் என்ன பதில் சொல்வது? இத்தனை அருமை யாய்ப் பாடுகிறவளை விட்டுவிட்டு வேறொரு சனியனைப் பிடித்துக் கொடுத்த மணியை ஆங்கிலத்தில் திட்டினான்.

மானேஜர் :—அம்மா ! நான் உண்மையில் என்னையே மறந்து விட்டேன் என்றால் மிகையாகாது. பரம சந்தோஷமடைந்தேன். நாங்கள் புதிதாக இந்தக் கம்பெனி ஆரம்பித்திருப்பதால், இது உங்களைப்போன்ற பெரிய பாடகர்களால்தான் விருத்தியாக வேண்டும். முதலில் ஆறு பிளேட்டுகளுக்குப் பேசிக் கொள்வோம். அடுத்த ஸெஷனில் அதிகம் வைத்துக் கொள்ளலாம். ஆறு பிளேட்டுகளுக்கு 1000 ரூபாய் வைத்துக் கொண்டு, இப்பொழுதே 250 ரூபாய் அட்வான்ஸ் வாங்கிக் கொள்ளுங்கள். இது உங்க ளுக்கு மிகவும் குறைவாகத் தோன்றலாம். எங்கள் கம்பெனி புதி தாகையால், தயவு செய்து ஒப்புக்கொள்ள வேண்டும்.

நிர்மலா :—ஐயா ! நான் இம்மாதிரி முறையில் வரும் வருமா னத்தையோர் பெரிய தர்ம காரியம் செய்வதற்காகச் செலவழிக்கத் தீர்மானித்தே பாட ஒப்புக்கொண்டேன். உங்கள் பிரியப்படியே 1,000 ரூபாய் ரொக்கமும், ஒரு ரிகார்டுக்கு இரண்டணா ராயல்டி

யும் சேர்த்து அக்ரிமெண்டு எழுதுங்கள். இதனல் கம்பெனிக்கு நஷ்டமில்லை. ரிகார்டு நன்ருக வித்தால் தானே பணம். ஆகையால், அம்மாதிரி செய்யுங்கள். என்னுடைய தர்ம காரியத்திற்கும் உதவியதுபோலாகும். இதில் பேரம் வேண்டாம்.—என்று கூறினள்.

மறு பேச்சின்றி அக்ரிமெண்டாகிவிட்டது. உடனே கையில் பணம் கொடுக்கப்பட்டது. அன்று மாலையே கம்பெனிக்கு வரும்படியாகவும், கார் அனுப்புவதாகவும் சொல்லிவிட்டுச் சென்ருர். சுரேந்திரனின் மனம் குழம்பியது. தனக்கு ஆறு பிளேட்டுக்கும் 300 ரூபாய். ஒரு பெண்மணிக்கு 1000 ரூபாய் அதைத் தவிர ராயல்டி. "அடேயப்பா! அவளுடன்கூட நான் பாடி எவ்விதம் விருத்தியாகப் போகிறேன்?" என்றெல்லாம் அவனுக்கு யோசனை வந்துவிட்டது.

அன்று சாயங்காலமே நிர்மலா அங்கு சென்ருள். இருவரும் முன்போல் பாடங் கற்ருர்கள். அதிகம் வளர்த்துவானேன். இரண்டு மாதங்கள் உருண்டோடிவிட்டன. எந்த வீட்டில் எந்தக் கடையில், எந்த ஓட்டலில், விறகு தொட்டி முதல் எந்த இடத்தில் பார்த்தாலும் நிர்மலாவும், சுரேந்திரனும் பாடிய பாட்டுக்கள் மக்களின் செவிகளில் சதா ஒலித்துக்கொண்டே இருந்தன. நிர்மலாவையும் சுரேந்திரனையும் கொண்டாடாதோர் கிடையாது. சினிமாக்காரர்களின் கண்ணேட்டம் இவர்கள்மீது பாய வாரம்பித்தது.

இந்தப் புகழ்மாலையைக் கண்ட ஜீவாவுக்கு வயிற்றெரிச்சல் சொல்லத் திறமில்லை. நிர்மலாவையும் சுரேந்திரனையும் கொன்றுவிடலாமாவென்றும் தோன்ற வாரம்பித்தது. ரிகார்டுகளை உடைத்தெறியவும் குப்பையில் போடவும் அவர்களின் புகைப்படங்களைக் கிழித்தெறியவும் தலைப்பட்டாள். தான் வீசிய வலையில் மீனும் விழாமல் வலையும் அடித்துக்கொண்டு போகப்பட்ட செம்படவன் போல் ஜீவாவின் ஆத்திரம் பெருகியது.

ஒரு தினம், சுரேந்திரன்—நிர்மலா பாடிய ரிகார்டு எதிர் வீட்டில் பாடிக்கொண்டிருந்தது. அதைக் கேட்டு வயிறெரிந்து கொண்டிருக்கும் ஜீவாவுக்குச் சினிமாப் பத்திரிகையொன்றை மணி

கொணர்ந்து கொடுத்து 'இதைப் பாரு' என்றான். அதில் பின்வரும் விஷயம் எழுதப்பட்டிருப்பதுடன் நிர்மலா சுரேந்திரன் ஆகியவர்களின் புகைப்படங்களும் காணப்பட்டன. ஏற்கெனவே எரியும் அடுப்பில் எண்ணெயை ஊற்றியதுபோல் பொங்கிவரும் பொறாமை வெள்ளத்துடன் ஜீவா அதைப்படிக்க வாரம்பித்தாள்.

## சினிமா ரஸிகர்களுக்கோர் நல்விருந்து

கிராமபோன் ரிகார்டில் பாடலைக் கேட்டு நீங்கள் பரவசமடைந்திருக்கும் சமயம் அதே ஜோடிகளை நீங்கள் திரையில் கண்டு களிக்கும் காலம் சமீபித்துவிட்ட செய்தி மிகவும் சந்தோஷமானதல்லவா! கதாநாயகியே கற்பனைச் சித்திரம் ஒன்றைத் தயார் செய்து அதைத் தானே திறம்பட நடித்தும், பாடியும் உங்களை மகிழ்விக்கப் போகிறாள் என்றால், அது ஓர் உயர்ந்த விருந்துக்கு ஒப்பானதல்லவா? ஸ்ரீமதி நிர்மலா தேவியவர்களே எழுதிய சமூக சீர்திருத்த, கற்பனைச் சித்திரமான "விடுதலைச் சூரியன்" என்ற கதையை, ஸோலார் பிக்சர்ஸார் பேசும் படமாக வெகு விரைவில் எடுக்கப்போகிறார்கள். அக்கதையில் குலமக்களின் குடும்பத்திற்கே வேர்ப்புழுவாக விருக்கும் அஞ்சா நெஞ்சம்படைத்த தாசிகளின் அநியாயச் செயல்களும், பணப்பேராசை பிடித்துக் கொலைக்கும் துணிந்துவிடும் அதம புத்தியின் செய்கைகளும் குலமக்கள் தாசி வலையிலகப்பட்டுத் தவிக்கும் பரிதாபமும் உங்கள் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு கண்ணீரைப் பெருக்கச் செய்யும் என்பதற்குச் சற்றும் ஐயமே இல்லை. ஒத்திகைகள் மும்முரமாக நடந்து வருகின்றன. மற்ற விவரங்கள் அடுத்தடுத்து வெளிவரும்.

இதைப் படிக்கும்போதே ஜீவாவின் தேகம் திகு திகு என்று பற்றி எரிவதுபோலாகிவிட்டது. பத்திரிகையை வீசி எறிந்தாள். "தாசிகளின் ஊழலையா எழுதி நடிக்கப்போகிறாள்? இந்தக் கழுதை தாசியா, உயர் குல திலகமா தெரியவில்லையா! இத்தனை தைரியமா உண்டாகிவிட்டது? தன் குலத்தைத் தான் பழிக்கும் துர்ப்புத்தியுள்ளவள் ஓர் மனுஷியா! இருக்கட்டும்" என்று உறுமினாள். எதிரில் நிற்கும் மணியை கடுமையான பார்வையில் பார்த்தாள்.

"போதும் உன் பார்வை. உனக்காக நான் படும்பாடெல்லாம் வீணாகிவிட்டது. உன்னுடைய துரதிருஷ்டம்தான் என்னையும் பிடித்து ஆட்டுகிறது. கிராமபோன் கம்பெனியில் கால் வைத்த உடனே என் அம்மாதிரி கலாட்டா செய்யவேண்டும்? அது ஊர் முற்றும் பரவி நீ மகா கொடியவள் என்ற பெயரல்லவோ உண்டாகிவிட்டது. இனிமேல் என்ன செய்வது" என்று மணி ஆத்திரத்துடன் கேட்டான்.

ஜீவாவுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பொறுமைக்குமுன் எல்லாம் பஸ்மமாகி, அதுதான் முன்னால் தெரிந்தது. கைகேயி போல் தடதடவென்று உள்ளேபோய் தடாரென்று கட்டிலில் விழுந்துவிட்டாள்.

மேற்கொண்டு ஒருவாரம் சென்றுவிட்டது. தற்போது சுரேந்திரனும் ஒரு தனி வீட்டில் தன் தாயார், தங்கை முதலியவர்களோடு சந்தோஷமாக வாழ்க்கை நடத்த வாரம்பித்து விட்டான். சினிமா உத்திகைக்காகச் செல்லப் புறப்படும் சமயம் அவனுக்கு ஒரு கடிதம் வந்தது. சுரேந்திரன் அதை உடைத்துப் படித்தான். அவன் கண்களையே அவன் நம்பவில்லை. தேகம் நிலையில் நிற்காது தவித்தது. ஆகாயமும் பூமியும் சுழல்வதுபோல் தோன்றியது. உடனே சற்றுச் சமாளித்துக்கொண்டு மீண்டும் அதைப் படித்துப் பார்த்தான். அது வருமாறு:—

"சுரேந்திரா! நீ சாமான்ய ஓர் ஏழை சுரேந்திரனாக நினைக்காமல் இந்திரனாகவே எண்ணித் தலைத் திமிர்கொண்டு துள்ளுவதெல்லாம் இன்னும் சொல்ப காலத்திற்குத்தான். தெரியுமா! நீ ஏதோ புரட்டிவிடலாமென்று எண்ணுவதெல்லாம் கனவுக் கோட்டைதான். ஒவ்வொரு நிமிஷமும் உனக்கு ஆபத்து நிழல்போல் உன்னைத் தொடர்ந்து வருவதை நீ அறியவில்லை. நீ நல்ல வேளையாக ஸினிமாவில் நடிக்காமல் விலகிக்கொள்ளப் போகிறாயா! அல்லது உன்னையே நீ மடித்துக்கொள்ளப் போகிறாயா? இனிதான் உன் புத்திசாலித்தனத்தைப் பார்க்கவேண்டும்.

188025
சென்னை 600 003




# கிருஷ்ணன் தூது

*

இதோடு வருகிறான்

## நவீன தெனாலிராமன்

பிரபல நடிக நக்ஷத்திரங்கள், உயர்ந்த ஹாஸ்ய மணிகள்
நடிக்கும் படங்களிவை

**வெளிவரும் நன்னாளை எதிர்பாருங்கள்!**

டைரக்ஷன்:
**ஆர். பிரகாஷ்**

ஸ்டுடியோ:
**மோஷன் பிக்சர்ஸ்**

---

விவரங்களுக்கு:

போன்:
86006

**இராஜகோபால டாக்கிஸ்**
**27,** லாயட்ஸ் ரோட், ராயப்பேட்டை,
மதராஸ்.

தந்தி:
'தூது'

"JAGANMOHINI" **Vol. XV No. 8** Regd. No. M. 2210




தலை

வலிக்கு

# Headaches

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்




## அம்ருதாஞ்சனை

## உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

**அம்ருதாஞ்சன் லிமிடெட்.,**

சென்னை கல்கத்தா பம்பாய்


Printed & Published by V. M. Parthasarathy
at "Jaganmohini" Press, 26, Car St. Triplicane, Madras.